தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

அடிமை வாழ்வு எத்தனை நாள்?

—●—

மைமூடி உறங்குகின்ற விழிமலர்க!
இளைஞர்தம் உணர்வெழுக! எழுக தோள்கள்!
மை சுமையாய் அற்றைநாள் சுமந்த புகழ்
நினைத்திடுக! சூடேற்றிக் கொள்க நெஞ்சு!
மையழிக்க இற்றைநாள் வரும்பகையை
ண்ணிடுக! செந்தமிழ்த்தாய் நலம்போ மாயின்
மைகின்ற அடிமைவாழ் வெத்தனைநாள்?
ர்த்திடுக, தமிழுரிமை காத்தற் கென்றே!

சித்திரை-தி. பி. 1995.

ரூ0 50 காசு

தொல்காப்பியர் கழகம், தஞ்சாவூர்.

திருவள்ளுவர் ஆண்டு நாட்காட்டி—1995.

CONNE… 18 A… 1964 … MADRAS

கிழமை :	தை				
ஞாயிறு		6	13	20	27
திங்கள்		7	14	21	28
செவ்வாய்	1	8	15	22	29
அறிவன்	2	9	16	23	30
வியாழன்	3	10	17	24	
வெள்ளி	4	11	18	25	
காரி	5	12	19	26	

கிழமை :	மாசி				
ஞாயிறு		4	11	18	25
திங்கள்		5	12	19	26
செவ்வாய்		6	13	20	27
அறிவன்		7	14	21	28
வியாழன்	1	8	15	22	29
வெள்ளி	2	9	16	23	30
காரி	3	10	17	24	

கிழமை :	பங்…னி				
ஞாயிறு	30	2	[illegible]	16	23
திங்கள்		3	[illegible]	17	24
செவ்வாய்		4	[illegible]	18	25
அறிவன்		5	[illegible]	19	26
வியாழன்		6	[illegible]	20	27
வெள்ளி		7	[illegible]	21	28
காரி	1	8	[illegible]	22	29

கிழமை :	சித்திரை				
ஞாயிறு		7	14	21	28
திங்கள்	1	8	15	22	29
செவ்வாய்	2	9	16	23	30
அறிவன்	3	10	17	24	31
வியாழன்	4	11	18	25	
வெள்ளி	5	12	19	26	
காரி	6	13	20	27	

கிழமை :	வைகாசி				
ஞாயிறு		4	11	18	25
திங்கள்		5	12	19	26
செவ்வாய்		6	13	20	27
அறிவன்		7	14	21	28
வியாழன்	1	8	15	22	29
வெள்ளி	2	9	16	23	30
காரி	3	10	17	24	31

கிழமை :	ஆனி				
ஞாயிறு	1	8	15	22	29
திங்கள்	2	9	16	23	30
செவ்வாய்	3	10	17	24	31
அறிவன்	4	11	18	25	32
வியாழன்	5	12	19	26	
வெள்ளி	6	13	20	27	
காரி	7	14	21	28	

கிழமை :	ஆ…				
ஞாயிறு		4	[illegible]	18	25
திங்கள்		5	[illegible]	19	26
செவ்வாய்		6	[illegible]	20	27
அறிவன்		7	[illegible]	21	28
வியாழன்	1	8	[illegible]	22	29
வெள்ளி	2	9	[illegible]	23	30
காரி	3	10	[illegible]	24	31

கிழமை :	ஆவணி				
ஞாயிறு	1	8	15	22	29
திங்கள்	2	9	16	23	30
செவ்வாய்	3	10	17	24	31
அறிவன்	4	11	18	25	32
வியாழன்	5	12	19	26	
வெள்ளி	6	13	20	27	
காரி	7	14	21	28	

கிழமை :	புரட்டாசி				
ஞாயிறு		4	11	18	25
திங்கள்		5	12	19	26
செவ்வாய்		6	13	20	27
அறிவன்		7	14	21	28
வியாழன்	1	8	15	22	29
வெள்ளி	2	9	16	23	30
காரி	3	10	17	24	

கிழமை :	ஐப்பசி				
ஞாயிறு	30	2	9	16	23
திங்கள்		3	10	17	24
செவ்வாய்		4	11	18	25
அறிவன்		5	12	19	26
வியாழன்		6	13	20	27
வெள்ளி		7	14	21	28
காரி	1	8	15	22	29

கிழமை :	கார்த்திகை				
ஞாயிறு		7	14	21	28
திங்கள்	1	8	15	22	29
செவ்வாய்	2	9	16	23	
அறிவன்	3	10	17	24	
வியாழன்	4	11	18	25	
வெள்ளி	5	12	19	26	
காரி	6	13	20	27	

கிழமை :	மார்கழி				
ஞாயிறு		6	13	20	27
திங்கள்		7	14	21	28
செவ்வாய்	1	8	15	22	29
அறிவன்	2	9	16	23	
வியாழன்	3	10	17	24	
வெள்ளி	4	11	18	25	
காரி	5	12	19	26	



தென்மொழி

தனித் தமிழ் இலக்கியத் திங்களிதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 2. | சித்திரை—தி. பி. 1995 (1964 ஏப்ரல்) | ஓலை 3.

நிகரமை கொள்கையும் பேராயக் கட்சியும்!

— ◎ —

நிகரமை (*Socialism*) கொள்கையே, பேராயக்கட்சி (*Congress*) யின் தலையாய கொள்கை என்று, அக்கட்சியின் புது உறுப்பினரிலிருந்து தலைமையமைச்சர் நேரு வரை, கூட்டத்திற்குக் கூட்டம் பேசிப், பொதுமக்களின் மகிழ்ச்சிக்கும் வியப்புக்கும் உரியவர்களாகி வருகின்றனர். நிகரமை கொள்கையைப் பற்றிப் பேராயக்கட்சியினர் பேசுவது கொள்கையளவில் ஒப்பக் கூடியதாக இருப்பினும், கட்சி அமைப்பளவில் அரசியலில் நெடுங் கணக்குப் பயில்பவன்கூட ஒப்புக்கொள்ள மாட்டான். பேராயக் கட்சியினர் நிகரமை கொள்கை பேசுவது - கறிக்கடைக்காரன் காந்தியடிகளின் கொல்லா அறத்தைப் பேசுவது போன்றது; கள்ள நாணயம் அச்சடிப்பான் கள்ளப் புழக்கத் தடுப்பைப் பற்றிப் பேசுவதைப் போன்றது; மது மயக்கத்தில் ஊறியிருப்பான் மதுவிலக்கைப் பற்றி உளறுவதைப் போன்றது.

நேருவும் காமராசரும் நிகரமை கொள்கைபற்றிப் பேசுகின்றனர்; நேருவும் காமராசருமே பேராயக் கட்சி அல்லர். கோடி கோடியாகப் பொருள்களை வங்கியிலும் கரவறைகளிலும் பதுக்கிப், புறத்தே கட்சிக் கொள்கைகளை வலிந்து பேசிக்கொண்டு திரிகின்ற கொள்ளையர்கள்

சிறப்பாசிரியர்: புலவ, பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்.
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்.
உரிமை, வெளியீடு: தாமரை, உலக முதல்வி.
அச்சகம்: மித்திரா, கடலூர்-2.

பலர் அக்கட்சியில் உள்ளனர். கட்சியின் நலனை முழுமையாகப் பயன் படுத்திக் கொண்டு,அதன்'கதர்ச்'சட்டைப்பையில் கள்ளமது வாணிகம் நடத்தி வருகின்ற இரண்டகமும் படிறும் கொண்டவர்கள் பலர் அக் கட்சியில் உள்ளனர். பொதுமக்களின் குருதியை அட்டை போல உறிஞ்சித் தம்முடைய பத்துப் பதினைந்து தலைமுறையினரும் படுத்துக் கொண்டு உண்ணும் நிலையில்,கருப்பு வாணிகத்தில் செல்வத்தை மலை போல் குவித்திருப்பார் பலர் அக்கட்சியில் உள்ளனர். அவரெல்லாரும் காமராசரின் இனிய புன்னகையிலும், உயர்ந்த நடையிலும், நேருவின் நேரிய கொள்கையிலும் சீரிய ஒழுக்கத்திலும் தம்மை மறைத்துக் கொண்டு, நேரம் வாய்க்கும்பொழுது மக்கள் தம் குரல்வளைகளில் கைகளை வைத்து நெரித்துக் கொண்டுதாம் உள்ளனர்; இவரை அக் கட்சியின் தலைவர்களுக்கும் தெரியும்; ஆனால் தேர்தலுக்குப் பயன்படு கின்ற அத்தகையாரின் சட்டைப் பைகளில் உள்ள கற்றைத் தாள்களின் சிலிர்சிலிர்ப்பில் பேராயக் கட்சியின் தலைவர்கள் மெய்ம்மறந்துவிடு கின்றனர். பேராயக் கட்சியின் உயர்ந்த கொள்கைகள் சிலவற்றிற்கு அத்தகையாரின் இருள் மண்டிய நெஞ்சங்களே நஞ்சாகித் தீங்கு விளைக்கின்றன என்பதை அவர்களும் அறிவர். எனினும் அவர்களை அடக்குதற்கு இங்குள்ள காமராசரும் நேருவும், அவர்தம் கைகளில் வைத்துள்ள கை நூற்புக் கருவிகளும் பயனில்லை; குருசேவின் நெஞ்சுர மும், கென்னடியின் பட்டாளமும், சீனரின் கரவுள்ளமும், பிரித்தானிய ரின் முயற்சியும் வேண்டும். அத்தகைய கருவிகள் இவர்தம் கைகளில் என்று கிடைக்கின்றனவோ, அன்றுதான் இவர்கள் பேசிவருகின்ற சம உடைமை-நிகரமை கொள்கை செயல்படத் தொடங்கும். அதுவரை இவர்தம் வாய்ப்பந்தல்களாலும், பூவிலங்குகளாலும் அக் குமுகாய முதலைகளுக்கு ஆக்கமே அன்றி, இவர்களுக்கு ஓர் ஆணி அளவும் பயன் விளையாது என்பதை நிலா மண்டிலத்தில் உள்ள பாறைகளில் பொறித்து வைத்துக் கொள்ளலாம்!

இத் திங்கள் தொடக்கத்தில் திருச்சியில் நடந்த நிகரமை கொள்கை மாநாட்டில் திரு. ம. பொ. சிவஞானம் பேசும் பொழுது, "பேராயக் கட்சியினர் பேசி வருகின்ற நிகரமை கொள்கையை எவரும் ஏற்றுக் கொள்ளல் முடியாது. நெல் களஞ்சியத்துள் எலிகள் புகுந்தது போல், பேராயக் கட்சிக்குள் இன்று ஆணைப்பித்தர்களும், தந்நலக்காரர் களும் புகுந்து கொண்டுள்ளார்கள். இவர்களை அறவே விலக்கினால், இவர்கள் கூறி வருகின்ற சம உடைமைக் கொள்கை ஓரளவு வெற்றி பெறும் என்று கூறலாம்" என்று குறிப்பிட்டுள்ளதைப் பாராட்டுகின்றோம். திரு. சிவஞானத்திற்கு இத்தகைய சொல் துணிவு வந்ததைப் போல், திரு. காமராசருக்கும் செயல் துணிவு வருமானால் நிகரமை கொள்கை இந்தியாவில் ஓரளவு வெற்றி பெறலாம். இன்றேல் குருடர்கள் யானை கண்ட கதையாகத்தான் இவர்கள் கண்ட சம உடைமை இருக்கும்

என்பதில் துளியும் ஐயமில்லை. ஆனால் அங்கிலைக்குப் போதிய நடை முறைக் கூறுபாடு உளதா எனின், அதுவும் இல்லை. இதன் இயலாமையை திரு. காமராசரே வேறு வகையில் அண்மையில் ஒரு பொதுக் கூட்டத்தில் வெளிப்படுத்தியுள்ளார். "நான் என் முதலமைச்சர் வேலையில் இருந்துகொண்டு பொதுமக்களை நேரிடையாக அறிந்து, அவர்களின் உண்மைக் குறைபாட்டைத் தீர்க்க முடியாமற் போனதால்தான் வேலையைத் துறந்து வந்தேன். ஆனால் எனக்கு மேலும் பல பொறுப்புகளைக் கொடுத்து நான் செய்ய விரும்பிய நேரிடையான தொண்டுக்கே வழியில்லாமல் செய்து விட்டனர்" என்று வருந்தியுள்ளார். திரு, காமராசரின் கூற்றில் எவ்வளவு உண்மை உள்ளதோ, அவ்வளவு உண்மை பேராயக் கட்சியின் நிகரமை கொள்கையிலும் உள்ளது என்பதை உணர்ந்து கொள்ளலாம். ஆகையால் பேராயக் கட்சியின் சம உடைமைக் கொள்கை என்ற வான்கோழி ஆட்டத்தில் எவரும் மயங்கி விடல் வேண்டா என்று பொதுமக்களை எச்சரிக்கின்றோம்!

தாய்லாந்தில் தாய்மைப் புரட்சி!

ஏறத்தாழ ஈரிலக்கம் கற்பெருக்கமுடையதும் இரண்டரைக் கோடி மக்கள் தொகையுடையதுமான தாய்லாந்தில் அண்மையில் திருவாட்டி: கனையின் விவாத் என்ற பெண்மணியின் தலைமையில் வலிவான ஓர் இயக்கம் தொடங்கப் பெற்றுள்ளது. தாய்க்குலம் ஒரு நாட்டின் பண்பாட்டுக்கும் மக்கள் முன்னேற்றத்திற்கும் எவ்வளவில் பொறுப்புவாய்ந்ததாகும் என்பதை அங்குள்ள பெண்டிர் உணருமாறு அவ்வம்மையார் நன்கெடுத்துக் காட்டி வருகின்றார். உலகில் நடந்து வரும் அழகுப் போட்டிகள் பொதுமக்களின் உள்ளத்தைப் பல வகையில் கெடுத்து விடுவதாகவும், அப்போட்டி போன்ற பல போலி நாகரிகச் செயல்களில் ஈடுபடுவதன் காரணமாக இளம் பெண்கள் ஒழுக்கம் கெட்டுப் போவதாகவும், ஆரவார நடையுடை படைத்த பணக்கார ஆடவர் பலர் இத் தகைய கேளிக்கைக் கூத்துகளில் மிகுவாக ஈடுபட்டு, இளம் பெண்டிர்களைப் பொது வொழுக்கக் குறைபாட்டுக்கு உட்படுத்துவதாகவும் அம்மையார் முழங்கியுள்ளார். ஆடவர்தம் காமக் கிழத்தியராகவுள்ள பெண்டிர்கள் மக்களினத்தில் மிகவும் இழிந்தவரென்றும், இத்தகைய ஒழுக்கக் கேடர்களைச் சட்டமிட்டுத் தடுக்கவேண்டுமென்றும், அதற்கு அரசினர் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்றும் வலிந்த உணர்வோடு அவர் மேலும் பலவாறு இடித்துரைத்துள்ளார். இவ்வியக்கத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் சேர்ந்து பாடுபட்டு வருகின்றனர்; அரசினரும் துணை நிற்கின்றனர். தாய்க்குல ஒழுக்க மேம்பாடுகளுக்குத் தாய்மார்களே முன்வந்து பாடுபடும் இவ்வியக்கம் பயனுள்ள குமுகாயச்

சீர்திருத்தங்களைச் செய்யும் என்று நம்புதற்கான அடிப்படைகள் காணப் படுகின்றன.

போலிப் புனைவுகளிலும், நாகரிக ஆரவாரங்களிலும் ஆடவரும் பெண்டிரும் காட்டி வருகின்ற ஈடுபாடு இக்கால் மிகவும் பெரிது. இவற்றில் அரசினரே அப்புன்மையாளர்க்குத் துணை நிற்கின்றனர் எனி னும் மிகையில்லை. பொது ஒழுங்கு எந்த நாட்டில் சீர்கேடுறுகின்றதோ அந்த நாடு, எத்தகைய செல்வ வளமும் கல்விப் பெருக்கமும் கொண் டிருப்பினும் உலக உருண்டையில் அஃது ஒரு கேடான பகுதியே! பெண்டிர்தம் ஒழுக்கக் கேட்டிற்கு முற்றிலும் ஆடவரே பொறுப்பு! அவரைத் தூண்டுவிப்பதும், பல்வகை இழிந்த செயல்களுக்கு ஆளாக்கு வதும் ஆடவரே! நம் நாட்டில் இக்கால் இத்தகைய பொது ஒழுக்கத் திற்குப் பல நாளிகைகளும் துணையாக இருக்கின்றன. திரைப்படங்கள் என்ற பெயரால் நிகழ்ந்து வரும் இழிசுவைக் காம ஈடுபாடுகளால் செல் வரும், அரசுத் துறையில் பொறுப்பு வாய்ந்தார் சிலரும், பொதுமக்களும் எவ்வகையில் இழிகின்றனர் என்பதை இங்கெடுத்தெழுதுவது மிகை! அறிவியல் வளர்ச்சியில் வானையும் எட்டிவிட்டதாகத் தருக்கிக் கூறும் மாந்த இனம் பண்பாட்டில் விலங்குக்கும்கீழான படியில் இறங்கியுள்ளது என்று கூறி நாண வேண்டியுள்ளது. அழகுப் போட்டி என்றும், உடைப் புனைவு என்றும், நீச்சல் போட்டி என்றும் கல்லூரிப் பெண்களையும் இக் கால் அரசியல் துணைபெற்ற செல்வர் சிலர் ஈடுபடுத்தி வருகின்றனர். கயவர்களும், விலங்குணர்வு பெற்றவர்களும் கல்வித் தகுதியால் பொறுப்பான அரசியல் ஆணை நிலைகளைக் கைப்பற்றுவதாலேயே இத் தகைய ஒழுக்கக் கேடான நிகழ்ச்சிகள் துணிவாக நடத்தப்பெற்று வரு கின்றன. பொதுமக்களுடன் கலந்து பழகும் அரசியல் நிறுவனங்களில் உள்ளார் கல்வித் தகுதியுடன் ஒழுக்கத் தகுதியும் பெற்றவராக இருத் தல் வேண்டும் என்பது கட்டாயப் படுத்தப்பெறல் வேண்டும். ஒழுக்கச் சான்றிதழ் என்பது சட்ட மன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் பால் ஒரு நொடிப் பொழுதில் பெற்றுவிடுவதாக இருக்கின்றது.

ஒழுங்கு என்ற சொல்லே இக்கால இளைஞர்கள் தம் நாவிலும் நெஞ்சிலும் கசக்கக் கூடியதாக உள்ளது. அந்த அளவிற்கு அரசினர் பொது ஒழுங்கைக் காக்கத் தவறிவிட்டனர் என்றே சொல்லலாம். புறத்தே போலியான நிகழ்ச்சிகள் மிகுமாயின் அகத்தும் போலி உணர்வுகள் தலையெடுக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை. தாய்மைக் குல ஒழுக்கத்தில் தாய்லாந்து மட்டுமன்று தமிழ் நாடும் பிற நாடுகளும் தாழ்ந்தே உள்ளன என்பதைத் துணிவாகக் கூறுவோம். இவற்றிற் கெல்லாம் ஊதற்பை (*Baloon*) போலப் பருத்திருக்கும் நம் ஆரவார

நாகரிகமே அடிப்படையாக உள்ளது. தாய்லாந்தில் ஒழுக்கக் குரல் எழுப்பிய திருவாட்டி கஞ்ஞவின் விவாத்போலப் பலர் இங்கும் தோன்றல் வேண்டும். அங்கு அவர்தம் புரட்சிக் குரலுக்குத் துணைநிற்கும் அரசினர் போல் இங்கும் நல்லவர் நாம் எழுப்பும் உயர் குரலுக்கு அரசினரும் துணை நிற்க வேண்டும். வாழ்க்கை என்பது பருப் பொருள்களின் பெருக்கம் மட்டுமே அன்று! நுண் பொருள்களின் ஈடுபாடும் ஆகும். இவற்றை அரசினரும், மக்களும் உணர வேண்டும்! இனி வரப்போவது அத்தகைய நல்லுணர்வுக் காலமே!

— —

வீழ்கின்ற கல்விக்கூடங்கள்...!

அண்மையில் மதுரை மணிநகரப் பகுதியில் பள்ளிக்கூடக் கட்டிடம் இடிந்து விழுந்ததும், அதனால் முப்பத்தைந்து பச்சிளஞ் சிறுமிகள் உயிர்துறந்ததும், ஏறத்தாழ நூற்றிருபது குழந்தைகள் காயமுற்றதுமான செய்தி நமக்குத் தாங்கொணாத் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்நிகழ்ச்சியால் துன்புற்ற பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் நம் உள்ளமழுந்திய வருத்தமும் இரக்கமும் உரியவாகுக! கற்கச் சென்ற மலரா அரும்புகள் கட்டிடம் வீழ்ந்து மாள்வது எளிதான செய்தியன்று. இசைவில் லாத கட்டிடத்தில் இரண்டாண்டுகளாகப் பள்ளி நடந்து வந்ததும், அதைப்பற்றி நகராண்மைக் கழகக் கட்டிடத்துறை மேலாளர்களோ, கல்வித்துறை நெறியாளர்களோ போதிய கவனம் எடுத்துக்கொள்ளாமலிருந்ததும், வருந்தற்குரியதும், நாணத் தகுந்ததுமான உண்மைகள்!

வினாத்தாள்கள் அடிக்கடி வெளியாவதும், சீருடை இலவச உணவு என்னும் பெயரால் நடக்கின்ற கொள்ளைகளும், ஒழுங்கற்ற கல்வி முறைகளும், பாடத்திட்டங்களும் கல்வித்துறையில் எத்தகைய பொறுப்பற்ற வேலைகள் நடைபெற்று வருகின்றன என்பதையே புலப்படுத்துகின்றன கல்வி விரிவுக்கும் ஆக்கத்துக்கும் எத்துணை விழிப்போடு திட்டங்கள் போடப்படுகின்றனவோ, அத்துணை விழிப்போடு அவை செயல் படுத்தப்படுகின்றனவா என்று கண்காணிப்பதே கல்வி மேலாளர்தம் முதல் வேலையாக இருத்தல் வேண்டும். இல்லெனின் இசைவில்லாத கட்டிடங்கள் எழும்பும்; அவை சில நாட்களிருந்து பின் விழும்; முறையில்லாத வகுப்புகள் தேர்ச்சியில்லாத ஆசிரியர்களால் நடத்தப்பெறும்; உணவுப் பொருள்கள் களவு போகும்; வினாத்தாள்கள் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ, வெளிவந்து கொண்டிருக்கும்; பள்ளிகளில் போலிச் சான்றிதழ்கள் தரப்படும்; உயர்நிலைப் பள்ளித் தேர்ச்சிச் சான்றிதழ்கள் மாநிலக் கல்விச் செயலகத்திலேயே திருத்தப்

பெறும்; இன்னும் பல கோளாறுகள் தவருமல் நடைபெற்று வரும்! அதுவரை தமிழகக் கல்வித்துறை ஓரளவு சிறந்தது என்று தில்லியில் பேசப்படுவதும், அதனுல் தமிழக முதல்வர் களுக்கு உச்சி குளிர்வதும் அரசியல் சார்ந்த போலிப் பெருமை களே!

பள்ளிக்கூடக் கட்டிடங்கள் இரண்டு மூன்று மாடிகளாக உயர்ந்தும், பெருஞ் செலவை விழுங்கக்கூடியனவாகவும் இருத்தல் வேண்டும் என்பது தேவையில்லாத வீண் முயற்சி அடித் தளம் மட்டுமே திண்ணியதாக அமைந்து, நல்ல உறுதியான பக்கச் சுவர்கள் எழுப்பப்பெற்று, மேலே கூரைகள் வேய்ந்த பள்ளிக்கூடங்களே நம் நாட்டின் வெப்பநிலைக்கு ஏற்றவை. உயர்ந்து விரிந்த மரங்களின் நிழலிலேயே அவற்றை எழுப்ப லாம். கல்வி, கட்டிடங்களின் சிறப்பைப் பொறுத்ததன்று தாகூரின் நூற்றுண்டு விழாக்களையும், விவேகானந்தரின் சமய விழாக்களையும் நாகரிக ஆரவாரத்துடன் கொண்டாடும் இவ்வர சினர், அவர்தாம் கல்வித்துறையில் கூறிப்போந்த கருத்து களுக்கு மதிப்பளிக்காத காரணம் என்னை? அரசினர் தம் கொள்கைகளுக்கு முன்னேடியாகஉள்ள காந்தியடிகள் தாமும், கல்விக் கூடங்கள் உயர்ந்த கட்டிடங்களாக விருப்பதையும், அவற்றிற்குச் செலவிடப்பெறும் பெரும் பொருளையும் மிகுவாகக் கண்டித்துள்ளார். அரசினர்க்கு எதிலும் கொள்கைகள் என்பதே இல்லை. நடைமுறைப் போக்குகளும், அவ்வப்பொழுது அமைச்ச ராக உள்ளவர்தம் மனப்போக்குகளுமே அவர் கொள்கைகளாக இருக்கும்வரை இத்தகைய இடர்ப்பாடுகள் இருந்தே தீரும். ◯

திருவள்ளுவர் திருநாள் விழா

பரிசுப் போட்டிகள்

வருகிற வைகாசித் திங்களில், உலகப் பொதுமறையாம் திருக்குறளை நமக்கருளிய தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருநாள் விழாவைக் கொண்டாடச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் முடிவு செய்துள்ளது. அதையொட்டிக் கட்டுரைப் போட்டியும் புத்துரை விளக்கப் போட்டியும் நடைபெறும். கட்டுரைப் போட்டிக்கு முறையே உருபா. 100, 75, 50, பரிசு வழங்கப்பெறும். புத்துரை விளக்கப் போட்டிக்குக் குறள் ஒன்றுக்கு உரு. 10 மேனி பரிசளிக்கப்பெறும். போட்டிக்குரிய தலைப்புகளையும் மற்ற விளக்கங்களையும் 'செயலாளர். திருவள்ளு வர் திருநாள் விழா' 1/40 பிராட்வே, சென்னை – 1. என்ற முகவரிக்கு எழுதிப் பெறவும்.

திருத்தம்: 'நொச்சிப் போர்' பாட்டில் 119 ஆம் அடியில் 'முதல்வர்கள்' என்பதை 'முதல்வர்கல்' என்று திருத்திப் படிக்க.

நொச்சிப் போர்

(மாணவர்க்கு அழைப்பு)

ஏறெடுத்த தோளும் இளமைக் கனல்மூள
வீறெடுத்த நெஞ்சும், விளைவெடுத்த நற்றுடிப்பும்,
பொங்குகடல் போலப் புடைத்தெழூஉம் ஒற்றுமையும்,
கங்குகரை யற்ற கனவு நினைவுகளும்,
வாய்த்த தொருபருவம் கல்வி வளர்பருவம்!
காய்த்துக் கனிகின்ற கற்பனைகள் வாழ்பருவம்!
சீறிவரும் பாம்பைச் சிதைக்கின்ற வல்பருவம்!
ஏறிவரும் வெள்ளத்தில் எம்பிப்பாய் நல்பருவம்!
காற்றைக் குடித்துக் கடும்பசியை உள்ளடக்கிக்
கூற்றை எதிர்க்கும் குலையாத செம்பருவம்!
குத்திட்ட வேலைக் குடைந்தெறிந்து முன்புண்ணோ
டொத்திட்டுப் பார்க்கும் உரஞ்சான்ற வான்பருவம்!
அப்பருவம் தன்னில் அடியெடுத்து வைத்திருக்கும்
ஒப்பரிய மாணவர்தம் உள்ளத்திற் கொன்றுரைப்பேன்!

“இற்றைத் தமிழர்க் கிருக்கும் முதலெல்லாம்
அற்றைத் தமிழே! அதுதவிர மற்றவரின்
மானம், தனிப்பெருமை, மங்காத நல்லஉரம்,
வானைச் சிறிதாக்கும் வள்ளன்மை, வாய்மை,அறம்
நஞ்சுண் டமையும் நனிநா கரிகமெனும்
எஞ்சும் நலன்கள் இருந்த சுவடுமிலை!
இத்தமிழர்க் குள்ளே எழுச்சியுள்ள செந்தமிழர்
செத்தழிந்து போகாமல் ஆங்காங்கே சிற்றளவில்
வாழ்கின்ற காரணத்தால் செந்தமிழும் வாழ்ந்திருக்கும்!
வீழ்கின்ற வாழ்க்கை விடிவுற் றிருக்கையிலே,

துரை-மாணிக்கம்

கோடிக் குலம்படைப்பார்; பல்சமயக் கூறமைப்பார்;
ஓடிப் பொருள்திரட்டி உண்டுடுத்தி வாழ்வதுவே
மெத்தச் சிறப்பென்பார்; மேலான வாழ்வென்பார்;
பத்துப் பொருளிருக்கும் பன்னூறு நூலிருந்தும்,
ஒன்றும் உணர்ந்தறியார்; ஒண்பெருமை தாமுணரார்;
குன்றும் பொருளுக்குக் குன்றளவு வீண்முயல்வார்;
ஈதல் அறியார்; இளகு முளமறியார்;
காதல் அறியார்; கருத்தைத் தெளிந்தறியார்;
பேசும் மொழியறியார்; பேராண்மை பெற்றறியார்;
வீசுகின்ற காசுக்குக் காதம் விரைந்துருள்வார்.
உண்ணும் பொருளும் உணர்ந்துண்ணார்; ஓர்நொடியும்
எண்ணும் திறனில்லார்; எண்ணியுரை செய்வார்தம்
மெய்ப்பொருளும் தேரார்; மிடிபட்டுங் கண்டுணரார்;
பொய்ப்பொருளே வாழ்வென்று போலிக் குடும்பமைப்பார்!
முற்றாத காயுண்பார்; மூழ்கிக் குளித்தெழூஉம்
வற்றாத ஆற்றின் கரையில்நீர் வார்த்தெழுவார்!
ஆளும் அரசறியார்; ஆள்வார்தம் கால்பிடிப்பார்;
நாளுந் துயர்ப்படுவார்; நாயடிமை செய்திடுவார்;
பெண்மைச் சிறப்புணரார்; ஆண்மைப் பெருமையிலார்;
எண்மைப் பொருளா எடுத்து விளக்கிடினும்,
தன்னுணர்வு மூண்டுவரார்; தாழ்வெண்ணம் மாற்றுகிலார்;
என்ன அவர்க்குரைப்பேன் ஏதவர்க்கு விண்டிடுவேன்?''
என்றிவ்வா றெண்ணி இடர்ப்படுக்கும் வேளையிலே
ஒன்றென் உளம்படுக்கும் வாழ்க்கைக் குரம்விளைக்கும்!

மாணவரை எண்ணியே உள்ளம் மலர்ந்துய்வேன்!
தூணவரே செந்தமிழ்க்கு! நம்மின் துயர்போக்கும்,
மாமருந்தாம்! நந்தமிழர் வாழ்வின் ஒளிவிளக்காம்!
பூ,மரு,வேர் கட்டிப் புனைந்ததொரு பூக்கதம்பம்!
முத்தமிழில் பாட்டாவார்; மூவரசில் பாண்டியராம்!
புத்துணர்வும் வல்லறிவும் ஒன்றும் புறக்கூத்து!
மாணவரின் கைகளெழின் மாமலையைத் தூளாக்கும்!
மாணவர்தம் உள்ளாற்றல் மாகடலைத் தூருவிக்கும்!
சோற்றுக்குக் கல்வியெனில் தூதூ அதைவிரும்பார்!
மாற்றவர்க்கு வல்லடிமை செய்ய மனமேவார்!

அன்னவரின் ஆற்றல் அழிவழிக்கும் பேராற்றல்!
என்ன வரினும் எதிர்க்கும் தனியாற்றல்!
அவ்வாற்றல் யானறிவேன்; ஆதலினால் ஈதுரைப்பேன்!
செவ்வி இளமையொடு நல்லறிவு சேர்ந்துவிடில்
எவ்வினையும் எள்முனையாம்; என்பதனால் அன்னவரை
ஒவ்வி மனம்வைக்க வேண்டி உளவுரைப்பேன்:

இவ்வுலகம் கூறும் 'பொதுமை' எனுங்கருத்தோ
செவ்வகையாய் அன்றே தமிழர் செறித்ததுதான்;
அற்றைத் தமிழ்நூல் அறியார் புதிதென்பார்!
இற்றைக் குலகரசே ஏற்றதெனச் சொன்னாலும்
அன்ன நிலையை உலகம் அடைதற்கு
முன்னருயர் தன்மை முளைக்கும் நிலைவேண்டும்!
அந்நிலைக்கோ உள்ளம் அறிவோ டிணைந்துயர்ந்து,
செந்நிலையைப் பற்றிச் செருக்குநிலை தாமழிந்து,
பற்றற்று நின்று பரந்துயரப் பாரின்கண்
உற்ற உயிரெல்லாம் ஒன்றென் றுணர்வுபெறல்
வேண்டும்! அதற்கிந்த நீணிலத்தின் சான்றோர்கள்
தூண்டும் வழியில் துவளா தெழல்வேண்டும்.
அந்த நிலைக்கே அடிநிலையிங் கேதென்றால்
சொந்த நிலத்தடிமை முன்னர் தொலைப்பதுவே!
சொந்தநிலம் என்ப தெதுவென்னில் சொல்பவற்றை
அந்த மொழியில் அறிவார்முன் வாழ்ந்தநிலம்!
இங்ஙன் மொழிவழியே இவ்வுலகம் நின்றிடிலோ
எங்ஙன் 'உலகரசென்' றிங்கியம்பல் சாலுமெனின்,
தம்நலத்தைக் காப்பார் பிறர்நலமும் தாங்காப்பார்!
தம்நலத்தைக் காவார் பிறர்நலத்தைக் காப்பமென்றல்
கண்ணறையன் கண்ணறைக்குக் காட்டுவது போலாகும்!
பெண்ணையோர் பெண்ணுக்குப் பேசிமணஞ் செய்வதொக்கும்!
தன்னைத்தான் பேணிப்பின் தற்கொண்டார் பேணி,யதன்
பின்னைத்தன் தேயம் அதன்பின்இப் பேருலகம்
என்ற படிமுறையில் அல்லால் இருநொடிக்குள்
மன்ற உலகரசு மன்னிவிடல் சாலாது!
தம்நிலத்தைக் காப்பார் பிறர்நிலமும் காவாரோ?
தம்நிலத்தைக் காப்பதென்னின் தாய்மொழியைக் காத்திடுக!

நந்தாய் மொழிநலத்தை நாமெடுத்துக் கூறலென்னின்
இந்தவுரை போதா(து); எழுதுந்தாள் காணாதே!
ஒன்றென்று தோன்றி இரண்டாய் உயர்ந்தோங்கி
மன்றிருந்து மூன்றாக மூவர் மடியிருந்து
நாலறமா விண்டுயர்ந்தே ஐந்தாய்த் திணைவிரிந்தே
ஆலகலம் பல்கிப்பா வாறாகி ஏழிசையாய்
எட்டுச் சுவைவிரித்தே, ஒன்பான் தனித்தன்மை[1]
பெற்றுப் பெறுவார்க்குப் [2]பத்துப் பயன்நல்கும்
எந்தமிழைக் காவார் எவரோ அவர்தமிழ்த்தாய்
தந்தையர்க்கே தாம்பிறவார்; ஆக, தவறிழைப்பார்!

ஆகையினால் மாணவர்காள்! அன்னை மொழிபயில்வீர்!
சாகையிலும் செந்தமிழ்க்குச் சாதல் பெருமைதரும்!
முன்னை வடமொழியால் மூண்ட அழிவுபல!
பின்னைப் பலமொழியும் பிற்காலத் தாங்கிலமும்,
தண்டமிழின் மேன்மை, தனித்தன்மை தாங்குலைக்கக்
கண்டும் அமர்ந்திருந்தோம்; இப்பொழுதும் கல்லானோம்!
ஈண்டோ தமிழ்குலைக்க இந்திமொழி வந்ததுகாண்!
வேண்டாத் தமிழ்படிக்க யாரும் விரும்புகிலார்!
என்னே இழிவிங்(கு) எதன்பொருட்டோ மெய்யடிமை?
பன்னூறு வல்லாண்டாய்ப் பட்டதுயர் போதாவோ?
மானம் உளதோ? மறமுளதோ? மாற்றார்பால்
கூனற் பிழைப்பும் குடிப்பிறப்போ? ஊறிவரும்
செங்குருதி தோய்ந்ததோ? செந்தமிழர் மாய்ந்தனரோ?
பொங்குணர்வுத் தீயும் பொறிப்பொறியாய்ச் சாம்பினதோ?
'வந்த படைநோனாள்; வாயின் முலைபறித்து
வெந்திறல் எஃகம் இறைக்கொளீஇ முந்தை
முதல்வர்கள் தான்காட்டி மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போருக்'கென் றேபடித்த

(42-ம் பக்கம் பார்க்க)

1. **ஒன்பான் தனித்தன்மை:** தாய்மை, தூய்மை, கன்னிமை, முன்மை, நுண்மை, திண்மை, ஒண்மை, அகன்மை, செம்மை.

2. **பத்துப் பயன்:** அறிவு, அறம், அன்பு, அடக்கம் ஒழுக்கம், நட்பு, செல்வம், மெய்யுணர்வு, இன்பம், புகழ்

2-ஆம் தொடர்.

ஆந்தைப் பாட்டு.

ம. இலெ. தங்கப்பா.

உடைகின்றது நெஞ்சம்-வழிந் (து)
உருள்கின்றது கண்ணீர்
அடல்கொண்டது துன்பம்-மெல
அழிகின்றது உயிரே!

தீதே நலமென்பார்-அடு
தீயே குளிர்வென்பார்
கோதே உயர்வென்பார்-அவர்
கோணற் கழுகின்றேன்.

இருளே துணைக்கொள்வார்-புல்
இழுக்கே இசைஎன்பார்
மருளே தெளிவென்பார்-அவர்
மடமைக் குயிர்நொந்தேன்

ஒளிகாணிடில் வெகுள்வார்-அதை
ஒழிப்போமென வருவார்
அளிகாணிடில் அடுவார்-அவர்
அடலுக் குளம் நைந்தேன்.

பொருளே குறியாவார்-ஐம்
பொறியால்துயர் மிகுவார்
அருளாமுணர் வறுவார்-நினைந் (து)
அவலம் மிகு கின்றேன்.

நன்மை கெட மகிழ்வார்-கெடு
நடலை தமைப் புகழ்வார்
புன்மைச் செயல் புரிவார்-அவர்
புரைகண் டழிகின்றேன்

உணர்வின் மகிழ் வறியார்-உயர்
உளத்தின் நலம் பேணார்
தணிவில் நசைமிகுவார்-அவர்
தவற்றுக் குழல்கின்றேன்

பொய்மை தனில் வளர்வார்-பல
போலிக்குளம் விற்பார்
மெய்மைஎனில் வெருள்வார்-அவர்
மிகைகண் டுயிர் சோர்ந்தேன்.

அறமும் நினைகில்லார்-உயர்
அன்பும் உளத்தில்லார்
மறமே புரிகின்றார்-உயிர்
மாழ்கித் தவிக்கின்றேன்.

புன்மை எனநினையார்-பிறர்
பொருமுந் துயர் காணார்
தம்மின் நலம்கொள்வார்-இழி
தகவுக் குளம் நொந்தேன்.

துன்ப விசைப் பாட்டுத் தொடங்கி முடியளவும்
முன்பறியாப் பேருணர்வில் மூழ்கிற்றே என்னுள்ளம்.
யானும் நிலவுலகில் இத்தனை நாள் வாழ்ந்துவிட்டேன்
ஆனா அவலக் குரல்கள் பல அறிவேன்;
வன்னெஞ்சர் தீச்செயலால் வாழும் வகையிழந்து
நன்னெஞ்சர் ஏங்கும் நலிவின் குரலறிவேன்;
காதலெனப் பொய்யுரைத்துக் காமுற்றோன் கைநெகிழ்ப்ப
மாதொருத்தி வன்துயரால் மாழ்கும் குரலறிவேன்;
உண்மைக் குழைக்குமகன் ஒன்றிவந்து பின்கெடுப்பார்
புன்மைக் குடைந்து புலம்பும் குரலறிவேன்;
சின்னஞ் சிறுமகவு செந்தழலுள் வெந்துபட
அன்னை உளம்நின் றரற்றும் குரலறிவேன்;
கூழும் கிடையாமல் கொல்குளிரில் வாடிடுவார்
ஏழையர்தம் நெஞ்சத் தெழும்பும் புலம்பறிவேன்;
காட்டின் பசுங்கிளியைக் கண்ணில்லார் பூட்டிவிடக்
கூட்டிற் கிடந்ததுதான் கூவும் குரலறிவேன்;
இன்ன பலவறிந்தும், இன்றைக் கிடுகாட்டில்
முன்னியஇவ் வாந்தைபால் மூண்ட துயர்க்குரல் போல்
அத்தனையும் என்னை அசைத்ததில்லை; உள்ளுணர்வைத்
தைத்துருவி நெஞ்சைத் தடுமாறச் செய்ததில்லை!
வைத்த விழிநிலைத்தேன்; வன்மை உடல் சிலிர்த்தேன்
மத்தொன்று நெஞ்சுள் சுழல்வதுபோல் மாழ்குற்றேன்.

என்ன துயரமோ? யாது மனக் கைப்போ?
என்ன இடும்பைதான் ஏற்றதுவோ ஆந்தைப்புள்?
சொல்லடங்காப் பேரவலம் தொக்கதுவப் பாட்டென்ருல்
வல்லாங்கு புள்ளுந்தன் வாழ்வில் பெருந்துயரம்
பட்டிருத்தல் தான்வேண்டும்; பாரில் கடுந்துயரம்
பட்டவர்கள் தாமலரோ பாட்டில் உயர்கின்ருர்!
என்றுநான் எண்ணினேன்; எண்ணவும் ஏதேதோ
துன்றும் பழநினைவாற் சூழுண்டேன் சின்னேரம்
பின்னரந்த ஆந்தைபாற் பேசி அதன்துயரம்
என்னென் றறிய எழுந்த தொருவேட்கை
தாழ்ந்த கிளையருகு தான்சென்று நின்றபடி
ஆந்தையினை நோக்கலுற்றேன்; ஆர்ந்த நிலவொளியில்
பூந்திரையின் ஊடே பொலிவுபெறும் ஓவியம்போல்
ஆந்தையது தோன்றிற்றே! ஆர்ந்தேன் அதன்அழகை.
ஆந்தை சிறிதும் அழகற்ற தென்றுரைப்பார்;
மாந்தர் உரைதனக்கு மாருக நான் கண்டேன்!
எற்றென் றிரும்பூதங் கெய்தினேன்; ஆந்தைபாற்
பற்றுமிக லானேன்; பதைப்போடு வாய்திறந்தேன்:-
''கங்குற் சிறுபுள்ளே, காட்டின் அரசுடையாய்,
இங்குநீ துன்பம் எதிரொலிக்கும் பாட்டுரைத்தாய்
கவ்வும் துயரிதற்குக் காரணமும் வேண்டுமன்ருே?
எவ்வதுவோ அத்துயரம்? எத்தகைத்தோ உன்வாழ்க்கை ?
சொல்லாயா? உன்கதையைச் சொல்லி உளம்ஆற்றிச்
செல்லாயா? நானும் சிறிது பொழுதுன்றன்
துன்பில் எனது துயரிணைப்பேன்'' என்றுரைத்தேன்
வன்பறவை சற்றேனும் வாயைத் திறக்கவில்லை!
''என்னிடத்திற் பேசாயா?'' என்றேன் மறுபடியும்.
மின்னும் இடிபோலும் ஆந்தை முழங்கிற்றே:-
''சீச்சீ,பேர் மாந்தனே, சென்றுவிடு, சென்றுவிடு
பேச்சென்ன உன்னிடத்தில்?'' என்று முனிந்ததுவால்.
ஏனே வெகுள்கின்ற திப்பறவை? தீங்கிதனுக்(கு)
யானேதுஞ் செய்திலனே என்று திகைத்தபடி
''ஆந்தை அரசீ, அடியேன் பிழைபொறுப்பாய்,
கூர்ந்த கடுஞ்சினத்தின் கூர்ம்ம் எனைத்தாக்க
என்ன தவறுடையேன்? யாதுபிழை செய்துவிட்டேன்
சொன்னல் உணர்வேன்யான்; சொல்லாயோ?''
என்றுரைத்தேன்.
ஆந்தை தலைநிமிர்ந்து பேசத் தொடங்கிற்றே:-
''மாந்தர் குலத்தெழுந்தாய் மாந்தனே, நீயிதுகேள்:

மன்னும் உயிர்வகையுள் மாந்தர் சிறப்பென்பார்;
பன்னுமுயர் நாகரிகப் பாங்கில் உயர்வென்பார்;
ஆயினுமென் பட்டறிவால் ஆய்ந்தபடி நான்சொல்வேன்;
தீயோர்காண் மாந்தர்; செயலால் மிகஇழிஞர்.
ஆதலால் மாந்தர்பால் அன்பெனக்குச் சற்றுமில்லை;
போதிநீ, என்னைப் புறம்விடுக'' என்றதுவால்.
''ஒன்றே பொறுப்பாய், உயர்புள்ளே, உன்கருத்தை
நன்றே விளக்கிவிடு; நாங்கள் குறையுணர்வோம்.''
என்றேன்; அவ் வாந்தை எடுத்த திடிக்குரலை:-
''நன்றுநன்று மாந்தனே! நானுரைக்க வேண்டுமோ?
அன்னை இயற்கை அளித்த பெருவாழ்வைப்
பின்னலுறுஞ் சிக்கல் பிளவுகளுக் குட்படுத்தீர்;
வையப் பொதுவாம் வளமார் நிலப்பரப்பை
ஐயோ எனக்குனக்கென் றூர்ப்பரித்துப் போர்புரிவீர்;
எல்லாம் உரிமையும் ஏற்கப் பிறப்பெடுத்தும்
வல்ல வழக்காடி வாழ்உரிமை கெட்டழிந்தீர்.
நாடென்றும், ஊரென்றும் ''நான்விளைத்த சொத்''தென்றும்
கேடு விளைத்துக் கெடுகின்றீர்; சீச்சீ!
உயர்வோ இதுதான்? உரைத்தால் சினமோ?
மயர்வறுக்க இன்னும் வகுத்துரைப்பேன் கேளாய்நீ.
எங்கள் பறவை இனத்தில் விலங்கினத்தில்
உங்கள் அடிமைநிலை உண்டோ விளம்பிடுவாய்?
பேராவல் மிக்குப் பிரித்துண்டு வாழ்ந்தீரே
ஓராவ லேனும் ஒழுங்காய் நிறைந்ததுவா?
ஏழை, பணியாள், இரப்போன், கொடுங்கள்வன்
கீழாம் நிலையிவற்றைக் கேட்டதுண்டோ எம்மினத்தில்?
எங்கள் உலகில் எளியார் வலியார்முன்
தங்கிழமை கெட்டவர்போல் தாள்தாங்கி வாழ்தலில்லை.
பல்லார் உழைத்தழியப் பாடறியார் வாழ்வுயரும்.
பொல்லாக் கொடுமையெலாம் புள்ளினத்திற் கேட்டதில்லை.
போலிக் கடவுளர்க்குப் பொன்பொருள்கள் போய்க்குவியச்
சாலையிலே பட்டினியால் சாதல் எமக்கில்லை.
மாந்தர் இயல்பே மலக்குப்! பெரும்பொய்மை!
'தான்' 'தான்'எனும் தருக்குத்! தன்னலஞ்சார் பூசல்!
பிறனைக் கெடுக்கின்ற பேய்மை! அடடா,
அறனென் றுரைசெய்வீர், அஞ்சாக் கொலைபுரிவீர்
நன்றென் றுரைப்பீர் நலிப்பீர் பிறவுயிரை!
கன்றென்று கொஞ்சிக் கறவைப்பால் நீர்கொள்வீர்
ஒற்றுமை பேசிடுவீர் உட்சாதி நூறுரைப்பீர்
உற்றார்நாம் என்றுரைப்பீர் ஓயாமற் போர்புரிவீர்

எம்மிடத்தும் தீமை இருப்பனதாம்; ஆனல்யாம்
உம்மைப்போற் சட்டம் உருவாக்கி மீறுகிலோம்!
என்னேனும் சட்டங்கள் என்னேகாண் உம்முறைநூல்!
மன்னுலகில் மற்றவர்க்குத் தீதின்றி வாழ்வதற்குச்
சட்டம் வகுத்தால் சரிஎன் றமைவுறலாம்;
குட்டை உலகின் குருட்டுத் தனத்துக்குச்
சட்டமென்று வேலியிட்டீர்; சாற்றுமந்தச் சட்டத்தால்
எட்டிநீர் தொட்டதென்ன? எட்டுணையும் மண்ணுலகில்
தீமை குறைந்ததுவா? தேங்கும் இழிதகைமை
ஆமைபோ லேனும் அகன்றதுவா? இல்லை!
அறமன்றின் தீர்ப்பால் அணுவேனும் குற்றம்
குறைவாகி வன்கண்மைக் கூர்மை மழுங்கிற்ரு?
'எல்லாரும் ஒப்புவதை எற்றற்க' என்பதன்றி
நல்லோர் உயர்வினைகள் போற்றுதற்குச் சட்டமுண்டா?
ஆணுக் கொருசட்டம்; பெண்ணுக் கொருசட்டம்;
ஏழைக் கொருசட்டம்; செல்வர்க் கொருசட்டம்;
மன்னர்க் கொருசட்டம்; மக்கட் கொருசட்டம்;
என்ன புரட்டுகள்! எத்தனைவீண் நூற்குவியல்!
ஏழை உணவின்றி ஏதோ திருடிவிடின்
பாழுங் கொடுஞ்சிறையில் பன்னுள் நலிகின்ருன்.
வாணிகத்தின் உட்கரந்து கொள்ளையிட்ட வண்கோடி
கோணியிலே கட்டுபவன் குன்றேறி வாழ்கின்ருன்?
எல்லாக் கொலைத்தொழிலும் எண்ணக் கொடிதலவோ?
அல்லாது போமோ அறமன்றம் செய் கொலைதான்?
கள்வர் எனச்சிலர்க்குக் காப்பிடுவீர்; அன்னவர்தம்
பிள்ளைகுட்டி பெண்டிர் பிழைக்க வழிசெய்யீர்!
விண்புள்ளைக் கான்விலங்கை வெஞ்சிறையுட் போட்டடைத்துக்
கண்காட்சி என்பீர்! களிப்பீர் பிறர்துயரில்!
என்ன முறைகளிவை? யார்வகுத்த தும்மறங்காண்?
பன்னும் பகுத்தறிவுப் பாங்கெல்லாம் ஈதாமோ?
மெய்ம்மை இதுவென்றும், பொய்மை இதுவென்றும்,
உய்தி இதுவென்றும், ஒற்கம் இதுவென்றும்,
சற்றும் உணர்கிலீர்; சாய்ந்து முடிகின்றீர்!
முற்றும் பயனில்லா மூங்கையராப் போய்விட்டீர்!
வேழத்தைக் கையூழ்த்து வீழ்துகளைப் பற்றுதல்போல்
பாழும் பணத்தைப் பரவிக் குறிக்கொண்டீர்!
அந்தோ,உம் தீமை அறைதற்கும் நாநடுங்கும்!
இந்தக் குலத்தில் எழுந்தவன்நீ! போ,போ,போ!
உன்னோ டுரையாடி நின்றதுவும் என்பிழையே''
என்றறைந்த தாந்தை இறும்பூ திறும்பூதே! (தொடரும்)

நோய் வகை

தொழு நோய்

மாந்தரால் மிகவும் அருவருக்கப்படுவதும் அஞ்சப்படுவதும் இத் தொழுநோய் ஆகும். இதன் கடுமையும் கொடுமையும் பற்றி இதனைப் பெருநோய் என்றும் அழைப்பர். பெரும்பாலார் இதனை ஒரு தொற்று நோய் என்றே கருதிக் கொண்டிருப்பினும் உண்மையில் இதனைத் தொற்றும் வகை தொற்றா வகை என இரண்டாகப் பாகுபடுத்தலாம். 'ஆன்சன்' என்னும் ஒரு வகை நுண்புழுக்களால் (Hansen Bacillus) இந்நோய் உண்டாகின்றது. இந்நுண் புழுக்கள் தொற்றிக் கொள்ளும் தன்மை வாய்ந்தவை. தொற்றும் வகை நோய் உடையவர்தம் உடலில் இந் நுண் புழுக்கள் வெளிப்படுவதை ஆராய்ச்சியாளர் காட்டுவர். தொற்றாவகையில் இப்புழுக்கள் இருப்பதனை அவ்வாறு காட்ட வியலாது.

தொற்றும் வகைத் தொழு நோய் மிகவும் கொடியது. தொடக்க நிலையில் நோய் ஏற்பட்டிருத்தலைக் கண்டு கொள்வதே கடினமாகும். நல்ல ஞாயிற்றொளியில் ஆய்ந்து பார்த்தால்தான் நோயின் அடையாளங்களைக் கண்டு கொள்ளல் முடியும். தொடக்கத்தில் உடலில் ஆங்காங்குச் சில இடங்களில் தோல் சிவந்து பளபளப்புடன், எண்ணெய் பட்ட இடம்போல் காணப்படும். ஆனால் இச் சிவந்த இடங்களை வெட்டமிட்டுக் காட்டல் இயலாது. நாளடைவில் இச் சிவப்பு உடல் முழுவதும் பரவும். கண்ணிலும் மூக்கிலும் குரல் வளையிலும் இந்நோய் மிகுதியாகத் தாக்குகின்றது. காது, தோளின் வெளிப்புறம், முழங்கை, சிறு விரல், மார்பகக் காம்புகள், எருவாய்ப் பகுதி இவற்றில் சிறுசிறு முடிச்சுகள் தோன்றும். இந் நோயால் கண் பார்வை மங்குதலும் சில வேளை முற்றிலும் மறைந்து போதலும் உண்டு. மூக்கினுள் இடைச்சுவரில் புண் உண்டாகித் தொளை ஏற்படும். இதனால் மூக்கிலிருந்து தீநாற்றம் ஏற்படுதல் கூடும். குரல் வளையில் நோய் ஏற்படுவதால் மூச்சு விடுவதற்குத் தொல்லையாகும். இதனை மாற்றுவதற்குத் தொண்டையில் மூச்சுக் குழலில் அறுவை செய்தல் வேண்டும். சிலர்க்கு இந்நோயால் நெறிக் கட்டிகளும் காய்ச்சலும் ஏற்படல் கூடும். இக் காய்ச்சல் வரின் இரவில் உடல் காயும். உடலில் செந்நிறத் தடிப்புகள் தோன்றும். உடல்வலியும் ஏற்படும். இந் நோய் கண்டவர்க்கு அறுவை செய்தாலோ, அன்றி மகப்பேறு நேர்ந்தாலோ, மருந்துகளை அவர்கள் அளவுக்கு மிகுதியாக உட்கொண்டு விடுவதாலோ இக் காய்ச்சல் ஏற்படுகின்றது.

இந் நோயைத் தடுப்பதற்கும், நீக்குதற்கும் பல வழிகள் கையாளப் பெறுகின்றன. மரவெட்டி எண்ணெய் (Chalmoorgu oil) அல்லது அந்த எண்ணெயின் உறைபு(ester)களைத் தோலின் அடியிலும், நோய் பற்றியிருக்கும் தோலிலும் ஊசியின் மூலம் செலுத்துதல் வேண்டும். சல்போன் (Sulphone) குளிகைகளையும் உட்கொள்ளலாம். ஆனால் இக் குளிகைகள் குருதிச்சோகையை உண்டுபண்ணுமாகலான் அதைமாற்றுதற்கு இரும்புச் சாரம், 'பீ' உயிர்ச் சாரம் உடைய மருந்துகளையும் உடன் உட்கொண்டு வருதல் வேண்டும். சல்போன் மருந்து களால் நோய் நீங்கித் தோல் நன்னிலை யடைந்தது போல் தோன்றும். ஆயினும் நுண் புழுக்கள் (Bacillus) அழியப் பல மாதங்கள் ஆகும். ஆதலின் ஆற்றல் முறைகளை நிறுத்தி விடாமல் அடிக்கடி ஆய்ந்து பார்த்து நோயின் அறிகுறிகள் முற்றிலும் அகலும் வரை மருந்து உட்கொண்டுவரல் வேண்டும்.

தொற்றுத வகை:

இந்நோய் நரம்புகளையே சென்று தாக்குகின்றது. உடல் முழுவதும் படைகள் தோன்றுகின்றன. சிலருக்கு இப் படை தோலை ஒட்டியும் சிலருக்குத் தடிப்பாகவும் இருக்கும். இப் படைகள் உடலின் மற்றப் பகுதிகளைவிட, நிறம் மங்கித் தோன்றும். உணர்ச்சி குறைவாக இருக்கும். முதலில் வெப்ப உணர்ச்சியும், பின் தொடும் உணர்ச்சியும், பின்னர் வலி அறியும் உணர்ச்சியும் படிப்படியாகக் குறையும். படை தோன்றிய இடங்களில் மயிர் உதிர்ந்துபோம். உணர்ச்சி நரம்பு இயங்காமையால் தோலில் புண்கள் ஏற்படுகின்றன. சூடான பொருட்களைத் தொட்டால் உடனே கொப்புளங்கள் உண்டாகி விடுகின்றன. இவ்வகை நோய்க்கும் மரவெட்டி எண்ணெயே சாலச் சிறந்ததாகும் படைகளின்மேல், மரவெட்டி எண்ணெய் உறைபுகளை ஊசியின் மூலம் செலுத்துதல் வேண்டும்.

தொற்றும் வகைநோய் முற்றினால் உடலின் வலுக்குறைந்து விடும். கண் குருடாகும். குரல்வளை கெடுவதால் பேசவும் இயலாமற் போகும். தொற்றுவகையும் கொடிதே. இதனால் உறுப்புகள் பழுதாகும். கை, கால் விரல்கள் முடக்கம் ஏற்பட்டுப் பயனற்றுப் போம். தொடக்கத்திலேயே கவனித்தால் இந் நிலைமை ஏற்படாமற் செய்து கொள்ளலாம்.

இந் நோய் பரவவிடாமல் மிகவும் முன்னெச்சரிக்கையா யிருத்தல் வேண்டும். பிற தொற்று நோய்களைப்போல் இஃது எளிதில் தொற்றி விடுவதில்லை. ஆதலின் முதலிலேயே விழிப் பாக இருந்தால் பரவாமல் தடுத்தல் எளிதாகும். பத்தாண்டு கட்குட்பட்ட சிறுவர்க்கே இந்நோய் எளிதில் தொற்றுகின்றது. ஆயினும் தொழுநோய் உள்ள பெண்ணிற்குக் குழந்தை பிறந்த

வுடன் அதனைத் தாயினிடமிருந்து பிரித்து வளர்த்து வந்தால் நோய் தொற்ருது. நோயாளியுடன் நெருங்கிப் பழகுவதாலேயே இந் நோய் தொற்றிக் கொள்கின்றது. ஆயினும் உடல் தூய்மை முறைகளைக் கையாண்டு மிக விழிப்பாக இருந்தால் தொற்றிக் கொள்ளாமல் தடுக்கலாம். பல ஆண்டு நோய் கொண்டோருடன் பழகினும் தொற்றுப் பெருமலிருக்க, இத் தூய்மை முறைகளைக் கையாண்டால் போதும்.

இந் நோய் வழிவழியாக வருவது என்று பலர் தவருகக் கருதிக் கொண்டிருக்கின்றனர். உண்மை அதுவன்று. ஒரே குடும்பத்தில் பலருக்கு இந்நோய் ஏற்படுவதும், பெற்ரோரிட மிருந்து பிள்ளைகட்கு வருவதும், இந்நோய் வழிவழி நோயோ என ஐயுற இடந்தரும். ஆயினும், வழிவழிக் காரணங்களால் அன்று,ஒருகுடும்பத்தினர் தமக்குள் நெருங்கிப் பழகுவதாலேயே இவ்வாறு நோய் தொற்றிக் கொள்கின்றது. ஆதலின் இந் நோயாளிகளை எப்பொழுதும் தனி உடை, உணவு, உறையுள் அளித்துத் தனியாக வைத்திருத்தலே நல்லது.

உயிர்ச் சாரங்கள், மாழை(உலோக)ச் சத்துகள் (Minerals) அடங்கிய நல்ல ஊட்ட உணவுகளை முறையாக உண்டுவரின் இந் நோய் எளிதில் பற்ருது. ஆயினும் நோய் தொடங்கிய பின் எவ்வளவுதான் நல்லுணவு உட்கொள்ளினும் நோயை நீக்க அது பயன்படாது. *

நன்றி!

1) மலேயா தமிழன்பர்கள் திருவாளர்: **பாலகிருட்டிணன்** திருவாட்டி: **கண்ணம்மா** அவர்தம் திருமண நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கென உருபா 6-63 விடுத்தருளினர். அவர்தம் மனையறம் சிறக்க வாழ்த்துகின்ரேம்.

2) தென்மொழி வளர்ச்சிக்கென பெங்களூர் தென்மொழிப் பித்தன் **ந. முனிசாமி** அவர்கள் உருபா ஐந்து விடுத்துதவினர் செந்தமிழ் புரக்கும் இந் நந்தமிழ் அன்பர்க்கு எம் நெஞ்சு கெழுவிய நன்றி!

3) ஒவ்வொரு மாதமும் தம் சிறிய வருவாயிலும் ஒரு பகுதியைத் திருவாளர் **மகிபை-பாவிசைக்கோ** அவர்கள் தென்மொழி வளர்ச்சிக்கெனத் தவருது விடுத்து வருகின்றனர். இம்மாத அன்பளிப்பாக உருபா பத்தும், இவர்தம் நண்பர் திரு. **சொக்கலிங்கம்** என்பார்தம் அன்பளிப்பாக உருபா பத்தும் ஆக இருபது உருபா விடுத்துள்ளனர். இத் தமிழடியார்தம் தமிழ்க் காதற்கு உளஞ்சான்ற நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக!

மொழி காக்க எழுவதில் வியப்பென்ன?

—: தமிழவேள் :—

ஒருதாயின் மக்கள்நாம் ஒன்றுனோம் எனத்தமிழர்
ஒற்றுமையாய் வெகுண்டார்க்கும் வியப்புதனைக் காணேடி!
வருகின்ற திடரந்தத் தாய்க்கென்னில் ஒற்றுமையாய்
வெகுண்டார்த்தல் இயல்பன்றோ? வியப்பென்ன? என்தோழி!

கட்சியினால் சமயத்தால் பொய்க்குலத்தால் பலநூறாய்க்
குலைந்திருந்தோர் கூடிவிட்ட கோலத்தைக் காணேடி!
கட்சியுடன் குலமெல்லாம் கெடுதற்கே துணையென்னும்
கருத்தறிந்து விட்டவர்கள் கூடாரோ? என்தோழி!

தாமுண்டு தொழிலுண்டு பிறவற்றின் நினைவேதும்
தமக்கில்லை என்றிருந்தோர் எழுவதனைக் காணேடி!
தாமுண்டு தொழிலுண்டென் றிங்கிருந்தால் தங்கள்மொழி
தாழ்மையுறும் என்றுணர்ந்தார் எழுகிலரோ? என்தோழி!

பாலொழுகத் தேனொழுகப் பேசுகிறார் நல்லவரே!
பகையல்லர் எனவிருந்தோர் படைசேரல் காணேடி!
பாலொழுகத் தேனொழுகப் பேசியதை நம்பித்தான்
பாழானோம் எனத்தெளிந்து சேராரோ? என்தோழி!

நுழைந்திட்ட மொழியெல்லாம் வரவேற்றோர் இந்தியினை
நுழையவிடோம் என்றின்று நிற்பதனைக் காணேடி!
நுழைந்திட்ட மொழிகளினால் தம்மொழிக்கு நேர்ந்ததுயர்
நன்கறிந்தார் இன்றெதிர்த்து நிற்காரோ? என்தோழி!

புலவர்களும் தலைவர்களும் முதியவரும் மாணவரும்
போர்க்கோலம் பூண்டவராய்ப் புறப்படுதல் காணேடி!
புலவர்களும் தலைவர்களும், வாழ்வளிக்கும் தமிழ்மொழிக்குப்
போந்ததுயர் களையப்போர் பூணாரோ? என்தோழி!

அன்னைமொழி தனைக்காக்க ஆண்களுடன் பெண்களுமாங்
கணியணியாய்த் திரண்டுள்ள அழகுதனைக் காணேடி!
அன்னைமொழி அழியின்தம் தனிக்கலையும் பண்பாடும்
அழியுமென எல்லோரும் திரளாரோ? என்தோழி!

'எங்கள்மொழி எங்களுயிர்' என்றிசைத்துப் பெரும்பகையின்
எதிர்நின்று வெற்றிகொள வரும்அணியைக் காணேடி!
'எங்கள்மொழி எங்களுயிர்' என்றிசைத்து வருகின்ற
எழில்அணியில் நாமும்போய்ச் சேரேமோ? என்தோழி!

ஆங்கில மொழியாக்கம்

All worthy deeds he did!

"Bangled shoulders" he embraced;
Fragrant flowers of the grove he wore;
The cool sandal paste adorned his form;
He extirpated enemies
And extolled his friends.
Neither pliant before the mighty;
Nor overbearing towards the weak,
He knew no begging;
Nor uttered "No" to those who begged of him.
In a hall of kings he shone with fame.
Invading armies he confronted;
Retreating armies he pursued them not.
The swiftest horse he mounted;
The longest streets he drove along;
And the noblest tuskers he did ride.
He emptied many pots of wine (for guests)
And fed the hungry minstrels.
Ambiguous words he never chose.
All worthy deeds he did.
(Now that he is dead, alas)
What difference will it make
If he be buried or be burnt?
Do they matter to this man of fame?

- PURAM, 239.

செய்ப வெல்லாம் செய்தனன்!

தொடியுடைய தோள் மணந்தனன்;
கடிகாவிற் பூச் சூடினன்;
தண் கமழும் சாந்து நீவினன்;
செற் றோரை வழிதபுத் தனன்;
நட் டோரை உயர்புகூறினன்;
வலிய ரென வழி மொழியலன்;
மெலியரென மீக் கூறலன்;
பிறரைத் தான் இரப்பறியலன்;
இரந்தோர்க்கு மறுப்பறியலன்;
வேந்துடை அவையத் தோங்குபுகழ் தோற்றினன்;
வருபடை எதிர்தாங்கினன்;
பெயர் படை புறங் கண்டனன்;
கடும் பரிய மாக் கடவினன்;
நெடுந்தெருவில் தேர் வழங்கினன்;
ஓங் கியல களிறூர்ந்தனன்;
தீஞ்செறி தசும்பு தொலைச்சினன்;
பாணுவப்பப் பசிதீர்த்தனன்;
மயக்குடைய மொழிவிடுத்தனன்; ஆங்குச்
செய்ப வெல்லாம் செய்தனன் ஆகலின்
இடுக ஒன்றோ சுடுக ஒன்றோ
படுவழிப் படுக இப் புகழ் வெய்யோன் தலையே.

— புறநானூறு, 239.

மொழியாக்கம்: ம. இலெ. தங்கப்பா, எம். ஏ.

தென்மொழி, கடலூர்-2.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்	50 காசு.	60 காசு.	75 காசு.
ஆண்டுக்கட்டணம்.	6 உருபா.	7–25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்:

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

இலக்கணவியல் :

மார் (மான், மாள்)
ஈற்றுப் பெயர்ச் சொற்கள்

தொல்காப்பியனாரும் நன்னூலாரும் மார் வினைவிகுதிகளில் ஒன்று (தொல். சொல். 207; நான் 327) எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர். தொல்காப்பியனார் பெயர் வினைகளின் பொது விகுதிகளைக் குறிப்பிடும்பொழுது (சொல். 7) மார் விகுதியையும் சேர்த்துள்ளார். அதற்குத் தெய்வச் சிலையார் தந்தைமார், தாய்மார் என்னும் எடுத்துக்காட்டுகளையும் கொடுக்கின்றார் நன்னூலார். 'ரவ்வீற்றவும்..................பல்லோர் பெயரின் பகுதி யாகும்'–(நன். 278) எனக் கூறுவதற்கு ஏகர வீற்றில் "மார்" விகுதியும் அடங்கும் என உரையாசிரியர்கள் விளக்கம் தந்துள்ளனர். எனவே வினைகளே அன்றிப் பெயர்களும் மாரீற்றனவாய் அமைந்துள்ளன என்பது தெளிவு.

1) **விளக்க இலக்கணம்** (Descriptive Grammar)

1. **பன்மைக் குறியீடு** (plural marker)

தெய்வச்சிலையார் தந்தைமார், தாய்மார் என்பனவற்றைப் பலர் பால் சொற்களுக்கு எடுத்துக்காட்டாகத் தருகின்றனர்.

வித்துவான் மோ. இசரயேல், எம். ஏ.,
தமிழ் ஆய்வுத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

இவை பன்மைச் சொற்கள் என்பது தெளிவு. பொதுவாக ரகர இறுதி, உயர்திணைப் பன்மையைக் (rational plural) குறித்து நிற்கிறது. அங்ஙனமாயின் தந்தையார், தாயார் எனக் கூறின் சாலாதோ? ஏன் மகரத்தை இடையே சேர்த்தல் வேண்டும்? தந்தையார், தாயார் என்னும் சொற்கள் முதலில் பன்மையை உணர்த்திப் (plural), பின்னர் ஒருமையைக் குறிக்கும் உயர் சொற்கிளவி (honorific singular) ஆக வழங்கலாயின. இத்தகைய வழக்கினைத் தொல்காப்பியனாரே ஒப்புக்கொண்டுள்ளார்

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கின் ஆய உயர்சொற் கிளவி (சொல். 27)

எனவே பன்மையைக் குறிக்க வேறு ஒரு வடிவம் தேவைப் படவே, தந்தைமார், தாய்மார் என்னும் சொற்கள் அதனை நிறைவு செய்து நின்றன. இவ்வாறு வழங்கிய சொற்களில் சிலவற்றைக் கீழே காணலாம்.

	ஒருமை	பன்மை-பின்னர் உயர்சொற்கிளவி	பிற்காலப் பன்மை
1.	தந்தை	தந்தையார்	தந்தைமார்
2.	தாய்	தாயார்	தாய்மார்
3.	மாமன்	மாமனர்	மாமன்மார்
4.	அண்ணன்	அண்ணனர்	அண்ணன்மார்
5.	அரசன்	அரசர்	அரசன்மார்
6.	தம்பி	தம்பியர்	தம்பிமார்

முதல் இரண்டு வரிசையில் அமைந்துள்ளன பண்டைக் காலத்தில் ஒருமை:பன்மை முரண்பாட்டில் (Contrast) அமைந் துள்ளன. மூன்ருவது வரிசையில் பன்மையைக் குறித்த ரகரம் முற்றிலும் உயர்வைக் குறிக்கும் குறியீடாக வழங்கவே, பன்மையைக்காட்ட பிறிதோர் உருபனுகிய (morphene) மகரம் இடையே நுழைக்கப்பட்டது(infixed).

தந்தை + ம் + ஆர்
தாய் + ம் + ஆர்
மாமன் + ம் + ஆர்
அண்ணன் + ம் + ஆர்
அரசன் + ம் + ஆர்
தம்பி + ம் + ஆர்

இவற்றில் மகரம் பன்மைக் குறியீடு (plural marker); ஆர்- படர்க்கை பலர் பால் விகுதி (third person rational plural suffix). இம் மகரம் இவண் ஒருமைச் சொல்லுடன் இணைந்து வருவது கவனித்தற்குரியது. இம்மகரம் முதன் முதல் உடம்படு மெய்(glide-hiatus preventer) ஆகத் தோன்றிப் பின்னர் பன்மைப் பொருளைப் பெற்றிருக்கலாம் என்று கருதுவதில் தவறில்லை.

மகரம் பன்மை குறித்து வழங்குதலை இடப்பெயர்களிலும் காணலாகும்.

1. யான் — யாம்
2. நான் — நாம்
3. தான் — தாம்
4 நின் — நும்

2.. வெற்றுருபு (empty morph)

மகரம் வெற்றுருபாக, அதாவது, யாதொரு பொருளும் அற்றதாக வழங்கும் இடங்களும் உண்டு. எடுத்துக்காட்டாக,

எண்மர், பெருமான், கோமன், தொண்டைமான், சேரமான், அதிகமான் என்னும் சொற்களில் மகரம் பொருளற்றதாகவே அமைந்துள்ளது.

பெரு + ஆன் > பெருவான் > பெருமான்
கோ + ஆன் > கோவான் > கோமான்
சேர + ஆன் > சேரவான் > சேரமான்
எண் + அர் > எண்வர் > எண்மர்
தொண்டை + ஆன் > தொண்டைவான் > தொண்டைமான்

இவற்றில் மகரம் வகரத்தின் இடத்தைப் பெற்றுள்ளது. வகர மகரம் மாறி வழங்குதல் மொழியின் பிற பல இடங்களிலும் காணல் இயலும்

கொள்வார் — கொண்மார்
நால்வர் — நான்மர்
போல்வர் — போன்மர்

பெருமான், கோமான் என்ற சொற்களில் மகரம் வெற்றுருபாக அமைந்து உள்ளது எனக் கொள்ளுதல் சாலப் பொருந்தும்.

இங்கு மகரம் பன்மையைக் குறிக்கவில்லை. மேலும் பெரும், கரும் எனச்சில சொற்களில் மகரத்தை அடிச்சொல்லின் (stem) ஈற்றின் பகுதி (part) ஆகக் கொள்ளக் கூடுமாயினும் கோ, சேரன், எண், தொண்டை ஆகிய பலவற்றோடு இணைத்துக் காணல் இயலாது. ஆகவே மேற்காட்டப்பட்ட எடுத்துக்காட்டு களில் மகரம் வெற்றுருபாகக் கொள்ளப்படுதலே ஒழுங்கு முறைக்கும் (regularity) எளிமைக்கும் (simplicity) ஏற்றதாக உள்ளது; ஆன்–ஆண்பால் ஒருமை விகுதி.

2. **வரலாற்று இலக்கணம்** Historical Grammar)

மான், மாள், மார் போன்ற விகுதிகள் (suffixes) முறையே மகன், மகள், மகார், ஆகிய சொற்கள் காலப் போக்கில் திரிந்து தோன்றிய வடிவங்கள் ஆகும் என்று கொள்ளுதல் பொருத்த முடைத்து. உயர்திரு. கே. என். சிவராசர் அவர்களும் 'மான்' விகுதி ''மகன்'' என்ற சொல்லின் குறுகிய வடிவம் (shortened form) எனத் தெளிவுபடுத்தி உள்ளனர் [1]. மகன், மகள், மகார் என்னும் தனிச்சொற்கள், காலப்போக்கில் சில இடங்களில் தம் தனி உரிமை இழந்து விகுதிகளாகச் செயலாற்றத் தொடங்கி இருக்கலாம். இக்கருத்து ஒப்புக் கொள்ளப் படுமேயானல்,

1. K. N. Swaraja Pillai The Chronology of Early Old Tamil Appendix V pp 229-30.

பெரு — மான் < பெரு + மகன்
சேர — மான் < சேர + மகன்
கோ — மான் < கோ + மகன்
வேண் — மாள் < வேள் + மகள்
குரு — மார் < குரு + மகார்
தேவி — மார் < தேவி + மகார்

எனப் பிரித்தறிதல் கூடும்.

மகன், மகள், மகார் என்னும் சொற்கள் மக என்னும் அஃறிணைப் பெயரோடு உயர்திணைப்பால் விகுதிகளை இணைக்கத் தோன்றுவனவாகும். மக, குழவி என்னும் பொருளது (தொல். மர. 23)மக, குழவி என்பன அஃறிணைப்பெயர்களே (சொல் 56)

மக + (அ)ன் > மகன் > மான்
மக + (அ)ள் > மகள் > மாள்
மக + (அர் > மகார் > மார்

மக என்னும் வேர்ச் சொல்லினின்று தோன்றிய சொற்கள் [2]. மான், மாள், மார் எனத் திரிந்து விகுதியாகப் பயன்படுங்கால் ன், ள், ர் முறையே ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய வற்றைக் குறித்து நிற்கின்றன. மக தன் வடிவும், பொருளும் திரிந்து, மாரில் ரகரம் காலப்போக்கில் உயர்வைக் (honorific) குறிக்கவே, பன்மை மை உருபனும் பிறவற்றில் ணகரமும் ளகரமும் முறையே ஆண்பாலையும் பெண்பாலையும் குறிக்கவே வெற்றுருபனும் நிற்கின்றது. எனவே மகரம் பன்மையில் பன்மைக் குறியாயும், ஒருமையில் பொருளற்றதாயும் உள்ளது என்பது தெளிவு. இதன்படி மகரத்தை வகர உடம்படு மெய் யின் திரிபு என்று கொள்ளாமல், மகன், மகள், மகார் ஆகிய சொற்கள் திரிந்து தோன்றும் விகுதிகளின் உறுப்பாகக்கொள்ள வேண்டி உள்ளது.

மேற்காட்டப்பட்டது போன்று சொற்கள் (words) திரிந்து இடை நிலைகள் (particles) ஆதல் மொழி வழக்கில் பல இடங் களிலும் காணற்குரித்தாய் உள்ளது.

---

2. Dr. Kamil Zvelebil More About-Adverbs and Adjectues in Tamil. Tamil Culture Vol. X 1961.

டாக்டர் கமில் சுவலபில் அவர்கள் மகன், மகள், மக்கள் என்பவற்றை முறையே மக் + அன்; மக் + அள்; மக் + கள் எனப் பிரித்தல் சிறப்புடைத்து எனக் கருது கின்றனர்.

எ–டு கரு + மெய் > கருமை
ஆகு + இல் > ஆகில் > ஆல்
இரும் + பொன் > இரும்பு
அவன் > அன்

ஆங்கிலத்திலும் இவ்வாறு சொற்கள் திரிதலைக் காட்டலாம்.

man + like > manly
friend + shape > friendship
king + doom > kingdoom

சொற்கள் இவ்வாறு வடிவம் திரிந்து வழங்குவது இன்றையப் பேச்சு வழக்கிலும் காணலாம்.

எ–டு மகன் > மவன் > மான் (> மோன் > மோ.)
மகள் > மவள் > மாள் (> மோள் > மோ.)
மருமகன் > மருமவன் > மருமான் (> மருமோன் > மருமோ.)

வேண்மான், வேண்மாள், வேண்மார் என்னும் சொற்களை முறையே வேள் + மான் (மகன்), வேள் + மாள் (மகள்). வேள் + மார் (மகார்) எனப் பிரித்துக்காணல் இயலும். ஆயின், இலக்கண ஆசிரியர்கள் பெயர்ச் சொற்கு ''மார்'' விகுதியைக் குறிப்பிட்டிருந்தும் (நன்னூல் 278. உரை), ஏன் மான், மாள் என்னும் விகுதிகளைக் குறிப்பிட்டிலர்? அவர்கள் மான், மாள் என்பவற்றில் அமைந்துள்ள மகரத்தை உடம்படு மெய்யின் திரிபு அல்லது அடிச் சொல்லின் (stem) பிற்பகுதி (later part) எனக் கருதினர் போலும்.

எனவே, விளக்க இலக்கணப்படி, பெயர்ச்சொல் ஈரும் மாரின் மகரம் பன்மையைக் குறிப்பதென்றும், மான், மாள் என்னும் விகுதிகளின் மகரம் வெற்றுருபு என்றும், வரலாற்று இலக்கணப்படி மான், மாள், மார் என்பன முறையே மகன், மகள், மகார் என்பவற்றின் திரிந்த வடிவங்களே என்றும் இக் கட்டுரையின்கண் விளக்கப்பட்டுள்ளன. *

திருத்தம்.

பக்கம் 69. மேலிருந்து கீழ் 17–ஆம் வரி 'பொறிய' என்பதை 'பொரிய' என்று திருத்திப் படிக்க.

பண்பாட்டைக் காப்போம்!

புலவர். தி. நா. அறிவுஒளி.

தற்காப்பில்லாத உயரிய பண்பாடு, அப் பண்பாட்டை ஈன்ற நாட்டையும், மக்களையும், மொழியையும் அழித்துவிடக் கூடும். இதற்குத் தமிழக வரலாற்றினைக் காட்டிலும் நனிபொருந்திய சான்று வேறில்லை. வயலுக்கு வரப்பும், தோட்டத்துக்கு வேலியும், நீர் நிலைக்குக் கரையும், பெண்ணுக்குக் கற்பும், ஆணுக்கு ஒழுக்கமும் எத்துணை இன்றியமையாதனவோ, அத் துணை இன்றியமையாதன நல்ல பண்பாட்டுக்குக் காப்பும், மொழிக்கு நல்லிலக்கணமும்! இதனை மறப்பார் வரலாற்றில் அழிந்து படுவர். தமிழ்ப் பண்பாட்டைக் காக்க நற்றமிழர் மடி தற்று முன்வரும்போதே, அதனைப் புறக்கணிக்கவும் 'தன்னலப் புழுக்கள்' கூட்டம் ஒன்று நெளியக் காண்கிறோம்! பல துறைகளிலும் தமிழுக்கும் தமிழர்க்கும் தமிழ் நாட்டுக்கும் பகைவராகத் தமிழரிலேயே சில கூலிகள் இருந்து மறைமுக வெளிப்படைக் கேடுகளைச் செய்து வருகின்றனர். அந்த இரக்கத்திற்குரிய வரலாறு இனியேனும் மாற வேண்டும். இன்றேல் மாற்ற வேண்டும்! நடிக்க, பொய்க்க. இரண்டகம் செய்ய, மறைமுகமாகக் கெடுக்க, களவாட (பிறர் அறியாமலேயும்) மேடைப் புறங் கூற, சூழ்ச்சியாக வாழ, நாகரிகமாக ஏமாற்ற, கொல்லாமல் கொல்ல இந் நூற்றாண்டில் மக்கள் மிக மிகத் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். இதற்கு மாறான நல்ல துறைகளில் வேண்டிய அளவு பின்னேறி யிருக்கின்றனர். இவ்வுண்மையை ஏற்றுக் கொள்ளக் கசப்பாகத்தான் இருக்கும். அதற்காக உண்மையை ஒளிக்கலாமா? ஒளிக்கத்தான் முடியுமா? அது முறையா? இந்த நிலைகள் வளர்ந்தமைக்குக் காரணமே, அறிந்தோ அறியாமலோ தமிழ்ப் பண்பொழுக்கத்தைக் கை நழுவ விட்டதும், பிற பண்பை(?)த் தழுவ முற்பட்டுவிட்டதும்தாம் என்பதைத் தெள்ளிதின் அறிய வேண்டும்.

தமிழக ஒழுகலாற்றின் தனித்தன்மையைக் கெடுக்கும் எந்த ஒரு சிறு கூறையும் நான் ஏற்க முடியாது. அஃது எந் நாட்டினதாயினும் புறக்கணித்தற்குரியதே. இழிகாம மிக்கோன் தன்னையறியாமலே தன் நிலையினின்றுந் தாழ்ந்திழிந்து தடுமாறி, வீழ்ந்து பாழ்படுவதைப் போலப் பிற பண்பின் மாயக் காமத்தில் சிக்கி மடிபவரும் துயருற்று இழிவடைவர். நம்மருமைப் பண்பாட்டை நலிய வைத்து, ஆர்ப்பாட்டப் பண்பாட்டுக்கு வாழ்வளிக்கும் 'மன்பதைக் குற்றம்' இன்னே களைதற்குரியது. முரண்பட்ட வாழ்க்கைக்கு முன்னேற்றம் என்றும் முற்போக்கு என்றும் காலத்தோடு ஒட்டி ஒழுகல் என்றும் 'கவர்ச்சிப்பெயர்கள்' சூட்டி

ஏமாற்றுவதை நம்பி மக்கள் ஏமாறக்கூடாது என அறிவுறுத்த வேண்டிய உயிர்க்கடப்பாடு தமிழறிஞர்தம் தலையாய திருத்தொண்டாம். தமிழகத்துள்ள பழக்க வழக்க நம்பிக்கைகளுள் ஏதேனும் ஒன்று தமிழர் நலனுக்கு முட்டுக் கட்டையிடுவதாகவோ, தமிழையும் தமிழரையும் நலியச் செய்து வீழ்த்துவதாகவோ, முன்னேறத் தடையிடுவதாகவோ இருக்குமேயானால் அதனை முதன் முதலாக அந்நொடியே அழித்தொழித்துத் தொலைக்கவும் தயங்கலாகாது. அவ்வாறே தமிழகத்தின் நலனை—எழிலை—மாண்பை-ஏற்றத்தைத் – தனித் தன்மையை—விழுப்பச் செம்மையை-சால்பை—புகழை உருவாக்கக் கூடிய நல்லொழுக லாற்றைப், பண்பாட்டை எக்காரணம் பற்றியும் கை நழுவ விடக்கூடாது. பண்பையும் ஒழுக்கத்தையும் புகட்டாத படிப்பும், கலையும், உயர்வும் நமக்கு ஏன்? அத்தகு கல்வி நிலையங்கள் வேண்டவே வேண்டா. எல்லாரும் மடவராக இருந்து சான்றோராகத் திகழ முடியுமானால் மடமையே இருந்து போகட்டும்.

பிறமொழிப் பயிற்சி மிகுவது தமிழுக்கும் தமிழருக்கும் நன்மை செய்வதற்கு மாறாகத் தீமை செய்யத் தொடங்கி யிருக்கிறது கண்டு மிக வருந்துகிறேன். நாட்டியல்பைக் கெடுக்கும் பிறமொழிப் புலமையை விட முட்டாள் நிலையையே மேதகுநிலை எனப் போற்றலாம். பிற மொழிப் பயிற்சியும், ஆராய்ச்சியும் மிக வேண்டியதே. ஆயின், அவை நமக்கு ஊறு செய்வதாக அமைதலாகா. தமிழுக்கு இழுக்கும், நம் பண்பாட்டுக்கு அழிவும் செய்வதாக இருக்கக் கூடாது. இளம் மூளைகள் கிண்டலுக்கும் எள்ளலுக்கும் கொள் கலமாகி வருவது நாட்டுக்குப் பேரிழுக்கை யூட்டுவதாம் பொறுப்பற்ற போக்கு. ஒருவகைப் பித்து நிலைக்கிணங்கிய நிலையைச் சார்ந்த வெறிப்பு, எதனையும் பகடிசெய்து மறக்கும் சோர்வு இளைஞர் உள்ளங்களில் திணிந்து கிடக்கின்றன. இயற்கையின் அழகைமறைக்கும் மூடுபனிபோலப் போலிக் கற்பனை, போலி நாகரிகம், (நாகரிகமா அது??) போலிக் கால வண்ணப் பித்து, போலி நடையுடை, பயனில் பேச்சு, பண்பில் பழக்கங்கள் ஆகியவை இக்கால இளையோர் உள்ளத்து மூடுபனிகளாக மண்டிக் கிடக்கும் மாண்பில் நிலை மாறுதல் வேண்டும்; அவற்றை மாற்றுதற்குரிய மலர்ச்சிப் பணி வேண்டும்.

மேனாட்டு முறைக் கல்வியின் முறையற்ற கடைப்பிடிப்பும், இற்றைநாட் குழப்பக் கல்வி முறைச் சீர்கேடுகளும், நமக்குரிய தனியியல்பை உருவாக்கத் தவறிய குற்றமும் இனைய பண்பாட்டுச் சீர்கேடுகளுக்கு அடிப்படைக் கரணியம் என்பதை நாம் நன்குணரவேண்டும். இக்குற்றங்களை உடனே திருத்தியே தீரல் வேண்டும். இன்றேல் இனிய தமிழ்ப் பண்பும், தமிழக ஒழுகலாறும் சிதைந்து சீர்குலைந்து பாழ்பட்டுப் போகும்.

சன கன மன....!

சன கன மன என்று தொடங்கும் தாகூர் எழுதிய இந்தியா வின் நாட்டுப் பாடலைக் குழந்தைகள் கூட அறியும். இப்பாடலை இந்திய அரசினர் 1950-ஆம் ஆண்டு, சனவரி 24-ஆம் நாளே நாட்டுப் பாடலாகத் தேர்ந்தெடுத்தனர். இப்பாடல் 1911 திசம்பர் 27-இல் காளிக்கோட்டத்தில் (Calcutta) கூடிய இந்தியப் பேராயக் கட்சி மாநாட்டில்தான் முதன் முதலாகப் பாடப்பெற்றது. தாகூர் 'பாரத விதாதா' என்ற தலைப்பின்கீழ் எழுதிய ஐந்து பாடல்களில் ஒன்றே இப்பாடலாகும். அரசினர் நாட்டுப் பாடலாக இஃதொன்றை மட்டும் தெரிந்தெடுக்கவில்லை. பங்கிம் சந்திர சட்டர்சி எழுதிய 'வந்தே மாதரம்' என்ற பாட்டையும் இதற்கிணையாகத் தேர்ந்தெடுத்தனர். ஆனால் இப்பாடலே எல்லாராலும் விரும்பிப் பாடப்பெற்று வருகின்றது. இப்பாடலின் இசை மேனாட்டாரின் பல்லியம் (Banc) இயங்கும் இசைக்குப் பொருத்தமாக ஆக்கப் பெற்றுள்ளது.

உலகில் உள்ள 80 நாடுகளிலும் அவ்வந் நாட்டுப் பாடல்கள் பாடப் பெறுகின்றன. இவற்றுள் மிகச்சில நாடுகளே 19-ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே நாட்டுப் பாடல்களைப் பெற்றுள்ளன. பொதுவாகத் தாமாக எழுந்த உணர்வுப் பாடல் களையே எல்லா நாடுகளும் நாட்டுப் பாடல்களாகக் கொண்டுள் ளன. உலகில் உள்ள நாடடுப் பாடல்களில் பிரஞ்சு நாட்டின் நாட்டுப் பாடலே மிகவும் சிறந்ததாகக் கருதப் பெறுகின்றது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

எதையும் பிறரைப் பார்த்துப் பார்த்துப் 'போலச் செய்யும் பொறியகச்' செய்கை கொடிய அறியாமை நோய் என உணர் வாராக! நமக்கு இன்றியமையாது வேண்டியதைப் பெறுவதே சிறப்பு. 'இரந்துண்டு வாழ்வதே இல்லறம்' என இருப்பது இழிவினும் இழிவு! அஃது ஆண்மையற்ற பெட்டைத்தன்மையே நமக்கென உயிரினுஞ் சீரிய ஒழுகலாறும், கலையொழுக்க வள மும், பண்பும், ஒப்புரவும், சால்பும், அறமும், மரபும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பண்படுத்தப்பட்டும் வளர்க்கப் பட்டும் உருவாக்கப்பெற்றும், அமைந்திருக்கின்றனவே! அவற் றைப் போற்றிப் பேணுவதன்றோ தமிழருக்குப் பேராண்மை! செய்யத் தக்க இக்கடமையினின்றும் சென்ற தலைமுறை ஓரளவு தவறி விட்டாலும், நாமும் வருந் தலைமுறையினரும் இனைய தவறுகளைச் செய்யலாகாது. மலைப்பாம்பின் மடியில் புரண்டாட மான் குட்டி விரும்பாது. மாண்பு கெட்ட பண்பாடுகளை - பழக்க வழக்கங்களை-ஆற்றலை ஏற்க அறத்தமிழுள்ளம் இசை யாது; ஆம், இசையவே இசையாது. *

தமிழ்க் கொடி ஏற்றுக!

சொன்னலத்த தூய்தமிழைப் பழிவடக்கர்
தம்வலிவால் பொசுக்கக் கண்டும்
தன்னலத்தால் அவர்செயலைப் புரிந்துகொள
மனமின்றித் தனியாய் நின்றீர்!
தென்னகத்தீர்! இந்தியினுல் தமிழ்நாட்டில்
தமிழ்மாயும்! அதன்பின் நீங்கள்
என்னலத்தீர்? யாங்கொளிவீர்? இருப்பவெலாம்
மண்மூடிப் போகும் அன்றே!

வீங்குயர்தோள், பொங்குணர்வு, வேற்றலரைக்
கூறுசெயும் மேலாம் ஆற்றல்
தூங்குவதோ? கண்மூடித் துஞ்சியவோ?
தாய்தமிழ்தான் துயரால் நாளும்
ஏங்குவதோ? இறக்கமிலா இன்னிலையே
நிலைப்பதற்குப் பகைவர் காலை
வாங்குவதே நம்வேலை! வனைந்தெழுக
உணர்வோடு! தமிழ்த்தாய் நாடே!

மாறுபடு மனநிலைகள்; மாண்புமிகு
அரசியலில் காழ்ப்பால் நாட்டில்
வேறுபடு தமிழரெலாம் வினைப்பெருமை
ஆய்ந்தறியார்; மேலாம் தாய்க்கே
ஊறுகொடு பகைவர்களோ டுள்ளிருந்தே
கலாம்விளைப்பர்; இனத்தை மாய்ப்பார்;
கூறுபடச் செய்வீர்கள்! வெற்றிபெறத்
தமிழ்க்கொடியை ஏற்று வீரே!

முசாத்தையா, எம். ஏ.

இலக்கியக் காட்சி.

குறிஞ்சிக் கூத்து.

[இளசை நாயகம், எம் ஏ., பி. டி.]

—*—

முத்தமிழ்தத்திப் பயில்வதே நம் தாய்மொழியாம் தமிழாகும். இயற்றமிழில் அறிவுக்கூறு வளர்ச்சி அடைகிறது. இசைத் தமிழில் இன்பம் மலர்கிறது. இரண்டும் விரவிய கூத்துத் தமிழால் உணர்ச்சிக் கூறு ஊட்டப்படுகிறது. கூத்துத்தமிழ் பண்டு வேத்தியல், பொதுவியல் என்னும் இருவகை கொண்டிலங்கி வேந்தர்களிடத்தும், பொதுமக்களிடத்தும் தன்னியல்பு காட்டி மகிழ்ச்சி ஊட்டிற்று கூத்துக்கலை பற்றிப் பண்டை இலக்கி யங்கள் கூறுவனயாவை என்பதனை ஆய்தல் நலம். சிலம்பிலும் மேகலையிலும் கூத்துக்கலை பற்றிய பல உண்மைகள் காணக் கிடக்கின்றன. கூத்துமேடை எங்ஙனம் அமைய வேண்டு மென்பதையும், ஒரு முகத்திரை, பொரு முகத்திரை, கரந்து வரற்றிரை ஆகியவற்றை எங்ஙனம் அமைத்தல் வேண்டும் என்பதையும், ஒளி விளக்கின் நிழல் மேடையில் நடிப்போர் மேல் விழா வண்ணம் அமையுமாறென்னை என்பதையும் சிலம்பு சிறப்பாய் விளக்குகின்றது. குறிஞ்சி நிலத்தின் குன்றக் குரவையும், முல்லை நிலத்தின் ஆய்ச்சியர் குரவையும், மருத நிலத்துப் பள்ளும், பாலை நிலத்துக் கொற்றவை பரவலும், நெய்தல் நிலத்துக் கானல்வரியும் கூத்துத் தமிழுக்குச் சான்று களாம். பண்டைக் கூத்தின் நோக்கம் மக்கட்கு அறிவு புகட்ட லும் மக்கள் உளத்தைப் பண்படுத்தலுமேயாகும்.

கபிலர் கூறும் இயற்கைக்கூத்து இவற்றின் வேறுபட்டதாம் கபிலர் புலனழுக்கற்ற அந்தணாளர்; பொய்யா நாவினர்; நல்லிசை கொண்டவர். செறுத்த செய்யுட் செய் செந்நாவின் வெறுத்த கேள்வி விளங்கு புகழினர். பத்துப் பாட்டு முதலா மனம் பற்றினோர் எத்துணையும் பொருட்கிசையா இலக்கணமில் கற்பனையைப் பற்றார். அப்பத்துப் பாட்டில் எட்டாவதாக அமைந்த குறிஞ்சிப் பாட்டைக் கபிலர் பாடிவைத்தார். தலைவி யினது வேற்றுமை கண்டு வருந்திய செவிலிக்கு அறத்தோடு நிற்கும் பாங்கி கூற்றாக, ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழறி வுறுத்தற்குக் கபிலர் பாடினார். குறிஞ்சிப் பாட்டு 261 அடிகள் கொண்டது. குறிஞ்சி நில நிகழ்ச்சிகளனைத்தும் ஓர் அளவிற்கு இங்குத் தொகுக்கப்பட்டமை குறித்து இதனைப் பெருங்குறிஞ்சியு

மென்பர். கபிலர் ஓர் இயற்கைப் புலவர் என்ற கூற்றினை அவரின் இயற்கைக் காட்சி வண்ணனை மெய்ப்பிக்கும். இயற்கையே அவரின் பள்ளி. உள்ளமே அவரின் படிப்பு.

இனி, கூத்தினைக் காணுவாம். பழுத்த மிளகுதிர்ந்த பாறை. அதனருகே சுனையொன்று. சுனையின் கரையிலுள்ள மாவின் கனிகளும் பலாவின் கனிகளும் கனிந்து சாருய்ச் சுனையில் கலக்கின்றன. மலையுச்சியிற் கட்டப்பட்ட தேனிருல் கிழிந்து தேனும் சுனைநீரோடு கலக்கிறது. கனிச்சாறு தேனுடன் கலந்து தேறலாகிறது; இத்தேறல் கலந்த சுனை நீரை மயிலொன்று பருகி, மயக்குற்றுத் தளர்ந்து வருகின்றது. இக்காட்சி மூங்கிலிற் கட்டிய கயிற்றின் மேல் தாளம் தவற ஆடும் கூத்தியை ஒத்துள்ளது. மஞ்ஞையின் கூத்து இவ்வாறு காட்டப்படுகிறது.

மேற்கண்ட கூத்து குறிஞ்சியில் நிகழ்கிறது. மலையும் மலை சார்ந்த இடமுமான குறிஞ்சி நிலத்தில் புணர்ச்சியும், புணர்ச்சிக் குரிய குறிகளும் கூறப்படுகின்றன. மயில், பாறை, இருல், சுனை என்ற குறிஞ்சிக் கருப் பொருட்களும் பிற நிலத்துக் கருட் பொருட்களும் மயங்கி வருகின்றன. இக்கூத்தினை உள்ளுறை உவமையாகக் கொண்டு செவிலிக்குப் பாங்கி பின்வரும் கருத்துகளைக் குறிப்பாக உணர்த்துகின்ருள். திருவும், பருவமும், அன்பும், பண்பும் ஒத்த தலைவனும் தலைவியும் ஊழ்வினை வயத்தால் கூடுகின்றமையை, மலையுச்சியிலிருந்து இருலின் தேன் ஆழ்ந்த சுனை நீரோடு கலத்தலால் காட்டுகிருள். பழுத்த மிளகு வீழ்ந்த பாறை, வீரம் மிக்க மலை வாணர் வாழும் குறிஞ்சி நிலத்தை உணர்த்தும். இதன் வாயிலாகத் தலைவன் சுற்றப் பெருமை புலனும். மாங்கனியும், பலவின் சுளையும் கனிந்த சாறு பெற்ற சுனை, உயர்ந்த தாய் தந்தையர் ஈன்ற தலைவனைக் குறிக்கும். தலைவனின் பிறப்பும் உயர்ந்தது என்பதைச் செவிலிக்குக் குறிப்பிடுகிருள். சுனை நீரென்று கருதி, கனிச்சாறும் தேனும் கலந்த நீரை மயில் உண்ட காட்சி, தலைவன் பெருமையினைத் தலைவி உண்டுவிட்டாளாதலால் வருந்துகின்ற தன்மையைப் புலப்படுத்துகிறது. மயில் மயங்குதல், தலைவியின் தளர்ச்சியையும், துன்பத்தையும் குறிக்கும். தாளம் தவறி ஆடும் கூத்தியின் கூத்தைப் பழிக்கும் மக்களின் நிலை, தலைவியின் களவு கண்டு அலர் தூற்றும் மக்களைக் குறிக்கும். மயில் தானே வந்து நீருண்ட காட்சி, தலைவன் மெய்தொட்டுப் பயிறல் நிகழ்த்தாது தலைவியைக் கூடினமையை உணர்த்தும். தலைவன் கூட்டத்தான் மகிழ வேண்டிய தலைவி வருந்தி மயங்குதலை, மயிலின் தளர் நடை புலப்படுத்துகிறது. எனவே களவிற் புணர்ச்சி யுண்மையை நற்ருய்க் குணர்த்தி, தலைவன் தலைவிக்கு வரைவு நிகழ ஆவன செய்யுமாறு செவிலியைப் பாங்கி வேண்டுகிருள். இனிப் பாடலைக் கண்ணுறுவாம்.

"பழுமிளகு உக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் தீங்கனி யுதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமொடு ஈண்டிப் பலவின்
நெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேறல்
நீர்செத்து அயின்ற தோகை வியலூர்
சாறுகொள் ஆங்கண் விழவுக் களம்நந்தி
அரிக் கூட்டின்னியங் கறங்க, ஆடுமகள்
கயிறூர் பாணியிற் றளருஞ் சாரல்"

இத்தகைய நீர்நிலைக் கூத்து கழக இலக்கியங்களில் மட்டுமின்றி, சங்க காலத்திற்குப் பிற்றை நாளில் தோன்றிய நற்றமிழ்ப் பாவியங்களிலும் நடமிடுவதைக் கற்றோர் உணர்வர். வெண்பாவெனும் வானில் விடிவெள்ளியாய் விளங்கிய புலவர் புகழேந்தியாவார். இவர் இயற்றிய உள்ளந் தொடும் நூல் நள வெண்பா. நள வெண்பாவில் 'சுயம் வர' காண்டத்தின் காட்சியொன்றினை நோக்குவோம். தமயந்தி 'சுயம்வர' மண்டபம் வருகிறாள். வந்த அவளுக்குக் குழுமியிருந்த மன்னர் எந்தெந்த தேயத்தினர் என்று தோழி கூறிவருகின்றாள். காந்தார தேயத்து மன்னனை அறிமுகப் படுத்தும் போழ்து புலவர் அழகிய கூத்தொன்றினை அமைத்துக் கொடுக்கிறார். நீர் நிறைந்த நெடுங்குளம். அக் குளத்தில் படர்ந்த வள்ளைக் கொடி மீது அன்னமொன்று தனியாய்த் தளர்ந்து செல்கின்றது. இந்நிலை கழைக் கயிற்றில் ஆடும் கோதையரை ஒக்கும். அத்தகைய நீர் வளமான நாட்டுக்குரியவனே காந்தார தேயத்து மன்னனாவான். இனிப் பாடலை அறிவோம்.

"மாநீர் நெடுங்கயத்து வள்ளைக்கொடி மீது
தானேகும் அன்னந் தனிக்கயிற்றில்—போம்நீள்
கழைக்கோ லதையரேய்க்குங் காந்தார நாடன்
மழைக்கோதை மானே இம்மன்" (சுயவர–130)

இறுதியாக இன்னொரு காட்சியைக்காணுவது கட்டுரைக்குச் சாலப் பொருத்தமாகும். கூர்மதியினால் சீர் பெற்ற சீவக சிந்தாமணி ஆசிரியர் நாமகளிலம்பகத்தில், நாட்டுப் படலத்தில் கூத்து ஒன்றை நயம் பெறக் காட்டுகிறார். குவளை நிறைந்த ஓடை; நீர் சிறிது தாழ்வதால் வள்ளைக் கொடி மேலுயர்கிறது. உயர்ந்த வள்ளைக் கொடி மீது உவகைக் குரலெழுப்பி வாளையேறிப் பாய்கிறது. இந்நிலை பாடுகால் கயிற்றிற் பாய்ந்து பல் கலனொலிப்பப் போந்தாடு கூத்தியின் ஆடலை ஒக்கும். கூத்தியின் கூத்தினை மாந்தர் காணுவது போல், வள்ளைக் கொடிமீது பாயும்

எல்லார் முன்னும் இருமாதீர்கள்!

சளி முற்றித் தொண்டைக் குழாய்களிலும், மூக்குத் தொளை களிலும் அழற்சி ஏற்பட்டு இருமல் அடிக்கடி வரும். இருமல் ஒரு தொற்று நோய். 'போர்டெட்-கெங்கான்' என்னும் நுண் ணுயிர்தான் இருமலை உண்டாக்குகின்றது. இருமுகின்றவரின் தொண்டையிலும், மூச்சுக் குழலிலும் உள்ள சளியின் நுண் திவலைகளில் இவ்வுயிர்கள் மிகுதியாக இருக்கும். சளி பிடித்தவர் இருமினாலும், தும்பினாலும் அக்காற்றின் வழி இந்நுண்ணுயிர்கள் காற்றின் வழி பிறருடைய மூக்குத் தொளைகளிலும் பாய்ந்து தொண்டையை அடைகின்றன. இப்படித் தொற்றிய நுண்ணு யிர்கள் இரண்டு கிழமைகளில் பேரளவில் பெருகி மற்றவர்க்கும் இருமலைத் தோற்றுவிக்கின்றன. 10 ஆண்டுகளுக்குள்ளிருக்கும் குழந்தைகளையும், 60 ஆண்டுகள் முதிர்ந்த கிழவர்களையும், இவை பெரும் அளவில் பற்றித் தொல்லை கொடுக்கின்றன. குழந்தைகளுக்குக் கக்குவான் என்ற கடுமையான இருமலைத் தோற்றுவிக்கின்றன. இந் நோய் பீடிக்கப் பெற்ற குழந்தை களில் நான்கில் ஒரு பங்கு இறந்துபோக நேரும். இருமல் உள்ளவர்கள் 5 அடி தொலைவில் இருந்து பேசினாலும் கூட அவர்களிடமிருந்து நுண்ணியிர்கள் பிறரைப்பற்றுகின்றன. 18 அடி தொலைவில் இருந்து இருமினாலும் நோய் உயிர்கள் பிறரை நோக்கிப் பாய்கின்றன. ஆகையால் சளி பிடித்தவர்கள் எல்லார் முன்னிலையிலும் இருமுதல் கூடாது. இருமும்பொழுது கைத்துணி ஒன்றால் வாயையும் மூக்கையும் பொத்திக்கொண்டே இருமுதல் வேண்டும். *

(முன் பக்கத் தொடர்ச்சி)

வாளையின் கூத்தையும் நாரை கரையிலிருந்து கண்டு களிக்கிறது இக்காட்சியினைக் கீழ் வரும் பாடல் நிழற் படம்போல் நம் நெஞ் சிற்கு உணர்த்துகிறது.

> ''கூடினார் கணம் மலர்க் குவளையங் குழியிடை
> வாடுவள்ளை மேலெலாம் வாளை யேறிப் பாய்வன
> பாடுகால் கயிற்றிற் பாய்ந்து பல்கல னொலிப்பப்போந்து
> ஆடுகூத்தியாடல் போன்ற நாரை காண்ப வொத்தவே''
>
> (நாட்டுப்-66)

இன்னோரன்ன கூத்து வகைக் காட்சிகளைத் தமிழிலக்கியம் பயின்று, ஆய்ந்து, இன்புற்று அவ்வின்பத்தை அனைத்துலகும் பெறச் செய்தல் தமிழர் கடனாகும். ○

செய்தித்தாட்களின் சிறுமை.

(புலவர். வி. பொ. பழனிவேலன், பி. ஓ. எல்.)

—○—

தமிழ் நாட்டில் இன்று நடத்தப்பெறும் தமிழ்த் தாளிகைகள் பல. இவற்றில் எத்தனைத் தாளிகைகள் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ப் பண்பாடு, நாகரிக வளர்ச்சிக்கும் உகந்த வகையில் பணியாற்றி வருகின்றனவென்பது எண்ணிப்பார்க்க வேண்டிய வொன்றும். செய்திகளை நடுநின்று ஆய்ந்து, காய்தல் உவத்தலின்றி வெளியிடுதலும் நாட்டிற்கும் மொழிக்கும் சீரும் சிறப்பும் உண்டாக்குவதும் ஒரு தாளிகையின் இன்றியமையாக் கடன்களாகும். ஒருதலைச் சார்பும், நடுவின்மையும் பகுத்துணர்வின்மையும், குலப்பற்றும், சமயப் பற்றும் கடியப்படல் வேண்டும். நேர்மை, அறம், விருப்பு, வெறுப்பு இன்மை முதலிய நல்லாறுகளை நாட்டத்திற் கொள்ளல் வேண்டும்.

இன்று தமிழ் நாட்டில் நிலவும் தாளிகைகளில் ஒன்றுக்கேனும் மேற்கூறிய இயல்புகள் இல்லையென்றால் மிகையன்று. எல்லா இயல்புகளும் இல்லையேனும் மொழிப்பற்றும் நாட்டுப் பற்றுமாயினும் உளவா எனின் அவையும் குதிரைக் கொம்பே. மனமாசின்றி யாம் கூறும் கருத்துகளை உளங்கொண்டு உன்னிப் பார்க்கின் உண்மை தெற்றெனத் தெரியும்.

தமிழில் பல்லாண்டுகளாக வெளிவரும் ஒரு நாளிதழ் முன்னர் அதன் முதற் பக்கத்தில் மேற்பகுதியில் இரு குறட் பாக்களைப் பொறித்து வந்தது. இன்று அவற்றை அகற்றி விட்டது. மேலும் இத்தாளிகைகள் தனித்தமிழ் நாடுவார் வெறியர்கள் என்றும், தமிழ் நாட்டில் தமிழ் பயிற்று மொழியாக இருக்கத் தகுதியற்றதென்றும், எழுதுகின்றன. தமிழ் நாட்டில் இருந்து தமிழில் வெளிவரும் தாளிகைகளே தமிழுக்கு இவ்வாறு கேடு செய்கின்றன. இன்னொரு திங்களிதழ் வேதநாயம் எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரத்'தைச் சைவ சித்தாந்தக் கழகத்தார் திருத்தி வெளியிட்டு விட்டார்களென்று ஓலமிடுகின்றது. அந் நூலில் உள்ள பொருள் விளங்காத சமற்கிருதச் சொற்களை நீக்கியதற்கே இந்த ஓலம். எளிய இனிய தமிழ்ச் சொற்களைப் பெய்து வெளியிட்டமையே அவ்விதழுக்குத் தவறாகப் படுகின்றது போலும்! அனைத்திந்திய எழுத்தாளர் மன்றம் கூட்டிய திருச்சிமாநாட்டில் இவ்வாறு வெளியிட்டதைக் கண்டித்துத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுளது. தமிழ்த் தாளிகைகளும், எழுத்தாளர்களும் தாய்மொழிப் பற்றற்றவர்கள் என்பதையே இந்நிலை காட்டுகின்றது.

இத்தகைய ஏடுகள் எந்தச் செய்தியையும் தூய தமிழில் எழுதுவதுமில்லை; யாரேனும் எழுதினாலும் அதை அவ்வாறே வெளியிடாது கலப்பு மொழியிலேயே வெளியிடுகின்றன. எங்கெல்லாம் சமற்கிருதச் சொற்களை நுழைக்க இயலுமோ அங்கெல்லாம் நுழைக்கின்றன. எழுதுவார், பெயர்கட்குப் பின் குலத்தைக் குறிக்கும் 'வால்'களை வெட்டி எழுதி விடுத்தாலும், அவை ஒட்டி எழுதி வெளியிடுகின்றன. தமிழில் வெளியாகும் நாளிதழ்களில் ஒன்று கூடப் பிழையின்றியோ, பிறமொழி கலக்காமலோ எழுதுவதில்லை. திங்களிதழ்கள் ஒன்றிரண்டே நல்ல தமிழில் எழுதுகின்றன. தனித்தமிழில் வெளியிடப்பெறும் தாளிகைகள் பெருமளவில் வெளிவரல் வேண்டும். பொதுவாக இதழ்கள் எல்லாம் வாணிக நோக்கோடு நடத்தப்படுகின்றனவே யன்றித் தமிழ்ப்பற்றோ தமிழ் நாட்டுப்பற்றோ அவற்றிற்கில்லை. விற்பனையை மிகுதிப்படுத்த என்னென்ன செய்யலாம் என்று எண்ணிப் பல செய்திகளை வெளியிடுகின்றன. திரைப்படச் செய்திகளைப் பட விளக்கத்துடன் வெளியிட்டும், திரைப்பட நடிகன், நடிகைகளைக்கொண்டு வினாக்களுக்கு விடையளிக்கச் செய்தும், திரைப்பட நடிகைகளின் வரலாறுகளையும் தனி வாழ்க்கையின் வேண்டாத்தகா நிகழ்ச்சிகளையும் வெளியிட்டும், அவர்களைக்கொண்டு கதைகள் எழுதச்செய்தும், கோள்கணிப்புகளை நாள், கிழமை, மாதம் என்ற வகையில் எழுதியும், ஞாயிறு மலர்களில் காதற் கதைகள் வெளியிட்டும், நடிகைகளின் படங்களைக் கவர்ச்சியான பல வண்ணங்களில் தீட்டியும், அட்டைப் படங்களைக் காளையர்களைக் கவரும் முறையில், காதலர் இணையுடன் வரைந்தும், விற்பனையைப் பெருக்கிப் பொருளீட்ட மேற்கொள்ளும் முயற்சி, அம்மம்ம பெரிது, பெரிது! கீழ்மையான செய்திகளையெல்லாம் சில ஏடுகள் கொட்டையெழுத்துகளில் முதற் பக்கத்தில் பொறித்து விடுகின்றன இவையெல்லாம் மக்களைத் தீநெறியுய்த்துப், பொருட் பெருக்கும் முயற்சியே ஆகுமன்றி வேறு என்ன? கொள்கைகளில் செப்பமில்லா இவை நடைமுறைகளிலும் செப்பமாயிருப்பதில்லை கட்டுரையோ, கதையோ, பாடலோ எழுதித் திருப்பிப்பெற அஞ்சல் தலை வைத்து அனுப்பினாலும் வெளியிடாதவற்றைத் திருப்பியனுப்புவதில்லை. ஆனால் பல நாட்களுக்குப் பின் நாம் எழுதிய உருப்படிகள் வேறு சில மாற்றங்களுடனும் வேறு சிலர் எழுதியன போல் பெயர் மாற்றி வெளியிடப் பெறுகின்றன என்னே இவற்றின் ஏமாற்று! சில ஏடுகள் குறிப்பிட்ட சிலர் எழுதுவனவற்றைத் தவிர பிறர்க்கு இடமளிப்பதே இல்லை வேண்டியார், வேண்டாதார் என்ற வேறுபாட்டுணர்வு தாளிகைகட்கு இருக்கவே கூடாது. எவர் எழுதினாலும் அது நாட்டுக்கும் மொழிக்கும் நலம் பயப்பதாயின் அதனை வெளியிடுவதே நடுநிலை பிறழாத் தாளிகைகளின் கடமைப்பாடாகும். கட்சிக் கொள்கைகளைப் பரப்புவதற்கென்றே வெளியிடப்பெறும் தாளிகைகள் பற்றி நாம்

தவருன நம்பிக்கைகள் சில....!

—:—

○ அரிமா (சிங்கம்) புதிதாகக்கொன்ற உயிர்களையே தின்னும் என்று கூறப்படுகின்றது. இக்கூற்று உண்மையன்று; கட்டுக் கதையே! அரிமா செத்துக் கிடக்கும் உடல்களையும் நாட்பட்டு அழுகிப் போனவற்றையும் கூடத் தின்னும் வழக்கம் உடையது.

○ சாரைப்பாம்பு ஆணென்றும், நல்லபாம்பு பெண்ணென்றும் சிலர் கூறுவதுண்டு. இதுவும் தவருன கருத்தாகும். சாரைப் பாம்பிலும், நல்லபாம்பிலும் ஆண் இனமும் பெண்ணின மும் உண்டு.

○ கலுழன் (கருடன்) ஆண் என்றும், பருந்து பெண் என்றும் ஒரு தவருன கருத்து உள்ளது. இரண்டும் வெவ்வேறு வகைகளாகும். இரண்டினங்களிலும் ஆணும் உண்டு; பெண்ணும் இண்டு.

○ கரடிகள் பொதுவாக மக்களையும் சிறப்பாகப் பெண்களையும் கட்டி அணைத்துக் கொல்லும் என்று சிலர் கூறுவர். இது முற்றிலும் பொய்யுரையே! கரடி மக்களை அடித்தே கொல்லு கின்றது.

குறிப்பு: இவை போன்ற தங்கட்குத் தெரிந்த தவருன கருத்து களையும், அவற்றைப்பற்றிய உண்மைகளையும் படிப்பவர்கள் எழுதியனுப்பலாம். —ஆர்.)

(முன்பக்கத் தொடர்ச்சி)

வருந்தவில்லை. பொது நோக்குடன் மொழிக்கும் நாட்டுக்கும் உழைப்பதாகப் பறைசாற்றும் ஏடுகள் பற்றியே குறிப்பிடு கின்ருேம்.

மக்களை நல்லொழுக்கமுள்ளவர்களாகவும், நற்பண்புடைய வர்களாகவும், நல்லறிவுடையவர்களாகவும், நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் உடையவர்களாகவும் மிளிரச்செய்வதே செய்தித் தாள்களின் கொள்கைகளாக அமைய வேண்டுமே யன்றி அவற்றை அழிக்கவோ அவிக்கவோ அவை முயல்தல் கூடாது. சிறுமை பல செய்து மக்களைச் சீரழிக்கும் இத்தகைய ஏடுகளை நல்லுளம் படைத்த நன்மக்கள் புறக்கணித்தலே முறையாகும். *

(அச்சேறு நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்திடலால் மேலாமோ?-முச்சில்
புடைத்துலையி லிட்ட புதுமணலைச் சோறுய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு? —ஆர்)

மாணவன் கவிதைகள்.

ஆசிரியர்: ''லோகு''.
கிடைக்குமிடம்: கன்னியம்மாள் நிலையம், தட்டச்சேரி.
(வழி) செய்யாறு. வ. ஆ.
விலை: 50 காசுகள்.

பாட்டெழுத முயலும் ஓரிளைஞரின் தொடக்க நிலை முயற்சி, இப்பாடல்கள். நூல் வடிவு பெறுதற்குரிய தகுதி எட்டுணையும் இல்லை. உணர்வுகள் தாறுமாறாக எழும்பி அலம்பியிருக்கின்றன. சொல்லிலும் பொருளிலும் யாப்பிலும் எண்ணற்ற பிழைகள். ஆனால் நூல் எழுத விழைவார் ஓரளவுக்கேனும் மொழித்திறனும் உணர்வும் கைவரப் பெற்று, அம் முயற்சியில் ஈடுபடுவராயின் அவர்க்கும், பிறர்க்கும் அது பயனுடையதாகும். போதிய அடிப்படை அறிவுபெறு முன்னரே பாடல் எழுத முனைவது தவறில்லை; ஆனால் எழுதியவற்றை நூல் வடிவிற் காணத் துடிப்பதும், அதனால் இலக்கிய வளர்ச்சிக்குத் தீங்கு பயப்பதும் தாம் பெருந்தவறாகும். இம் மாணவர்பால் பொங்கி எழும் படைப் புணர்வு (creative urge) நல்லதுதான். ஆனால் அஃது ஓரளவுக்கேனும் ஒழுங்கும் திருத்தமும் பெற்று மலர்ந்திருக்க வேண்டியதே முறையாகும்.

* * *

பாரதியின் புதிய சமுதாயம். (பாடல்கள்)

ஆசிரியர்: புலவர். ஆ. மணிவாசகன்.
வெளியிடுவோர்: வித்துவான். இரா. இலக்குமணன்,
கடையம்.
விலை: 30 காசுகள்.

பாரதியார் பாடல்களிலுள்ள சில கருத்துகளை மீண்டும் பாவடிவில் (40 எண்சீர் மண்டிலங்களாகத்) தந்திருகின்றார்

ஆசிரியர். பாரதியாரின் பாடல்கள் ஏற்கனவே எளிய முறையில் அமைந்துள்ளவைதாம். அவற்றை இளைஞர்க்கு,—அதுவும் பாட்டிலேயே விளக்கவேண்டிய இன்றியமையாமை எதுவும் இல்லை. ஆசிரியரின் பா முயற்சிக்கு அக் கருத்துகள் பொருளாகப் பயன்பட்டுள்ளன; அவ்வளவே. பாட்டில் ஓரளவு ஓட்டம் உளது; ஆனல் பாட்டு மனத்தில் நிற்கவில்லை. வட சொற்கள் பல காணக் கிடக்கின்றன. ஆங்காங்குப் பாரதியை ''இறை'', 'தெய்வம்' எனுஞ் சொற்களால் சுட்டுவது மிகை. நாடு காப்பீர் என்ற இறுதிப்பாடல் சீனப் படையெடுப்பை மனத்துட்கொண்டு எழுதப்பட்டுள்ளது. இது பாரதியார் கூருத கூற்று!

பாரதியின் புதிய குமுகாயம் (சமுதாயம்) தமிழ் நலம் காத்துப், 'பாரதப்' பற்றும் கொள்ளத் தூண்டுவது. இன்றைய அரசியல் அமைப்பில் இவ்விரண்டும் நேர் முரணனவை என்பது உண்மை விழைவர் எவரும் எளிதில் உணரத்தக்கது. தமிழ் மொழியில் பாடியதும், பொது நிலையில் தமிழரைப் போற்றியதும் தவிரத், தமிழரின் உயிர்நிலைப்பண்பாட்டில் தோயாத பாரதியின் அந்தப் புதிய குமுகாயம் தமிழர்க்கு உண்மை எழுச்சி தருமாறில்லை. அதனைத் தமிழ்ப்புலவர்கள் வியந்து பாராட்டிக் கொண்டிருப்பது உண்மைத் தமிழர் நலத்துக் குகந்ததாக இல்லை.

* * கல்லாடன்.

ஏற்றம்.

தமிழ் இலக்கிய, குமுகாயத் திங்களேடு.

தனியிதழ் விலை: 16 காசு.

ஒரு நாட்டில் உருவாகும் அரசியல் கட்சிகள் அனைத்தும் மக்களுக்கு நன்மை செய்வதே தங்கள் நோக்கம் என்று பறை சாற்றினாலும், அவரவர்தம் போக்கு நன்மைக்கு மாருகத் தீமையையும் விளைவித்தல்போல, நாட்டில் மண்டிக் கிடக்கும் கேடுகளை வெட்டிச் சாய்த்து, இலக்கிய உலகிற்குப் புது நெறி இயற்றித் தந்து தொண்டாற்றப் போவதாகவே புதியவாகத் தோன்றும் எல்லா இதழ்களும் முழக்கம் செய்கின்றன. எனினும் நாளடைவில் சில இதழ்களின் போக்கு மன்பதையில் புதிய கேடுகளை நிலைநாட்டுகின்றது; இலக்கிய உலகில் இருந்த தெளிவையும் கலக்கிக் குழப்பம் விளைக்கின்றது.

நெய்வேலியினின்றும் வெளிவரும் 'ஏற்றம்' எனும் இதழ் நோக்கிற் கியைந்த போக்கைக் கொண்டு திகழ்வது பாராட்டற் குரியது. முதலிதழில், தமிழ்ச் செய்யுளுலகுக்குப் பாரதி ஆற்றிய தொண்டென்ன என்பதை முற்றிலும் ஆய்ந்து முடிவு கட்டா விட்டாலும், கோடி காட்டியதாகவாவது அமைகின்றது 'பாரதி-யார்?' எனும் கட்டுரை. அப்பாத்துரையார் தரும் 'செவிச்

செல்வம்' பகுதி சிறந்த அறிவு விருந்தாகும்; புதுமையான கருத்துகள் பொலியும் பகுதி. இவ்விதழில் வெளிவந்துள்ள எல்லாப் பாடல்களிலும் குற்றியலுகரப் புணர்ச்சிப் பிழைகள் மிகுந்துள்ளன. தனித்தமிழ் வளர்ச்சியில் முனைந்து ஈடுபட விரும்பும் 'ஏற்றம்', வேடம், பரம்பரை, இதயம், ஆதிக்கம், கரம், ஆயுதம், அநேகம், ஞானம், கவி எனும் சொற்களைத் தாராளமாகக் கையாள்வது இதழ்க்கு இழுக்கையே தரும்.

'ஓர் கணம், சீரியெழும், கொண்டக் குழவி' போன்ற தவறான அமைப்புகளைத் தவிர்த்தல் நல்லது. ஆங்காங்கே 'உருபா, தலைக்கழகம், நடுவணரசு, தாளிகை' போன்ற சொற்களைக் கையாண்டிருப்பது உவப்பூட்டுகின்றது. 'திருவள்ளுவர் உள்ளம்' பகுதியை முடிந்த முடிபாகக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துவது சிறப்பன்று. போக்கில் துணிவும், நோக்கில் தெளிவும் கொண்டு புதிய தமிழ் மன்பதையைப் படைக்கும் முயற்சியில் 'ஏற்றம்' நடையிடுமாக!

— மு. சா.

(10–ஆம் பக்கத் தொடர்ச்சி)

போர்மறவப் பாட்டும் புறப்பாட்டாய்ப் போனதுவோ?
சீர்மறந்து போனீரோ செந்தமிழீர்! இற்றைக்கே
நொச்சிப்பூச் சூடுவீர்! நும்மொழியைக் காத்திடுவீர்!
எச்சிலிலை என்றும் இனிப்பதிலை! எஃகுளத்தீர்!
வீச்சொன்றே வேண்டும்! இலையேல் விழல்வேண்டும்!
மூச்சு பெரிதோ? முழுவுரிமைப் போர்பெரிதோ?
இந்தி நுழைந்தால் எழிற்றமிழும் தான்குலையும்!
பிந்தித் தமிழர் இனங்குலையும்! இஃதுறுதி!
மாணவரீர்! செந்தமிழ்ச்சீர் வாய்ந்த மறக்குலத்தீர்!
வீணவர்நீர் என்னும் விழல்மொழிக்கா ளாகாதீர்!
கன்னித் தமிழ்நிலத்தில் கால்வைப்பார் தம்தலையைத்
துன்னித் துணித்திடுவீர்! தோய்ந்த துயரறுப்பீர்!
குன்றே யனையீர்! குடிகாக்க நொச்சிப்போர்
இன்றே புரிக எழுந்து!

—*—

கற்பனை ஊற்று:

வாழ்க்கை.

மெய்ம்மைப்பித்தன்.

இருளுக்கும் இருளுக்கும் இடையே புதையுண்டு கிடக்கும் ஒளிச் சிதறலை வாழ்க்கை என்னலாமா?

அறியாமைக்கும் அறியாமைக்கும் இடையில் வீழ்ந்து கொடி யோடும் அறிவுக் கதிரை வாழ்க்கை என்று கூறலாகுமா?

புலன்களைச் சுருக்கியும், பெருக்கியும் நான் செய்யும் ஆரவாரத் திற்கும் ஊமைத்தனத்திற்கும் வாழ்க்கை என்று பெயர் தர ஒப்ப மாட்டேன்!

புலப்படாத இயக்கங்களின் இடையில் என்னையும் ஓர் உருளை யாக அமைத்து உருட்டிக் கொண்டு போகும் இவ்வியற்கை அமைத்துக் கொடுத்த வாழ்க்கையின் நோக்கந்தான் என்ன?

அசையாத பருப்பொருள் அசைகின்ற நிலையே வாழ்க்கையா?

அல்லது அசைகின்ற அந்நுண்ணிய நுண்ணணுக்கள் தம்மை மேலும் மேலும் அசைக்க, மூல உயிர்ப் பொருட்குத் தேடி யலைந்து அதனைக் காண முயல்வதே வாழ்க்கையா?

வாழ்க்கை என்பது இதுதான் என்று நிறுத்து எடையிட்டுக் காட்டாமல், என்னை இங்கே இயங்கவிட்டிருக்கும் அவ்வியற்கை யின் பொறுப்பின்மையை எவ்வாறு உணர்ந்து கொள்வது?

புலன்களின் இயக்கமே வாழ்வாகுமா?

தண்டு, தழை காற்றினால் அசைவதே செடி கொடிகளின் வளர்ச்சியாகுமா?

அஃதின்றேல் புலன்களின் வளர்ச்சிப் பருமையே வாழ்வு என்று கொள்வது சரியா?

புழு பூச்சியாவதையும், குஞ்சு பறவையாவதையும் கன்று காளை யாவதையும், குட்டி போத்தாவதையும், மகவு மாந்தனாவதை யுமே வாழ்வென்னலாமா?

அவ்வாறாயின், புழுவின் ஊறலுக்கும், குஞ்சின் குசுமலுக்கும், கன்றின் துடுக்கிற்கும், குட்டியின் முணுகலுக்கும், மகவின் மழலைக்கும்—என்ன பொருள்? இவையெல்லாம் வாழ்வின் தொடக்கமா? இவற்றின் முடக்கத்திற்கு என்ன பெயர்?

இம் முடக்கம் எந்த விரிவின் அடக்கம்?

துப்புத் துலங்காத அடி முடிக்கு இடையில், திக்குத் தெரியாத இவ்வுலகச் சுழற்சியில் என்னையும் ஓரணுவாய்ச் சுழலவிட்டு, என்னுள்ளத்திற் படிப்படியாக வளர்ந்து வருகின்ற அறிவின் ஒளிக்கீற்றால் இவ்வான மண்டலம் முற்றும் கண்டறியத்தூண்டும் வாழ்வின் நோக்கம் யாது?

எழுப்பிக் கொண்டே போகும் வினுக்கள், விடையாக மாறுவது வாழ்வாகுமா?

அன்றி அவ்வினுவே விடையா?

ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாத இணைப்பு!

ஒருவரோ டொருவர் ஒட்டிவராத அன்பு!

ஒருவர்க்கும் ஒன்றும் விளங்காத அறிவு!

ஒருவர்க்கும் ஒன்றையும் சரிவரச் செய்யமுடியாத ஆற்றல்!

ஒருவர்க்கும் புலப்படாத உயிர் வீழ்ச்சி!

இவற்றின் மயக்கத்தில் இது சரியென்றும், சரியன்றென்றும் சரிவரச் சொல்லமுடியாத குழப்பம்!

வாழ்க்கை என்பது என்ன?

தோன்றிய தொடக்கத்தினின்று, எழுந்த எழுச்சியால், தட்டுப் பட்ட முட்டுப்பொருள்களை வாரிவிழுங்கிப் பூதச் சேர்க்கையாகிய பருவுடலின் சதைத் திரளைகளை மேலும் மேலும் உருளச்செய்து, கொதிக்கின்ற புலன்களை இன்ப நீர்விட்டு ஆற்றிஆற்றி அவிந்து போகும் இவ் வாடல்களே, வாழ்க்கை என்று புலப்படுமாயின் — எனக்கு உண்டாவது நகையே!

ஒன்றியிருக்கும் இவ் வாழ்வுச் செயல்கட்கும், எழுந்து நகைக் கின்ற என் ஏளனத்திற்கும் இடையில் ஓடி ஒளிந்த உண்மை எங்கே?

இதுவே வாழ்வா மென்னின்—எனக் கேற்படும் வேட்கைக்கும் வெறுப்பிற்கும் என்ன பொருள்!

இதுவும் அதுவும் கலந்ததே வாழ்க்கை யாகுமென்னில் அக் கலவை எந்த அளவில் தொடங்கி, முடிகின்றது?

அக்கலவை யில்லாத நிலைக்குப் பெயர் என்ன?

ஒன்றுக்கும் பொருந்தி வராத இந்த எண்ணங்கள் எதன்பால் தோன்றி ஒளிர்வன?

இவற்றிற்கு உட்பொருள் எங்குப் புலப்படுவது?

அவ் வுட்பொருளை நோக்கி யமையும் படிக்கட்டுகளே இவ் வெண்ண அமைப்புகளாம் என்னில், இவ்வாறு எண்ணிக் குழம்புவதே வாழ்க்கை ஆகிவிடுமா?

ஆம் என்னில்—இவ்வுருவற்ற நினைவின் சாயல்களால் என்னை முன்னேற்றிச் செல்ல, என்னுல் தாங்கலாகாத இப் பருமைச் சதைப் பொதியை என் உயிரில் கட்டித் தொங்கவிடலாமா?

என்னின் செருக்கழிக்க, இப் பொதியைச் சுமந்து திரியத்தான் வேண்டுமென்னின், இப் பொதியவிழ்ந்த இறப்பு நிலையில் என் செருக்கொழிந்து போகுமா?

என் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் இச் செருக்கை என்னோடு பொருத்தியது யார்? அது நானாக இருக்கலாமென்னின், நான் அத்தகைய ஆற்றல் பொருந்தியவன் என்பதை என்னால் நம்பக் கூடவில்லையே!

சிறகுகள் இற்றுப் போகப் பறந்து கொண்டே யிருக்கும் பறவையைப் போல், பன்னூறாயிரம் எண்ணக் கால்களால் நடந்து திரியும் என் இயக்கமே வாழ்க்கையா? இதுவே வாழ்வாகின்,

எண்ணங்களை மதியாமல், பருவுடல்களின் இயக்கச் செயல்களையே மேலும் மேலும் வலுப்படுத்திக் கொண்டு, என்போன்ற தூய்மை நினைவுக்காரர் ஊன்றி நடக்கும் வழியில், குறுக்கும் நெடுக்குமாக வந்து போய்க்கொண்டு இருக்கின்ற பெரும்பாலார் இயக்கங்கட்கு என்ன பெயர்?

குடலை போன்ற வயிற்றைக், கூடை போல் பெருக்கச் செய்வதும், தத்தித் திரிகின்ற சிறிய உடலை, உருண்டு நகர்கின்ற பெருத்த பொதியாக வளரச் செய்வதுமே வாழ்வா? அல்லது,

அசைவற்ற உள்ளத்தே அசைவை உண்டாக்கி ஆயிரமாயிரம் எண்ண மலர்களை அதிலே பூக்கச் செய்து, அவற்றால் நின்னைப் போற்றி, நான், நின்னொடு பறக்க அணியமாவதே வாழ்வா?

இவையிரண்டும் வாழ்வின் இருளும் ஒளியு மாகின், என் தலைவனே,

அவ்விருளையும், ஒளியையும் பின்னிப் பிணைப்பதே நின் வேலையா?

அந்த இருள் நிலைமைக்கும், ஒளி இயக்கத்திற்கும் பொருத்தங் காட்டி, உயிர்களை உழல வைப்பதில் நீ அடையும் ஊதியமென்னை?

மெல்லிய எண்ண நூலால், உடலெனும் இருப்புக் கலப்பையைக் கட்டி,

என்னின் விளக்கமற்ற அறிவு, உள்ளம் எனும் இரு காளைகளால், கல்லும் முள்ளும் பரந்த இக் கரம்பு நிலத்தை உழுது, என்னையே வித்தாக்கி, என்னையே முளையாய்ச், செடியாய், மரமாய்ப், பூவாய்ப், பிஞ்சாய்க், காயாய்க், கனியாய்ச் செய்வித்து, என்னைப் பயனுடைய ஒரு பொருளா யாக்கி நீ நின்னோடு பொருத்தி மகிழ்வதே வாழ்வின் அகன்ற உண்மையா?

ஏதுங் கெட்ட, இவ்வெண்ணங்கள் தோன்றுதற்கும், இதன் வழி நான் நடந்து நின்னை அடைவதற்கும் இவ் வாழ்க்கை எனில், என் தலைவனே, அந்த வாழ்க்கையை அடைய நான் இன்னும் நெடுந் தொலைவு நடத்தல் வேண்டுமே!

அந் நெடுமைச் செலவிற்கும் நீயே வழிகாட்டியாக என் உள்ளத்தே அமைகின்றாய்!

என்னுலேயே என்னைச் சமைத்துக் கொண்டு என்னையே என்னுள் ஒடுக்கும் என் இயக்கத்தையே வாழ்வு என்னின், அளக்கலாகாத பெருமை யுடையவனே!

நீ எனக்குத் துணையாய் வந்து நில்!

என் வாழ்க்கை முயற்சிக்கு நீ கருவியாக இரு!

என் நீண்டு வளர்ந்த எண்ணக் கைகட்கும் தட்டுப்படாத நின்னை, என்னுள்ளேயே பொதிய வைத்துக் கொண்டுள்ள நின் ஆற்றலை எண்ணி எண்ணி மாழ்குகின்றேன்!

வித்துக்குள் உள்ள கருவை யறிய விசும்பேறித் தடவித் தேடும் பன்னூறு கிளைகளைப் போல்,

என்னுள்ளத்து வீற்றிருக்கும் நின்னைத் தேடி, இப்பாழ் வெளி யெல்லாம் பறக்கின்றது என் உயிர்!

என்னுள் அமர்ந்த நின்னைப் பரவுவது என் வாழ்க்கை!

இவ்வொன்றி விளங்கிய செயலைவிட்டு,
என்னையே மூடி நிற்கும் இச் சதைப் பொதியைப் புரப்பது, அவற்றை மூடியுள்ள இவ்வுலகத்தின் புன்மைச் செல்வங்களைப் புரப்பது,–முற்றும் வீண் வேலை!

விடாய் அடங்காதவர் நீர்க்கலைகின்றனர்!

விடாய் அடங்கிய நிலையில் மீண்டும் எழுதுவது பசி!

பசியெழுந்தவர் உணவுக் கலைகின்றனர்!

பசியடங்கிய வேளையில் மீண்டுங் கிளர்ப்பது புலன் இன்பம்!

புலன் கிளர்ந்தவர் மெய்யுறழ்ச்சிக்கு அலைகின்றனர்!

மெய்யுறழ்வால் கிடைப்பது புலன் ஒடுக்கம்!

அதன்பின்னையே உள்ளத்தின் முயற்சி!
இறைவனே!

முதற்படியிலேயே நின்று கொண்டிருப்பார் பலர்!
இரண்டாம் படியில் ஏறியலைவார் சிலர்!
மூன்றும் படிக்கு முனைவார் ஒரு சிலர்!
நான்காம் படியில் நடப்பார் மிகச் சிலர்!
ஐந்தாம் படியில் அடிவைப்பார் மிகவுஞ் சிலர்!
ஆறும் படியில் அடங்குவர் ஓரிருவர்!
ஏழாம் படிக்கு ஏறுவர் அவருள் ஒருவர்!
அவ்வொருவனுய்,
முழுமை முனைப்பொடு,
முற்றிய நினைவொடு,
என் தலைவனே,
மெல்லென நடக்கும் எனக்குத் துணை நில்!

படிப்படியாய் ஏறுவோர், மீண்டும் மீண்டும் அடிப்படிக்கே சறுக்குவதையும் காணுகின்றேன்!

இரண்டு படிகளை ஒரே தாவில் தாண்டுவோரையும் பார்க்கின்றேன்!
எவ்வாற்றானும் வெறுப்படையாத என் தலைவனே!
எல்லார்க்கும், எல்லா நிலையிலும், எல்லாமாய் நின்று நீ கை கொடுக்கின்றாய்!
ஒளி வேண்டுவார்க்கு ஒளியும்,
வழி வேண்டுவார்க்கு வழியும்,
நின் அருளால் பெறப்படுவனவே!
வெயிலிற் புழுவெனத் துடிக்கும் என் உடல்
முற்றக் காய்ந்து சருகாகும் வரை,
நின் அருள் காற்று என்னைத் தூக்கிச் செல்லாது என்பதை நான் உணர்கின்றேன்!
அற்றற்று வீழும் என் உடலின் சதைத் திரளைகள் முற்றுங் கழன்று போகும் வரை, நீ என்னைத் தூக்கவியலாது என்பதை நான் அறிய முடிகின்றது!
கல்லோடு சேர்த்துக் கட்டப்பட்ட பொருள் நீர்க்குள் அழுந்திக் கிடப்பதைப் போல்,
உறவும் பொருளும் என்னொடு பிணைக்கப் பெற்று, இவ்வுலகச் சேற்றில் புதைந்து கிடக்கின்றேன்!
இப் பருமைப் பொதிகளை அவிழ்த்து விடும் வரை, நின் மென்மையான கைகள் என்னைத் தீண்டப் போவதில்லை!
அருளுக்கு விளக்கமாய்
இருளுக்கு ஒளியாய் நிற்கும் என் ஐயனே!
நின்னை நாடி நான் வர முயல்வதே வாழ்க்கையாகும் என்பதை நீ எனக்கு உணர்த்தி விட்டனை!
நீர்விடாய் கொண்டுள்ளபோழ்து, நீரையன்றி நான் நினைத்தது வேறில்லை.
பசி கொண்டுள்ள போழ்து உணவன்றி நான் நினைத்தது ஒன்றில்லை.
புலன் எழுச்சி கொண்டுள்ள நான், மெய்யுறழ்ச்சியைத் தவிர வேறு நினைத்ததில்லை!
அதே போல், என் அரசனே!
நின்னை நாடிய இவ்வுள்ளம், ஈண்டு, நின்னைவிட வேறொன்றையும் வேண்டி நிற்கவில்லை.
ஒவ்வொரு முனைப்பும் முடிவும் ஒரு வாழ்வின் பல கூறுபாடுகள்!
எல்லாவற்றையும் விரைவிலே கடந்து வருவார் நின் அருளையன்றி வேறு நாட்டமில்லாதவர்!
படிப்படியாக வருவார், ஒவ்வொரு படியிலும் நின்று துன்புற்று நின்னை நோக்கிக் கரைந்துருகுங்கால் நீ அவரைப் படியேற்றுகின்றாய்!

வீசியெறிந்த வித்துகள் அத்தனையும் நின் விளக்கத்தின் நுணுக்கப் பொருள்களே!

அவ்வித்துகளில் ஒன்றும் பொக்காய் அமைந்திலது!

சூழலாலும், துணை வித்துகளின் ஆட்சியாலும், பன்னூருயிரம் வித்துகள் சாம்பி முளைக்கின்றன!

என் தலைவனே!
அவற்றையும் நீ அருள்காட்டிக் காணிக்கின்ருய்!

புறப் பொருள் ஆட்சிக் குறைவால், உட்பொருள் ஆட்சி குன்றியிருப்பதாகப் பலர் எண்ணுகின்றனர்!

அவ்வெண்ணங்களும். நெல்லில் உமியென நின்ருல் உருவாக்கப் பெற்றனவே!

அவ்வெண்ணங்களால், புற விளக்கம் மேவுருத அவ் வேழை வித்துகளைப் பிறவற்றின் துணையால் மேம்பாடு அடையச் செய்கின்ருய்!
ஐயனே!

நீ அமைத்துக் கொடுத்த வாழ்வைச் சரிவரப் பேணத் தெரியாதவர்க்கும் நீ வந்து உதவுகின்ருய்!

என் முதுகுப் புறத்தில் எடுக்கும் தினவை என் கைகளாலேயே சொறிந்து அடக்கச் செய்வதுபோல்,
நின்ருல் தோற்றுவிக்கப்பெற்ற வாழ்க்கையின் சாம்பிய நிலைக்கு நின்ருல் தோற்றுவிக்கப்பெற்று உள்ளொளி நிரம்பியவரையே நீ பழுது பார்க்க அனுப்பி வைக்கின்ருய்!

கண்ணுக்குக் காலும், காலுக்குக் கையுமாக, நீ அமைத்துக் கொடுத்த வாழ்க்கைக்கு இலக்காயினுர் தத்தமக்குள் உதவச் செய்கின்ருய்!

அருள் நோக்கால், நீ அமைத்துக் கொடுத்த வாழ்வைப் பயனுடைய ஒன்ருகச் செய்தவரை நீ, பெருமை பாராட்டி, மற்ருேர்க்கு அவரை இலக்காக்கி, அவர் வாழ்வை முடிவு செய்கின்ருய்!

எல்லாருடைய கை விளக்குகளையும் கொளுத்துவதற்கு, எவரேனும் ஒருவரின் அக விளக்கை நின் மூலச் சுடரால் ஒளியேற்றி வைக்கின்ருய்!

வாழ்வு என்னின் ஒடுக்கமே!

என்னை நான் ஒடுக்க விரும்பாத போழ்தே, எனக்குப் பல பொருள்களையும், பல உறவுகளையும், பல பொறுப்புகளையும் தந்து என்னை உழைக்கச் செய்கின்ருய்!

என் உழைப்பெலாம், என் ஒடுக்கத்தின் குறிக்கோளே!

என் செல்வமெல்லாம் எனக்கிட்ட வேலைப்பெருக்கமே!

என் உறவெல்லாம் எனக்கிட்ட அன்பாட்சியே!

என் இன்பங்கள் எனக்கமைந்த பருமைக் கற்களே!

நான் அவற்றெடு கட்டுண்டு, இவ்வெற்றுப் பள்ளத்தாக்கிலேயே வீழ்ந்து கிடக்க, நீ அமைத்துக் கொடுத்தவையே!

என் உரத்துக்கேற்ப, நீ என்னைப் பிளக்க நின் கைக் கோடரியைப் பன்முறை வலிந்து பயன்படுத்துகின்றாய்!

என் உள்ளத்தின் இருளுக்கேற்ப, எனக்கு உதவுகின்றாய்!

என் உயிர்த்தலைவனே!

நின்னையன்றி என் வாழ்வு வேறுபட்டதன்று!

என் வாழ்வே நீ!

நின்னெடு என்னைப் பொருத்துவதே என் வாழ்க்கை!

என் வாழ்வை நான் முடித்துக் கொள்ளவே விரும்புகின்றேன்!

தலைவனைப் பிரிந்த தலைவி தன் தனிமையை எவ்வகையானும் விரும்பாததுபோல், நான் நின் பிரிவை விரும்பவில்லை!

நினக்கும் எனக்கும் உள்ள பிரிவுக்காலமே, வாழ்வாம் என்னின் நான் அதை விரும்புவேனே?

என் தலைவனே!

நின் அகன்றுவிரிந்த வானத்து மார்பின் ஒரு மூலையில் என்னைப் புதைத்துக் கொண்டு, இவ்வுலக வாழ்வென்று, நீ அமைத்துக் கொடுத்த பிரிவால், எனக்குற்ற துயரையெல்லாம் தேம்பித் தேம்பிச் சொல்லி ஆறுதல் அடைய விரும்புகின்றேன்!

நீ எனக்கு ஏவிய துயர்க்கெல்லாம் நான் செய்த தவறுகள் எவை யென்று விளக்கம் கேட்கப் போகின்றேன்!

ஐயனே!

அந்த நாட்களை என்னை நோக்கி விரைவாக உருட்டி விடு!

என்னை நின்னெடு கூட்டிக் கொள்!

உன்னை நான் பிரிந்து வாழல் முடியாது!

என் தலைவனே! நீயே என் வாழ்வு! *

முகவர்கள் கவனிக்க!

ஒவ்வோர் ஆங்கில மாதத்திலும் 5-ம் நாளுக்குள் முந்திய மாதப் பட்டியல் தொகையை அனுப்பி வைப்பதே விரைந்தும், விரும்பியபடியும் இதழ் பெறுவதற்கு வாய்ப்பாகும். பட்டியல் தொகை நெடுநாளுக்குப்பின் வருவதால் இதழ் பெறுவதில் தொல்லை நேரும் என்பதை உணர்ந்து ஒத்துழைக்க வேண்டுகிறோம். அதிகமான படிகள் தேவைப்படுவோர் முன்கூட்டியே தெரிவிக்கவும் காலங் கடந்து தெரிவித்தால் தேவையைச் சில நாள் கடந்தே நிறைவேற்ற முடியும்.

— அமைச்சர், தென்மொழி.

பெயர்ப் பட்டியல்-4.

பாவாணர் பொருட்கொடைத் திட்டம்.

பாவாணர் கொடைத் திட்டத்தின் முடிவான அறிக்கையை வெளியிடுவதாக முன்னிதழில் குறித்திருந்தோம். அன்பர் பலரிடமிருந்தும் தாங்கள் இன்னும் கொடை திரட்டிக் கொண்டிருப்பதாகவும், விரைவில் விடுப்பதாகவும் மடல்கள் வந்த வண்ணமிருக்கின்றன. இந்நிலையில் பாவாணர்க்கு உண்மை நலம் செய்வதாக முனைந்து நிற்கும் தமிழன்பர் ஒரு சிலர், தென்மொழியின் கொடைத்திட்டத்தைப்பற்றிப் பலரிடமும் நம்பிக்கையின்மை தெரிவித்ததாக அன்பர் பலர் நமக்கு மடல் வழி அறிவித்திருந்தது மன்றித், தாங்கள் அவ்வாறு மாருகக் கருதவில்லை யென்றும், தென்மொழி பால் தங்கட்கு நம்பிக்கை உண்டென்றும், தங்கள் துணை தொடர்ந்து கிடைக்குமென்றும் உறுதியளித்திருக்கின்றனர். தென்மொழியை ஐயுறுவார் எவராக இருப்பினும் விரைவில் மெய்யுணர்ந்து தம் முன்நிலைக்கு மிகவும் வருந்துவர் என்பது உறுதி! தெளிந்தான்கண் ஐயுறவு தீரா இடும்பை தரும் என்பது என்றும் மெய்யுரையே! பாவாணர்க்கு நலஞ் செய்ய விரும்புவாரை நாம் என்றும் பாராட்டுகின்றேம். ஆனல் தாங்களே மெய்யன்பர் என்று பறை சாற்றுவாரை என்னென்போம்? இத்தகைய அசைவு நிலைகளால் தென்மொழியின் மெய்த்தொண்டிற்கும், மெய்யன்பிற்கும் புரை கற்பிப்பார் செயல் விரைவில் தானே வெளிப்படும். தென்மொழி பாவாணர்க்குச் செய்கின்ற கடனைத் தமிழுக்குச் செய்யும் தலையாய பணியாகக் கொண்டு செயலாற்றியே தீரும். ஆகையால் பங்குனி மாதத்திலேயே முடித்துவிடல்வேண்டும் என்று கருதியிருந்த திட்டத்தை மேலும் இரு மாதங்கட்கு நீட்டித்திருக்கின்றேம். ஆதலின் அன்பர்கள் தங்கள் பொருட்கொடையை வைகாசி இறுதிக்குள் விடுக்க வேண்டுகின்றேம். ஆனி யிதழில் பட்டியல் முடிக்கப் பெற்றுத் தொகையைப் பாவாணர்க்கு ஆனி 10ஆம் நாளுக்குள் தர ஏற்பாடுகள் செய்யப் பெறும். வைகாசி 31-க்குப் பின்வரும் தொகைகள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப் பெரு. தென்மொழியின் தொண்டினை அளக்க விரும்புவார் இரு திங்கள்கள் பொறுத்திருக்க வேண்டுகின்றேம். இன்னுசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல். —பெருஞ்சித்திரன்.

(6—3—64 முதல் 5—4—64 வரை அலுவலகத்திற்குப் பணம் விடுத்தவர்கள்)

திரு. சீனி. அரங்கராசன், பி. ஏ. பிடி. (க. உ. பள்ளி வேதாரண்யம், தஞ்சை)	உருபா, 5

அவர் வழி தலைக்கு 2 உருபா கொடுத்த ஆசிரியர்கள்: உருபா.

திருவாளர்கள்: இரா. கனகசுந்தரம் பி.எசி.பி.டி; புலவர். கோ. தங்கவேல், புலவர். சி. தங்கவேல், எம். குப்புராவ் பி. ஏ. பி. டி; சி. இராமச்சந்திரன், சதாசிவ கந்தசாமி, ச. சீனிவாசன் 14

திரு. கோ. வி. வேங்கடாசலம் 3

தலைக்கு 1 உருபா மேனி:

திருவாளர்கள்: புலவர். ந. ஞானசுந்தரம், வேங்கடராமய்யர், வாஞ்சீசன் பி. எசி; கே. சவுந்திரராசன், கே. இராமையன் 5

திரு. சே. நசுமுதீன் (மாணவர்) 2

தலைக்கு 1 உருபா மேனி கொடுத்த மாணவர்கள்:

திருவாளர்கள்: எம். பன்னீர்ச்செல்வம், ஆர். வீராச்சாமி, சி. பாலசுப்பிரமணியம், எம். தெட்சிணாமூர்த்தி, மு. அப்துல்வஃகாப், மு. இலட்சுமணன், அ. இராகவன், கோ. வேதரத்தினம், வி. கந்தையா, க. சிதம்பரம், ச. காதர்மொகைதீன், ச. அப்துல்அலீம் 12

தலைக்கு 50 காசு மேனி கொடுத்த மாணவர்கள்:

திருவாளர்கள்: நா. நடேசன், வே. தருமலிங்கம் ச. அவுரியா முகமது, வீ சுப்பிரமணியன், சி. மாரியப்பன், மு. சிதம்பரம், வே. கோபாலகிருட்டிணன், இரெ.சேதுமாதவன், மா.மணிவாசகன், வ. இராமன், இரா. அண்ணாத்துரை, மு. பன்னீர்ச்செல்வம், ஆர். விசயகுமார், ச. சயத்யாசீன், சா. அமிர்தலிங்கம், சொ. சுப்பிரமணியன், செ. கண்ணையன், சு. மருதமுத்து, பொ. குமரகுரு, சி. செயராமன், வி. பாலசுப்பிரமணியன், பி பன்னீர்ச்செல்வம், ச. சரவணபவாநந்தம், எ. செல்வராசு, டி. சிதம்பரநாதன், ச. இரத்தினவேலு, பி. கலியாணசுந்தரம், ஏ. பாலசுப்பிரமணியம், சி. வடிவேலு, சி கமாலுதீன், செ. என்றிபால், சி கிருட்டிணமூர்த்தி, என். இருளப்பன், ச. சுப்பிரமணியன் 17

தலைக்கு 25 காசு மேனி கொடுத்த மாணவர்கள்:

திருவாளர்கள்: நடராசன், சண்முகநாதன், சின்னையன், முத்துக்கிருட்டிணன், வேதையன், சண்முகவேலு, சின்னதுரை, சுப்பிரமணியன், வீரபத்திரன், விசுவநாதன், கிருட்டிணசாமி, ஆறுமுகம், பக்கிரிசாமி, வேதமணி, தட்சிணா

மூர்த்தி, தங்கவேலு, தட்சிணாமூர்த்தி, அப்துல் ரசாக், கிருபானந்தன், தியாகராசன், சுப்பிரமணியன் இலட்சுமணன், சண்முகம், ராசாராமன், சீனிவாசன் நாகலிங்கம், தருமலிங்கம், அப்துல்பாரி, மசுத்தான், சந்திரசேகரன், பஞ்சாட்சரம், செகந்நாதன், முகைதீன் பிச்சை, தமிழ்வேந்தன், சிதம்பரம், சோமு, பாலசுப்பிரமணியன், இராமன், இராசு, பக்கிரிசாமி, இசுமாயில், காசிநாதன், வேதரத்தினம் பாலசுப்பிரணியன். 11

வேதாரண்யம், ஆயக்காரன் புலன் 2, கழக உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள். (பெயர்கள் தரப் படவில்லை) 21

திரு. கா. சிவப்பிரகாசன், பி. எசி. கோவை-3 5

திரு. இரெ. மல்ல பிள்ளை பி. ஏ. பி. டி ஆசிரியர். க. உ. பள்ளி மேட்டுப்பாளையம் திருச்சி மா.வ. அவர்கள் வழி:

தலைக்கு உருபா 5 மேனி கொடுத்த ஆசிரியர்கள்:

திருவாளர்கள்: ஆர். மூக்கன் பி.ஏ.பி.எசி;பிடி; சி. எசு. இராமகிருட்டிணன் பி. ஏ. பி. எசி. பி. டி., த. விக்டர் பி.ஏ.பி.டி; இரெ. மல்ல பிள்ளை பி.ஏ பி.டி; பி. வீரையா, பி. ஏ. பி. டி. இரா. இராமசெயம், பி. எசி. பி. டி, புலவர். பா. நாராயணன், புலவர். மு. துரைசாமி, எம். சந்தானம் எல். சி. ஈ. 45

திரு. ம. சுந்தரராசு பி. எசி. 10

தலைக்கு 2 உருபா மேனி கொடுத்த ஆசிரியர்கள்:

திருவாளர்கள்: புலவர். கோ. இராமன், புலவர். இல. இராசமாணிக்கம், ஏ. சுந்தரம், டி. தேவராசு, எம். பொன்னுசாமி, அ. அரங்கராசு, வி அரங்கசாமி, டி. கோதண்டராமன், பி. செல்வராசு, திருவாட்டியார்: வி செயலக்குமி, உருக்குமணிபாய் அரங்கசாமி 22

திரு. மு சோமசுந்தரம் 3
,, சான் சோசுவா வில்சன் பி காம். பி. டி. 3
,, தை. பெரியக்காண்டி 1
,, ந. வேணுகோபால் 1

தஞ்சை இளஞ்சித்திரன் வழி பெற்ற தொகை (முதல் முறை)

திரு. மு. அரங்கநாதன் எம்.ஓ.எல் 5
,, கு. சிவஞானம் எம். ஏ. 5

,, கோ. சண்முகசுந்தரம் எம். ஏ. எம். எசி. 3
,, க. தங்கவேலு 2

தலைக்கு உருபா 1 மேனி கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: வேல்சம்பந்தமூர்த்தி, இரா. கணேசன், சீ. நடராசன், மீனு. இராமதாசன், கு. பெரு. இராமையன், வெ. கந்தசாமி 6

தலைக்கு 50 காசு மேனி கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: சி. கிருட்டிணன், கே. துரைசாமி ஆர். கோதண்டபாணி, சே. கலியபெருமாள், மு. பாலுசாமி, ப. சுந்தரேசன், புலேந்திரன், கோ. வீரப்பன், அ. சிவநேசன் 4—50

திரு. ஆ. கோவிந்தராசன் 0—51

தலைக்கு 25 காசு மேனி கொடுத்தவர்கள்:

நாராயணசாமி, கோ. நடராசன், கா காளியப்பன், வீ. பெரியதம்பி, ஆ திருப்பதி, க. சாமிநாதன், கா. கோவிந்தராசன் 1—75

திரு. மெ. ந. தங்கராசு 0—75

கல்மண்டபம் (தெ. ஆ.) தொடக்கப்பள்ளி ஆசிரியர் திரு. துரை. நாராயணசாமி அவர்கள் வழி:

தலைக்கு 5 உருபா மேனி கொடுத்த ஆசிரியர்கள்:

திருவாளர்கள்: வீ. கோவிந்தசாமி, இ. பட்டாபிராமன், வி. வேணுகோபால் 15

தலைக்கு 2 உருபா மேனி கொடுத்த ஆசிரியர்கள்:

திருவாளர்கள்: அ. வேங்கடசுப்பிரமணியன், இ. முத்துச்சாமி பி. எசி, தெய்வ. சங்கரன், எம் கருணாநிதி, மு. இறைவிழியன், பரசுராமன், மு: கோபாலகிருட்டிணன், நா. வைத்திலிங்கம் 16

தலைக்கு 1 உருபா மேனி கொடுத்த ஆசிரியர்கள்:

திருவாளர்கள்: ப. அண்ணுசாமி பி. காம், வ. கோதண்டபாணி, ஆ. அரங்கநாதன், பெ. இராமலிங்கம், குரு. ஆதி. வீரராகவன், சீனிவாசன், கிருட்டிணமூர்த்தி, தங்கவேலு, ப. சுப்பிரமணியன், தனராமன், வீரப்பன், கே. இராமச்சந்திரன், என் மாணிக்கசாமி, சவுரிராசன், வெ பெருமாள், என். செல்வராசன், இ பாண்டுரங்கன், து. சிதம்பரநாதன், நாராயணா. செம்மனேரி, என். வேணுகோபால், சு. குப்புச்சாமி, கலியபெருமாள், கி. அரிஅரன், ஆ. முத்துக்குமாரசாமி, கி. குணசேகரன்,

சி. வேணுகோபால், பொ. சுப்பிரமணியன், முருக. சடகோபன், வ இராமசாமி, திருவாட்டியார்: மா. இளம்பரிதியாள், சாவித்திரி, விருத்தாம்பாள் 32

தலைக்கு 50 காசு மேனி கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: சு கிருட்டிணமூர்த்தி, வீ. இராமசாமி, துரை. மாவிறையன், இராதாகிருட்டிணன், பி. கிருட்டிணமூர்த்தி, செயலட்சுமி. 3

திரு ந. தட்சு அன்பு நிலையம் மணலூர். 5

அவர்வழி மணலூர் ஊராட்சி ஒ. பள்ளி மாணவர்கள் 2—60

திரு. ப. வேங்கடேசன் சென்னை-1 5

திரு. கடலூர் தமிழ்மணி சென்னை-1 3

திரு. க. பொழிலன் பெரம்பூர், சென்னை-11 1

திரு ஆ. சங்கரலிங்கம் திருப்பூர் 2

இவர் வழி திருப்பூர், மேட்டுப்பாளையம் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் தலைக்கு 2 உருபா மேனி

திருவாளர்கள்: தி. நா. இராமசாமி, அரு. செல்லப்பா, இரா. திருதரன், தெ. துரைசாமி, ப. சண்முகம், வி. வின்சென்ட் செயசேகரன், சா. கிருட்டிணசாமி. 14

தலைக்கு 1 உருபா மேனி கொடுத்த ஆசிரியர்கள்:

ப. முத்தையா, த. இலெ. இராமச்சந்திரன், கோமகன், கு. கனகமணி, சா. பொ. மாணிக்கம், திருவாட்டி: ஆ. அந்தோணியம்மாள், திருவாளர்: செ. அக்பர் (பத்மாவதிபுரம் ஆசிரியர்), கு. பெரியசாமி, பி. ஆர் பாலசுப்பிரமணியம், ஆ. க. பழனிச்சாமி, இரா. முருகன், இராயப்பன், ச. சொக்கலிங்கம், நடராசு, இரா. சொ. இராமசாமி, சேம்சு. 16

அவர் வழி தலைக்கு 50 காசு கொடுத்த ஆசிரியர்கள்:

திருவாட்டியர்: பி.ஆர் கமலாபாய், தி. சரோசா சு. தி. சரோசா, ச. துளசிபாய், ஆ. தெரசாசெயம், மா. இலெட்சுமி, திரு க மயில்சாமி. 3—50

அவர்வழி பி. சண்முகம் 3

திரு. வே. அரங்கன் கோயிற்பட்டி (நெல்லை மா. வ.) 1

திரு. உலகநாதன் (பொறியியற் கல்லூரி) கோவை 13. 1

பண்டாரகர் திரு. வ. சுப மாணிக்கம் (தமிழ்ப் பேராசிரியர் அழகப்பா கல்லூரி காரைக்குடி – 3) அவர்கள் வழி அழகப்பா கல்லூரி கலைக் கழகம். 31

அவர் வழி: அழகப்பா கல்லூரி தமிழ்த்துறையினர் 25

(75-ஆம் பக்கம் பார்க்க)

குமுகவியல்.

உலக அரசு.

(World Government)

ஆங்கிலத்தில்: பெர்ட்ரன்ட் ரசல்

தமிழில்: 'வழுதி'

தற்கால நிலையில் உலக அரசு என்பது ஒரு கனவுக் குறிக்கோளாகவே இருந்து வருகின்றது. உலக நாடுகளின் மன்றம் (United Nations) ஒரு வகையில் உலக அரசாக இயங்கக் கூடும் என்று ஒரு சிலர் நம்பினர். ஆனால் அனைத் தாற்றலும் பெற்ற உலக அரசாவதற்குரிய தகுதி இவ் வுலக மன்றத்துக்கில்லை. அரசு என்றால் தன் ஆணையை மீறுபவரை அடக்கும் ஆற்றல் அதற்கிருத்தல் வேண்டும். உலக மன்றத் துக்கு அவ்வாற்றல் இல்லை. வல்லரசுகட்குக் கொடுக்கப்பெற்ற முட்டுக் கட்டை உரிமையால் (Veto) அது கட்டுப்படுத்தப் பெறுகின்றது. எடுத்துக்காட்டாக, பின்லாந்து உருசியாவைத் தாக்கநினைத்தால் அதனைத் தடுத்துநிறுத்த மன்றத்தால் இயலும். ஆனால் உருசியா பின்லாந்தைத் தாக்க நினைத்தால் மன்றம் அதனைத் தடுக்கவியலாது. கொரியாவில் உலக மன்றத்தின் நடவடிக்கைகள் வெற்றியடைந்தன என்றால், உருசியா ஓரள வுக்கு ஒதுங்கியிருந்ததே காரணம். ஆதலின், எவ்விதக் குறுக் கீடுமின்றிச் செயற்பட வேண்டுமாயின் இன்றைய உலகமன்றத் தினைவிட வலிவும் ஆற்றலும் வாய்ந்த மற்றோர் அமைப்பை ஏற்படுத்தியே தீர வேண்டும்.

உலக நிலைமையில் பெரும் புரட்சி ஏற்பட்டாலன்றி நடக்க வியலாத ஒன்றைப்பற்றி இப்பொழுதே ஏன் மூளையைக்குழப்பிக் கொள்ளவேண்டும் என்று கேட்கலாம். புரட்சி எப்படி ஏற்படும்? நாமாகத்தான் ஏற்படுத்த வேண்டும். இல்லையேல் உலகில் அமைதி ஏற்பட வழியில்லை. இன்றோ நாளையோ ஏற்படக் கூடும் ஒரு குறிப்பிட்ட உலகப் போரைப் பற்றி மட்டுமே நான் பேசவில்லை. மாந்தரின் வருங்கால மெல்லாம் கொந்தளிப் பும், குழப்பமும், இடர்ப்பாடுகளும் சூழும் வகையில் எப்பொழு தும் நம்மை வளைத்துக்கொண்டிருக்கும் போர் அச்சத்தையே மனத்திற் கொண்டு பேசுகின்றேன். அங்கொன்று மிங்கொன்று மாகக் கிளைத்துக் கொண்டிருக்கும் உலகப் பூசல்கள் அவரவர் கூடிப் பேசுவதன் மூலம் தீர்ந்துவிடக் கூடும். தற்காலிக அமைதியும் நிலவக் கூடும். ஆனால், உலக அரசு ஒன்றை

ஏற்படுத்தாமல் விடுவோமாயின் இன்றில்லாவிட்டால் என்ருயி னும் ஒரு நாள் ஏதாவதொரு நாடு வெறிபிடித்துப் போரை உருவாக்கிவிடக் கூடுமன்ருே?

வெடி மருந்துக் கிடங்கினருகில் யாரும் புகை பிடிக்காத வாறு அறிவிப்புப் பலகைகளால் தடுக்கக் கூடும். ஆனல் என்றும் அதே நிலை இராது. என்ருவது ஒருநாள் மறதிமிக்க ஒருவரால் ஒரு பொறி சிதறினல் போதும். வெடி மருந்துக் கிடங்கே அழிந்து விடும். அதுபோலவே நிலையான, என்றும் போரே ஏற்படாத ஒரு சூழ்நிலை உருவாகாமற்போயின் அணுக் குண்டுகளையும் நீர்வளிக் குண்டுகளையும் நிறைத்து வைத்துக் கொண்டிருக்கும் உலகின் வருங்காலம் என்னவாயிருக்கும் என்று சொல்ல முடியாது. மற்ருேர் உலகப் போர் ஏற்படு மாயின் போரில் ஈடுபடுவோர் அனைவருமே அழிவர் யாருக்கு வெற்றி என்ற பேச்சேகிடையாது, உலக நாடுகள் அனைத்துமே இதை அறியும். உலகத் தலைவர்கள் அனைவருமே இதைத்தான் கூறுகின்றனர். ஆனல் இதைத் தெரிந்து வைத்துக் கொள்வது மட்டுமே போரை வராமல் தடுத்துவிடும் என்று நினைப்பதுதான் தவருகும். ஒவ்வொரு நாடும் இதனை உணர்ந்து ஒழுங்காக நடந்து கொள்ளும் என்று நெடுநாளைக்கு எதிர்பார்க்க முடியாது. வெறியர்கள் பலர் ஆட்சியணை ஏறிப் பெருந் தீங்கு விளைத்த வற்றையெல்லாம் கண்டிருக்கின்ருேம். பிற்காலத்திலும் அத்தகு வெறியர் தோன்ருர் என்பது என்ன உறுதி? அவ்வாறு தோன்றுவராயின் அவரால் ஏற்படும் அழிவும், கேடும் முன்னை யினும் பன்மடங்கு கொடியனவா யிருக்கும் என்பது உறுதி.

உலகளாவிய பெரும் போர்கள் இனி உருவாக இயலா என்ற நிலைஏற்பட்டாலன்றி,மாந்த இனம் தொடர்ந்து காப்போடு வாழல் முடியாது அவ்வாறு வாழ்தல் வேண்டுமாயின் உலக அரசு அமைப்பதைத் தவிர வேறு வழியும் இல்லை. இத்தகைய உலக அரசின் ஆணை வலி எத்தகையதாக இருத்தல் வேண்டும்? போரைத் தடுப்பதற்கு எந்த அளவு அரசாணை தேவையோ அந்த அளவோடுதான் இருக்க வேண்டும். மற்ற வற்றிலெல்லாம் அந்தந்த நாட்டின் உரிமைக்குப் பழுதேற் படுதல் கூடாது இத்தகைய உலகக் கூட்டாட்சியிற் பங்கு பெறும் நாடுகளனைத்தும் தங்கள் தங்கள் அளவில் கூட்டாட்சிக ளாகவே இயங்குதல் நலம். எடுத்துக் காட்டாக; மேலை உலகுக் கூட்டாட்சி, பொதுநலக் கூட்டுறவு. (Common wealth) பொதுவுடைமை உலகு.என்றிருக்கலாம். தலையாயது இதுதான்: உள் நாட்டமைதியைக் காப்பதற்குரிய காவற் படையும் சிறு படைக் கலங்களும் அல்லால் பிற படைகள் படைக் கலங்கள் அனைத்துமே உலகக் கூட்டாட்சியின் தனியுரிமையாக இருத்தல் வேண்டும். இந்த உலகப் பெரும்படையில் குறுகிய நாட்டுப்

பற்றுப் புகுந்து கலகம் விளைவித்து விடாமலிருக்கத் தகுந்த காப்பிருக்க வேண்டுமாயின், ஒவ்வொரு படைப்பிரிவும் பல இன மக்களால் உருவாக்கப் பெற்றதாக இருத்தல் வேண்டும். ஒவ்வோரினத்துக் கொரு படைப்பிரிவு என்றால் கலகமும் பூசலுமே நேரும்.

அடுத்துச் சிறப்பானது, உடன்படிக்கைகளைக் கட்டுப்படுத்தும் உரிமையாகும். உலக அரசின் இசைவு பெறாத எந்த உடன்படிக்கையும் செல்லாது என்றிருத்தல் வேண்டும். காலங் கடந்ததால் பயனற்றுப்போன உடன்படிக்கைகளைக் கலைத்து விடுவதற்கும் உலக அரசுக்கு உரிமை இருத்தல் வேண்டும். இருநாடுகட்கிடையே பூசல் ஏற்பட்டால் உலக அரசு தானாகவே குறுக்கிட்டுப் பூசலை நிறுத்தித் தன் முடிந்த முடிபை வழங்கும் உரிமை யுடையதாயிருத்தல் வேண்டும். அம்முடிபை எந்த நாடாவது எதிர்த்தால் தன் படை வலிவால் அதனை அடக்கித் தன் ஆணையைச் செலுத்தவும் வேண்டும்.

மக்கட் பெருக்கத்தைப் பற்றிய சிக்கல் எழக்கூடும். நெருக்கடிமிக்க நாட்டிலுள்ள மக்கள் நெருக்கடியில்லாத நாட்டிற் குடியேற விரும்பக்கூடும். ஆனால், நெருக்கடியில்லாத நாட்டினர் பிறரை வரவேற்க விரும்பாமல் இருக்கலாம் எனவே இதில் முடிபை அந்தந்த நாடுகட்கே விட்டுவிடுவதுதான் நல்லதாகும். உலக அரசு இதிற் குறுக்கிடுவதைச் சில நாடுகள் விரும்பாமற் போகக்கூடும். அவ்வாறு குறுக்கிட்டால் பெரும் பூசல்கள் எழுந்து உலக அரசின் அமைதி காக்கும் பணியே நடவாமற் போகக்கூடும். ஆனால் உலகினின்று பெறும் இயற்கைப் பொருள் (Raw materials) களைப் பொறுத்த வரையில் உலக அரசுக்கு ஒரு சிறிதாவது தலையிடும் உரிமை வேண்டியதுதான். இயற்கைப் பொருள்களின் கட்டுப்பாடற்ற-தனியுடைமையை ஒரே தனிநாடு மேற்கொண்டிருப்பது முறையாகாது என்றே நான் நினைக்கின்றேன்.

இவ்வுலக அரசு அழியாவகையில் தனிநாடுகளோ, அவை கூட்டுச் சேர்ந்தோ அழிவுப் படைகளைச் செய்யாதவாறு தடுக்க வேண்டுமாயின் இத்தகைய பொருட்களைச் செய்தற்குவேண்டிய வெடிப் பொருட்கள் அனைத்துமே உலக அரசின் தனியுடைமைகளாக இருத்தல் வேண்டும். இதை மீறிவிடாமல் தொடக்கத்திலே கண்காணிக்கும் உரிமையும், மீறியவரை ஒறுக்கும் ஆணையும் இவ்வரசுக்கு வேண்டும். நுண்ணுயிர்ப் போர் (Bacteriological warfare) எனும் கொடிய போர் எழுமாயின் வருங்காலம் மிகக் கொடிதாயிருக்கும். அது நேராமற் கண்காணிப்பதும் மிக அரிதாயிருக்கும். எனவே, காலத்துக்கேற்ப உலக அரசும் தன் அரசாணைகளை விரிவுபடுத்திக் கொண்டே

செல்லும் என எதிர்பார்க்கலாம். ஆயினும் மாந்தர்தம் உணர்வு நிலையில் மாறுதல் ஏற்படுமாயின் இந்த ஆணை விரிவுக்கும் எல்லை இல்லாமற் போகாது. உலகம் அமைதி வாழ்க்கைக்கு நன்கு பழக்கப்பட்டுவிடுமாயின், தத்தம் கொள்கையை நிலை நாட்டப் போரை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை மக்கள் வெறுக்கத் தொடங்குவர். மாந்த இனத்தை அழிக்கும் கருவிகள் படிப்படியாகப் பொதுமக்களின் மதிப்பை இழந்து போம்.

இத்தகைய உலக அரசு அமைக்கப் பெற்றுவிடும் என்று நான் கூறத் துணியவில்லை. நான் கூற விரும்புவதெல்லாம், மாந்த இனம் அழியாதிருக்க வேண்டுமென்றால் இத்தகைய உலக அரசு ஒன்றுதான் வழி என்பதேயாகும். ஒருவேளை மாந்தனின் குழப்ப உணர்வுகள் தலையெடுத்து ஆட்சி அமைப்பைவிட்டு அழிவை நோக்கியே மாந்த இனத்தை இழுத்துக் கொண்டு செல்லவுங் கூடும். இப்படி நேரும் என்று நான் நம்பவில்லை. ஆனால் நேராது என்று துணிவாகக் கூறவும் முடியவில்லை. இவ்வரசமைப்பால் தனி நாடுகளின் உரிமைகள் சிறிது குறையும் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் வரலாற்றுக் காலமுதல் இவ்வாறு சில நன்மைகட்காகச் சில உரிமைகள் விட்டுக் கொடுக்கப்பட்டுத்தான் வந்திருக்கின்றன. அதுபோலவே இப்பொழுதும் நேர்வதில் பிழையில்லை. மக்கள் பெருகப் பெருக, அறிவியல் வளர வளர மாந்தனின் தன் முனைப்புக்கு (initiative) ச் சட்டத்தின் வாயிலாய்ச் சில தடுப்புகள் தேவையே. அதனால் நமக்கு இதுவரை மகிழ்வூட்டி வந்த சிலவற்றை நாம் இழக்க நேரலாம். பெரும் போர் மறவர்களைப்பற்றிய கதைகளெல்லாம் மகிழ்வூட்டுவனதாம். ஆனால் இனியும் அத்தகைய கதைகள் நிகழ்ந்து கொண்டிருந்தால் விளையும் கேடு பெரிதன்றோ?

தன் முனைப்பு தீய வழியில் செல்வதைத் தடுத்து நிறுத்துவதாலேயே அதனை முற்றும் தடைசெய்து விடுவதாகாது. தன் முனைப்பு மிக மிக இன்றியமையாதது. அறிவியலிலும், இலக்கியத்திலும், பொருளியல் நுணுக்கத்திலும் குமுக அமைப்பு முறையிலும் ஆக்க வழியில் செல்கையில் இத் தன்முனைப்பு முன்னினும் பன்மடங்கு செழித்தோங்கும் என்றே எதிர்பார்க்கலாம். குழந்தைகட்கு வேண்டுமானால் கட்டுப்பாடற்ற உரிமை மகிழ்வூட்டக் கூடும். ஆனால் பெரியவர்கட்கும் அதே நிலை இயல்வதன்று மாந்த இனம் வளர வளர, குழந்தைத் தன்மைக்குரியவற்றை உதறித் தள்ளவேண்டும். உலக அரசு அமையா வழி மாந்த இனம் தன் குழந்தைத் தன்மையினின்று வளர்ச்சிபெறுது என்றே கூறலாம்

—*—

தமிழுணர்வு:

ஊட்டி வளர்த்தே உயர்ந்தோனாய் ஊர்தனில்
வாட்டமற நல்வழியில் வாழ்விப்பார்;—நாட்டிலவர்
ஈன்றாள் ஒருத்தி;மற் றேனையவள் ஈடில்லாச்
சான்றோர் வணங்கும் தமிழ்.

—மு. வழித்துணைவன், அரக்கோணம்.

தமிழ் மா நிலத்தைத் தமிழனே ஆள்க.
தமிழ்த்தாய் தமிழர் உணர்வினை ஆள்க.
அழைக்கும் பெயரெலாம் அருந்தமிழ் ஆகுக.
விழைவுறு கொள்கைகள் விளக்கிடும் இயக்கத்
தலைமையும் தமிழின் தகுதியால் சிறக்க.
கலைநிலை யுள்ளக் கலைஞரே யாயினும்
அவரும் தமிழ்வழி அமைந்தோர் ஆகுக
எத்துறை யாயினும் இயக்குவர் தமிழர்
எந்நெறி யாயினும் எழில்தமிழ்ச் செந்நெறி!
தமிழ்ப்பகை இலையே; தமிழ்க்கொலை இலையே.
தமிழ்க்கினி என்றும் தளைநிலை இலையே.
அடியவர் தமிழின் அன்பருக் கல்லால்
அடிமையர் எனும்பே ரவலமும் இலையே.
அணுவள வேனும் தமிழ்க்கனா கொன்றே,
தினையள வாகிலும் தமிழ்ப்பகை வென்றே,
பனையெனும் இன்னல் பஞ்சென உன்னும்
அன்னோன் இணையடி அழகுத் தாமரை
என்முடி மேலாம் என்குவன் யானே!

— (புலவர் அரி-மதி.)

வாழ்ந்த தமிழரினம் தாழ்ந்த நிலைபோக்கச்,
சூழ்ந்த பகையெல்லாம் சுட்டெரித்து நீணிலத்தில்
உய்யும் வழிகண்டு, தொண்டு பலசெய்தே
எய்துவோம் எய்தாப் புகழ்.

– ம. நா. தங்கவேல், சிங்கப்பூர்.

நல்லவராய் இருந்துவிட்டால் அதுபோ தாது;
நாற்றிசையின் வல்லுநரும் நம்சொல் போற்ற,
வல்லவராய்த் தமிழரெலாம் உயர்தல் வேண்டும்;
வாழ்த்துப்பா இசைப்பதனுல் வளர்ச்சி இல்லை.
இல்லாத துறையில்லை தமிழில் என்ன
இருக்கின்ற பன்மொழியின் தொன்னூற் செல்வம்
கல்லாத குறைநீங்கத் தமிழில் யாவும்
காட்டுகின்ற ஞான்றன்ருே தமிழே வெல்லும்!

– அலைமணற் குழவி, வீசூர்.

உண்ணுவர்; உடுப்பார்; வளமுற உறைவார்;
உயர்குறிக்கோள்
நண்ணுதல் இலராய் நன்மொழி தமிழை, நாப்புடைக்கும்—
விண்ணதிர் முழக்கால் வீழ்த்திட முனைவர்; வியன்தமிழே
புண்ணுடன் அமையும் நின்னிலை கண்டுளம் பொங்கிடுமே!

-ஞா. அந்தோனிராசு, விரியூர்.

காற்றில் சிறந்தது தென்றலே;
கலைவலார் போற்றுதல் தமிழ்ப்பண்பே;
போற்றும் நூலில் சிறந்ததுயர்
பொய்யா மொழிஎனும் திருக்குறளே;
நாற்றிசை யாவும் பேசிமகிழ்
நன்மொழி பலவுட் சிறந்ததுவே
நேற்றும் இன்றும் என்றென்றும்
நின்று நிலவும் தமிழ்நீயே.

—வ. தமிழரசு, சென்னை—21.

எழில்தமிழில் அறிவியலைப் பயில்வ மென்ருல்
''எங்கேனும் அச்செயலும் நடக்குமோதான்?
எழில்தமிழாம்! இன்பமுண்டாம்! யாரே சொல்வார்?
எங்கேனும் தமிழ்பேசி உயர்வ துண்டோ?
எழில்தமிழர் வாழ்வோங்கத் தமிழே வேண்டா''
என்றேதாம் உரைக்கின்ருர் உண்டே, ஐயோ,
எழில்தமிழர் குடிப்பிறந்தார் இவரோ? அன்ஞர்
எட்டுணை நம் நாகரிகம் காப்ப துண்டோ?

–ப. சிவகுமரன், மாநிலக் கல்லூரி, சென்னை.

பழையது; மெய்த்தெளி வுடையது; முக்கனி
பயில்சுவை முற்றியது;
விழுமிய பற்பல வளமும் அ டுத்துநல்
எளிமையு மிக்கது; நீள்

மொழிபல பெற்றிடும் அரிய க ருத்தவை
முழுவதும் உற்றது; சீர்
தழுவிய (து) எய்ப்பிடை எமதரும் வைப்பிது
தமிழர் இ லக்கியமே!

கொடையை வளர்த்தது; கலையை வி ளைத்தது;
கொலையை வெ றுத்தது; நல்
நடையில் நி லைத்தது; நிலமுழு துற்றது;
நளிர்கடல் ஒத்துவரும்
படையை மு ரித்தது; வடபனி வெற்பள (வு)
அரசு ப டைத்தது; நேர்
தடையை அ ழித்தது; தலைமை நி றுத்தது
தமிழர் இ லக்கியமே!

—அரங்க. சீனிவாசன், பொன்மலை.

இந்தி எதிர்ப்பு.

நீரில்லா ஊர் பாழ்; நிலையில்லாக் காதல்பாழ்;
வேரில்லாச் சொல் பாழ்; விளைவில்லாச் செய்கைபாழ்;
பாடாத பண் பாழ்; பழகாதார் கேண்மைபாழ்;
ஓடாத தேர்பாழ்; உதவாத செல்வம் பாழ்;
சூடாத பூப்பாழ்; சுவையில் கனியும் பாழ்;
ஆடா அரவம்பாழ்; ஆர்ந்தசையாத் தென்றல்பாழ்;
நாடாள வந்திடினும், நல்ல வளமில்லாக்
கேடான இந்தியும் பாழ்!

—வியாசை, சரவணக்குமார், சென்னை-12.

உண்டதுவும் நன்றாய் உறங்கியதும் போதாதோ?
மண்ணுலகில் சீர்கெட்ட மாத்தமிழா,–கண்விழித்(து)
உந்தையர் நன்மொழிக் கிங் குற்ற துயர் பாராய்
இந்தியினை ஓட்ட எழு.

மானம் பெரிதென்று வாழ்ந்த திருநாட்டில்
பேணும் உயிர்பெரிதாய் எண்ணுவையோ?–கானெலாம்
போவிப் புகழ்தேடிப் போவாயோ? செந்தமிழைக்
கூவிக்கு விற்பாயோ கூறு?

விழியிழந்த மெய்யும், விளக்கிழந்த வீடும்
மழையாம் வளமிழந்த மண்ணும்-எழிலிழக்கும்.
நற்றாய் மொழியிழந்த நாடோஎல் லாமிழந்து
புற்றாம்; முளைக்குமடா புல்!

—கே. பூங்காவனம்.

பாலூட்டி வளர்த்தமொழி; இலக்கி யத்தால்
பண்பாட்டைத் தந்தமொழி; பெற்ற அன்னை
தாலாட்டில் இசைத்தமொழி; உலகம் போற்றும்
தக்கவுமொழி; கழகமொழி; கருத்துப் பொங்கும்
நூலெல்லாம் கொண்டமொழி தமிழ் இருக்க,
நுண்ணறிவு கொண்டார்கள் போற்றி நிற்கக்,
கோலூன்றி வருகின்ற இந்தி யாலே
கோலோச்ச விழைவாரே குருடர் ஆவர்.

– புலவர். தமிழ் ஒளி, ஆம்பறபட்டு.

வருகின்ற இந்தியினை வரவேற்றுப் பாராட்டித்
தெருவெங்கும் அவளாடத் தேனினிமைத் தமிழ்வாட
விடுவாயோ?–துயர்ப்–படுவாயோ?

மொழியின்றேல் நாடில்லை; மூத்தஇனப் பண்பில்லை;
எழிலாரும் தமிழ்நூற்கள் ஏற்றமுற வழியில்லை.
மறுப்பாயோ?–வாயில்–திறப்பாயோ?

விழியதனை விற்றுவிட்டு வேறொருவர் கைப்பிடித்து
வழிநடந்தால் ஒட்டுறவாய் வாழ்ந்திடலாம்–என்னும்சொல்
சரிதானோ?–ஏற்கும்–நெறிதானோ?

''களிறேநீ புலால்உண்ணக் கற்றுக்கொள்; உறவாடிக்
களிகொள்வோம்'' என்றுநரி கதைப்பதனைக் கேட்பாயேல்
சிரிப்பாயோ?–இல்லை–பொறுப்பாயோ?

– புதுப்பதி இளஞ் சிற்பி.

சொந்தமொழி தூய தமிழிருக்க, நம்நாட்டில்
இந்தி எதற்கோகாண், ஏறனையாய்?–முந்துபுகழ்
நந்தமிழ் வாழ்வுயர நல்லதொண்டு செய்வதற்கு
வந்திடுவாய் போர்க்களம் நீ!

– இர. மா. பெ. பண்பரசன், கோவூர்.

நண்பரென வருவாரை நாளும் பேணி
நல்வாழ்க்கை அளிப்பதுவே தமிழர் பண்பாம்.
அன்புடமை தமிழர்க்கே உடன் பிறப்பாம்;
அவர்வாழ்வு பிறருக்காய் வாழ்வ தொன்றும்;
தம்முயிரைக் கேட்டிடினும் தயக்க மின்றித்
தருகின்ற பெருந்தன்மை அவர்க்குண் டேனும்
இன்பமுறு தமிழ்மிழ்தை அழிப்பதற் கிங் (கு)
இறையவனே வந்தாலும் எழுந்தெ திர்ப்பார்!

– நாஞ்சில் தமிழ்த்தாசன், சென்னை-1.

பட்டம், பணியால், பணச்செருக்கால் பைந்தமிழை
மட்டப் படுத்தும் மருளுடையார்—கொட்டம்
தகர்த்திடநீ பொங்கிஎழு! தன்மானம் காத்துப்
புகழ்பெற்று மண்ணுக்குப் போ.

— குராயூர் எழிலன், தே. கல்லுப்பட்டி.

பலகோடிச் செல்வம் வேண்டா,
பாராளும் பெருமை வேண்டா;
உலகெலாம் போற்றும் நந்தம்
ஒப்பற்ற தமிழுக் காகக்
கலங்காது நின்றான்; தாயைக்
காத்திடச் செத்தான் என்ற
விலையிலாச் சொல்லே வேண்டும்;
விழித்தெழு தமிழா, இன்றே!

— அர. தங்கராசன், பாலச்சேரிக்காடு.

இந்திமொழி தமிழ்நாட்டில் நுழைந்த பின்பும்
எதிர்ப்புணர்ச்சி இல்லாதார் இறந்தால் என்ன?
சொந்தமொழி தமிழிருக்கக், கொஞ்ச மேனும்
சுரணையற்று மானமிலாத் தமிழ ரெல்லாம்
வந்தமொழி வால்பற்றி அலைகின் றாரே
வாய்விட்டுச் சொல்வதற்கே வெட்கம்! ஐயோ,
வெந்தொழிந்து சாம்பலெனப் போகு முன்பே
வீறுடனே போர்புரிந்து பகையை மாய்ப்போம்.

— பெ. இளவரசு, கிருட்டிணபுரம்.

எழுந்திடு, எழுந்திடு இளந்தமிழ் மகனே,
இந்தியை எதிர்த்திடு, இளந்தமிழ் மகனே,
தமிழ்மகள் சிறப்பினைத் தொலைத்திட நினைக்கும்
தரமிலி. இரண்டகத் தமிழனை முதலில்
உமிழ்ந்திடு, உமிழ்ந்திடு, இளந்தமிழ் மகனே,
உண்மையை உணர்த்திடு, உணர்வுடை மகனே.
பிறமொழி இவண்வர விழைந்திடும் பதரே.
பிரிவுற உனக்குள தொருமுழக் கயிறே!

— நாஞ்சை. அ இரத்தினம், கோவை-3.

காதல்:

வட்டநிலா முகம்காட்டும்; வளர்காதல் மனம்வாட்டும்.
விட்டகலா நினைவூட்டும்; வெந்தழலில் உயிர்வாட்டும்.
கட்டடங்காக் களிப்பூட்டும் கண்மணியே பிரிந்தாயோ?

இருவிழியும் வேல்காட்டும்; இடையழகு நூல்காட்டும்.
ஒருமொழியில் உலகாட்டும்; ஒண்கனிவாய் மதுவூட்டும்!
அருள் வடிவில் எனைவாட்டும் ஆருயிரே பிரிந்தாயோ?

— செய சமுத்திரகுப்தன், தலைஞாயிறு.

பொது:

இரும்பொத்த நெஞ்சமது வேண்டும்; ஏழை
இன்னலைக்கண் டிளகுவதாய் இருத்தல் வேண்டும்.
கரும்பொத்த மொழியுடையாள் துணையும் வேண்டும்;
கள்ளமிலா இல்வாழ்க்கை வாழல் வேண்டும்.
வரம்பற்ற அறிவுபெறல் வேண்டும்; ஞால
வாழ் (வு) அதனுல் ஒளிவீசி உயர்தல் வேண்டும்
சுரும்பொத்த சுறுசுறுப்பு வேண்டும்; என்றும்
சூழ்ந்துள்ளோர் பயனுறவே உழைத்தல் வேண்டும்.

— கண்ணனந்தங்குடி, கோவிந்தராசன்.

இரும்புநெஞ்சம் படைத்தவர்கள் கொஞ்சமேனும்
இரக்கமின்றி ஏழைகளைப் பிழிந்தெடுத்துப்
பெரும்பொருளைப் பெருக்குகின்ருர் எல்லையின்றி!
பெருந்துயரில் ஏழையரை ஆழ்த்திவிட்டு
விருந்துகட்கும், வெறியூட்டும் கூத்துகட்கும்
வேண்டுமட்டும் அள்ளிஅள்ளி இறைக்கின்ருர்கள்.
வருந்துகின்ற வறியவர்க்குக் கொடுப்பதென்ருல்
வளமிருந்தும் வன்னெஞ்சர் தயங்குகின்ருர்.

உணவில்லை; உடையில்லை; உறைவதற்கோ
ஒருசிறிய குடிசைககு வழியுமில்லை.
பணமில்லை; பகட்டில்லை; எனினும் ஏழை
பாடுபட்டே உழைப்பதற்கும் வேலையில்லை.
மணமில்லா மலர்களைப்போல் எளியோர் வாழ்வு
மண்ணுலகில் வீணுக அழியு தந்தோ!
பணமில்லார் இவ்வுலகில் அடையும்துன்பம்
படம்பிடித்துக் காட்டிடவும் வேண்டுமோதான்?

— பி. அரங்கநாதன், மஞ்சைநகர்.

விரிதரும் வானப் பொழிலிடை எங்கும்
மேவிய முகிலெலாம் வெண்திரை யாகும்;
தெரிதர அசைவுற மொய்த்திடும் விண்மீன்
தேர்ந்தநற் பார்வையர்; அரங்கினில் ஆடும்

உரியநல் விறல்படு கணிகைவெண் ணிலவாம்;
உள்ளொளி யுடனிளங் குளிரினை ஈந்து
சிரிக்குமத் தாமரை முகத்தினைக் காட்டிச்
சிறக்கவே எழிலொடு கூத்திடல் காணீர்!

— 'சொற்கோ' நாகை.

அருள்வழிய நோக்குதற்கே கண்கள் தந்தான்!
அறிவுமொழி கேட்பதற்கே காத மைத்தான்!
நறுமணமாம் புகழ்நுகர மூக்கைத் தந்தான்!
நயவுரைகள் புகலுதற்கே வாயை வைத்தான்!
பொருளீந்து களிப்பதற்கே கைகள் தந்தான்!
பொய்யுலகைக் கடப்பதற்கே கால்கள் வைத்தான்!
அறத்திற்கும், பொதுமைக்கும் மனம்ப டைத்தான்!
ஐம்பொருளின் கூட்டுலகாய் உடல்ப டைத்தான்!

பெண்ணென்றும் ஆணென்றும் பிறக்க வைத்தான்!
பெற்றோரும் மற்றோரும் உறவாய்த் தந்தான்!
விண்ணென்றும் நிலவென்றும் விளங்க வைத்தான்!
வேற்றுக்கோள் பலவற்றை இயங்க வைத்தான்!
மண்ணுலகில் காடு,மலை, கடலை வைத்தான்!
மழையென்றும் வெயிலென்றும் பகுப்பு வைத்தான்!
எண்ணில்லா உயிர்படைத்தான்; உலகம் வைத்தான்!
எனினுமவன் துன்பமதை இங்கேன் வைத்தான்?

— புலவர். முகிலன், உளுந்தூர்ப்பேட்டை.

வள்ளுவர் சொன்னவை:

மனத்துக்கண் மாசில்லாப் பண்பி னோடு
மருவுகின்ற மெய்யன்பைச் சேர்த்து வாழ்ந்தால்
அனைத்துமறன்! அறவாழ்வே இல்லின் வாழ்க்கை;
அயலார்தம் பழியின்றி விளங்கல் நன்றே.
தினைத்துணையும் எவ்வுயிர்க்கும் தீங்கு நீக்கிச்
சீருளத்தில் அருளுடைமை கொண்டு வாழ்ந்தால்
நினைத்தரிய வாழ்வாங்கு வாழ்வர் அன்னோர்;
நிலைத்தென்றும் விண்ணுலகில் தெய்வம் ஆவார்.

— சி. வி. இராசாராம், உரத்தநாடு.

எழுதுவார்க்கு!

தென்மொழிக்கு வரும் உருப்படிகளில் பாடல்களே மிகுந்துள்ளன. சிலர், பாடல்களில் எதுகைத் தொடையிலும் வடசொல்லமைத்து, மாற்றஞ் செய்ய முடியாதவாறு எழுதுகின்றனர். எழுதுவார் கட்டுரை, பாடல்களைத் தனித்தமிழில் எழுதித் தக்காரிடம் காட்டிச் செப்பஞ் செய்து அனுப்ப வேண்டுகிறோம்.

குடி வெறியனின் அடி!

— * —

அவன் ஒரு மளிகை வாணிகன். கடையின் ஒரு பகுதியில் துணி விற்பனையும் செய்து வந்தான். வாணிகம் சிறப்பாக நடந்தது. ஆனால் அவன் ஓயாமல் இரவு பகல் எந்நேரமும் குடித்துக் கொண்டிருந்தான். அடிக்கடி குடிப்பதற்காகக் கடையை விட்டு வெளியே போய்வருவான். பொதுவாக மாலை வேளைகளில் அவன் குடிப்பதற்காகப் போய், நள்ளிரவு வேளைகளிலேயே கடைக்கு வருவான். அவ்விடைப் பொழுதுகளில் கடையைக் கவனிக்கச் சிறு பையன் ஒருவனை வேலைக்கு வைத்திருந்தான். பையனுக்கு ஓயாத வேலை; கடையைத் திறந்து வைப்பதிலிருந்து நள்ளிரவில் தன் ஆண்டை (எசமானன்) திரும்பி வரும் வரை, எல்லா வேலைகளையும் அவனே பார்த்து வந்தான். பெருக்குவது, பொருள்களைக் கட்டிக் கொடுப்பது, துணிகளை அடுக்குவது, கணக்கெழுதுவது, மாலையில் விளக்குக் கொளுத்துவது, அண்டை ஊர்ச் சந்தைகளுக்குப் போய்ப் பொருள்களை மொத்தத்தில் பெற்று வந்து கடையில் போடுவது முதலியன அவன் செய்யும் அன்றாட வேலைகள். பையனுக்கு அகவை பதின் மூன்று. அவன் வளர்ச்சிக்கு மீறிய வேலை இத்தனை வேலைகளையும் பையன் வாய் பேசாமல் முணு முணுப்பின்றிப் பொறுமையுடனேயே செய்து வந்தான். அவன் ஏதிலி (அநாதை). இத்தனை வேலைகளுக்கும் கூலியாகக் கடைக்காரன் கொடுக்கும் சிறிய அளவு உணவையே அரை வயிறு கால் வயிறு உண்டு உயிர் வாழ்ந்து வந்தான். இந்த இடர்ப்பாடுகளிலிருந்து அவன் தப்பித்துக் கொள்ளவும் வழியில்லை. இவற்றிற்கும் மேலாக ஒரு கொடுமையை வேறு அவன் தாங்கவேண்டியிருந்தது. அதுதான் தன் ஆண்டை குடித்துவிட்டு இரவு நேரங்களில் கடைக்குத் திரும்பும் பொழுது, பையன் படுகின்ற உயிர்க்கொலையாகும். குடிவெறி தலைக்கேறிக் கொப்பளித்துக் கொண்டுவரும் சினத்தைக் கடைக்காரன் அந்தப் பையன்மேல் செலுத்துவான். ஒவ்வொரு நாளும் நடு இரவில் அந்தப் பையனைக் கடையிலுள்ள பெரிய விற்பனைப் பலகையில் தலைகுப்புறப் படுக்கவைப்பான்; கொடிப் பிரம்பை எடுத்துத் தன் முரட்டுக் கைகள் வலிக்க வலிக்க, சோர்வுற்றுக் குடிவெறி அடங்கும் வரை ஓயாமல் அடித்துத் தீர்ப்பான். பையன் ஓலமின்றிக் கண்களில் கண்ணீர் தாரையாக வழியவழிய அடிகளைப் பெற்றுக் கொள்வான். வேலைக்கு வந்து, இவ்வடிகளைத் தாளாமல், ஓடிப்போன பையன்கள் பலர் இக் குடி வெறியனிடம் நாளும் உதைபட்டு உடல் முழுதும் புண்ணாகி வதைந்து கொண்டு இப் பதின்மூன்றாண்டுப் பச்சைப்பிள்ளை மட்டும் அவ்விடத்தை விட்டு ஓடிப் போகாமல் இருப்பானேன்? இவ்வடி

உதைகளின் கொடுமைகளை அமைதியாகப் பொறுத்துக்கொள்ளு மாறு, அந்த இடத்தில் அவனுக்குக் கிடைத்த இன்பம் என்ன?

அந்தக் கடை ஒரு கப்பல் துறைமுகத்துக்கு அருகில் அமைந்திருந்ததுதான் அதற்குக் காரணம். பையன் கடைகளுக்குப் போய் வருங்கால், இடையிடையே துறைமுகத்தில் வந்து போகின்ற கப்பல்களைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அக்கப்பல்களின் அமைப்பு, தோற்றம், நீளம், அகலம், முதலியவற்றை உன்னிப்பாகக் கவனித்து வந்தான். கப்பல்களிலிருந்து வந்திறங்கும் பொருள்களின் மேலோ ஆட்களின் மேலோ அவன் என்றும் நாட்டம் செலுத்தியதில்லை. அவனுக்கு நிறைவளித்தவை எல்லாம் கப்பல்களே! இவ்விளம் பருவத்தில் அவனுக்கு இயற்கையாக அமைந்த இவ்வுயிர் உணர்வு கப்பல் பயணமே! கப்பலில் ஏறிக்கொண்டு பல நாடுகளையும் சுற்றுவதாகக் கனவுகள் கண்டான். மளிகைக் கடை எச்சில் சாப்பாடும் ஆண்டை அளித்த பிரம்படிகளும் அவன் உடலைப் பொறுத்த மட்டில் தான் கொடுமையாக இருந்தன. அவன் உள்ளத்தையும் அதில் எழுகின்ற உணர்வு அலைகளையும் ஒரு சிறிதும் அவ்வடிகள் தடைப்படுத்தியதில்லை. ஒரு நாள் ஆண்டை இரவு நெடுநேரம் கழித்துக் கடைக்கு வந்தான். கடை திறந்து கிடந்தது. பையனைப் படுக்கவைத்துப் பிரம்பால் விளாசும் விற்பனைப் பலகையைப் போய்ப் பார்த்தான். பையனைக் காணவில்லை. எல்லாவிடத்தும் தேடினான்; பயனில்லை பையன் திரும்பவே இல்லை அன்று போனவன்தான் அப் பையன். தன் அயர்வில்லாத முயற்சியால் பிற்காலத்தில் பெரும் பெரும் கப்பல்களுக்குத் தலைவனானான். பெரிய கப்படை மறவன் என்று பெயரெடுத்தான். எவரும் பயணஞ் செய்ய அஞ்சிய பசிபிக் பெருங்கடற் பரப்பில் துணிந்து தன் கப்பலைச் செலுத்தினான். உலகத்தின் பார்வையில் மறைந்து கிடந்த பற்பல கடல் திட்டுகளைக் கண்டு பிடித்தான். இறுதியில் தன் முப்பத்தொன்பதாவது அகவையில் கடலிலேயே மறைந்தான். அவன் புகழ் கடல் போல் பரந்தது. அவனே ''கேப்டன் குக்'' என்ற கடல் மறவன்! *

உறுப்பினர்கள் கவனிக்க...

'தென்மொழி' இதழ் அனுப்பப்பெறும் சுற்றுத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள எண்களே அவரவர் உறுப்பினர் எண்கள். அவற்றுள் பு. உ. எண் 337 முதல் 350 வரை உள்ள அன்பர் அனைவர்க்கும் சுவடி 2-ஓலை 3 (சித்திரை இதழ்) முடிய உறுப்பினர் கட்டணம் முடிவடைகின்றது. தொடர்ந்து தென்மொழிப் பயன் துய்க்க விரும்புவார் இம்மாதத்திற்குள் கட்டணத்தை அனுப்பிப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகின்றோம்.

– அமைச்சர், தென்மொழி.

அறிவியல் வளர்ச்சி.

உங்கள் உதவி தேவையில்லை...!

காலை முதல் மாலை வரை அலுவலகத்தில் ஓயாத வேலை! மனைவிக்கோ அடுப்படியில் ஒழிவில்லாத பணி...! பள்ளிகளில் பிள்ளைகளுக்கு ஏற்பட்ட கட்டுப்பாடு. இவ்வாறான பல்வகைச் சோர்வுகளுக்கும் நாம் அடிக்கடி ஆளாகின்றோம் சோர்வைப் போக்கிக் கொள்ள விரும்பி, நன்றாகப்பாடுகின்ற நண்பரையோ, தோழியையோ, பக்கத்து வீட்டுப் பையனையோ ஒரு பாட்டுப் பாடச் சொல்கின்றோம். அவர்களோ நீட்டுகிறார்கள். நெளிகிறார்கள்... வெட்கப்பட்டு எழுந்து போய்விடுகின்றார்கள். அப்படிப்பட்டவர்களை ஆற்றித் தேற்றித் தூண்டிவிட்டுப் பாட வைப்பதற்குள் நாமே பாடிவிடலாம்போல் தோன்றுகின்றது. இத்தகைய எவ்வகை முயற்சிக்கும் நாணத்திற்கும் இடம் வையாமல் அவர்களே முன்வந்து பாடத் தொடங்கினாலோ ... அதையும் நம்மால் சுவைத்துக் கேட்க முடிவதில்லை. தொண்டைக் கரகரப்பு ... மூக்கடைப்பு ... இன்னோரன்ன பற்பல தடைகள். இசைக் குறைகள். இவற்றிற் கெல்லாம் முடிவு வைத்ததுபோல் வந்தது இசைத்தட்டு. எவருடைய உதவியும் தேவையில்லை. பாட்டு தேவையா? எந்தப் பாட்டு? ..... அந்த இசைத்தட்டை எடுக்க வேண்டியதுதான் .. எஃகுப் பட்டைச் சுழற்சியால் இசைத்தட்டில் உள்ள பாட்டு எஃகு ஊசியின் துணையொடும் ஒலிபெருக்கியின் ஒத்துழைப்போடும் இழையோர்டு கின்றது...செவி குளிர, உளங் குளிரப் பாட்டில் மெய்ம்மறந்து ஈடுபடுகின்றோம். களைப்பும் நீங்குகின்றது.

ஆனால் இவையெல்லாம்கூட அந்தக்காலம்! இந்தக்காலமோ முற்றிலும் பொறிவினைக் காலம். அறிவியலறிஞர் தம் இடைவிடாத முயற்சியால் இரவு பகலாக, உண்ணாது உறங்காது உலக மக்களின் நன்மைக்காக எண்ணற்ற பொறிகளைக் கண்டு பிடித்துத் தந்திருக்கின்றனர். விசையைத் திருப்பியதும் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் பாடுகிற பாட்டையும், ஆடுகிற ஆட்டத்தையும் இங்குள்ளவர்கள் கேட்கவும்பார்க்கவும் முடிகின்றது. சொடுக்கியைத் தட்டியதும் விளக்குப் பற்றிக் கொள்கின்றது. ஒரே சொடுக்கியால் ஊரிலுள்ள அத்தனை வீடுகளையும் ஒளிபெறச் செய்துவிடலாம். இவ்வகையில் நமக்குக் கிடைத்த பொருள்கள் ஒன்றா? இரண்டா? ஆயிரக் கணக்கில் அவை நம் வாழ்வை இன்பமுடையதாகவும் காலச் சிக்கனமுடையதாகவும் செய்திருக்கின்றன. இன்னும் என்னென்ன வரக் காத்திருக்கின்றனவோ? இதுவரை வந்துள்ள பொறி

களையும் அவை மக்களுக்கு ஏவலாளர்கள் போல் செய்யும் வியத்தகு செயல்களையும் முழுமையாக விளக்கிச் சொல்வது இயலாது. பொதுவாக இத்தகைய பொறிகள் வந்து நம்மை வேலையற்றவர்களாகச் செய்து விட்டன என்றுகூடச் சொல்ல லாம். இன்னும் நூறுண்டுகளுக்குப் பின் மக்களுக்கு எந்த ஒரு வேலையும் கூட இல்லாமற் போய்விடலாம்.

இப்பொழுது வழக்கத்துக்கும் புழக்கத்துக்கும் வந்துள்ள (இங்கன்று... மேனுடுகளில்தான்) பொறிகளைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ளல் வேண்டாமா? அவை பெரும்பாலும் மேனுடு களிலேயே இருந்தாலும் விரைவில் இங்கும் வந்து நமக்கும் ஓய்வளிக்கத்தான் போகின்றன. சமையல் வேலையா? முழுக் காய்கறிகளை ஒரு பொறி வாயில் இடவேண்டியதுதான். காய் கறிகள் அளவோடு நறுக்கப்பெற்று, (நம் வீட்டுப் பெண்கள் அவ்வாறு நறுக்குகின்றூர்களா என்பது வேறு செய்தி...!) காரம், புளிப்பு, முதலியவை அளவோடு சேர்க்கப் பெற்று, குழைந்து போகாமலும் கரிந்து போகாமலும் அரை குறை வேக்காடாக இல்லாமலும், ஒழுங்காகச் சுவையான குழம்பாகவும், பொறிய லாகவும் நம் முன் வந்து நிற்கின்றன. இப்பொழுதைக்குச் சமையலை முடித்தோம். ஆனல் மாலை அலுவலகத்திலிருந்தோ பள்ளியிலிருந்தோ திரும்பும்பொழுது சுடச்சுடக்குழம்பும்சோறும் வேண்டுமே என் செய்வது என்று கருதுகின்றீர்களா? ஒன்றும் பெரிதில்லை..! நாம் எந்த மணியில் வீடு திரும்புவோமோ அந்த நேரத்தைச் சமையல் பொறியில் இணைத்துள்ள மணிப்பொறியில் சரி செய்து வைத்துவிட்டுத் தேவையான காய்கறிகள், வெங் காயம், பச்சை மிளகாய், மற்றும் குழம்புப் பொருள்கள் முதலிய வற்றை ஒரு பொறியிலும், களையாத அரிசியையோ அரைக்காத கோதுமையையோ ஒரு பொறியிலும் போட்டு, வீட்டைப் பூட்டிவிட்டுப் போய்விட வேண்டியதுதான். மாலை குறிப்பிட்ட மணியில் திரும்பி வந்து கை கழுவிக் கொண்டு இலையைப் போட்டுக் கொள்ளலாம். சுடச்சுடக் கறியும் சோறும் அல்லது கோதுமை உரொட்டியும் நமக்குக் கிடைக்கின்றன. நம் உதவி யின்றித் தம் வேலைகளைத் தாமே செய்கின்ற தானியங்கு பொறிகள் சமையலறையில் மட்டுமில்லை, தொழிற்கூடங்களிலும் புரட்சி செய்கின்றன.

தொழிற் கூடங்களில் ஒரு சில பொறிகளில் நீண்ட கம்பிச் சுருள்களைக் கொடுத்தவுடன், அடுத்த புறத்தில் அச்சுருள்கள் மறையாணி (Bolts) களாகவும், மறைப்பூட்டு (Nuts) களாகவும் வந்து விழுகின்றன. மற்றொரு புறம் இயங்கிகளுக்கும் ஊர்தி களுக்கும் தேவையான சுருள்கள் (Springs), அச்சுகள் (Axis) இருசுகள் (Axile), தாங்கிகள் (Bearings), எஃகுப் பாரைகள் (Bars) முதலியன எந்தெந்த வடிவங்களில் தேவையோ

அந்தந்த வடிவங்களிலும் அளவுகளிலும் உருவாகி வெளிவந்து விழுகின்றன. அங்குள்ள பொருள்களை ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குக் கொண்டு செல்வதெல்லாம் பொறிகளே! பெரிய பெரிய செய்தித் தாள்கள் வெளிவருகின்ற அச்சகங்களி லெல்லாம் பெரும்பாலும் பொறிகளை வைத்தே வேலை வாங்கு கின்றனர்கள். நீண்ட பெரிய தாள் சுருள்களை எடுத்துப் பொறி களில் மாட்டுவதுதான் இவர்கள் வேலை. அத் தாள் சுருள்கள் மணிக்கு 24 கற்கள் விரைவில் சுழன்றோடி, அச்சாகி, வேண் டியவாறு வெட்டப்பட்டும் மடிக்கப்பெற்றும், நூறு நூறாகக் கட்டப்பெற்றும், கட்டுகள் நூறு சேர்ந்து பெருங் கட்டுகளாக ஆக்கப்பெற்றும் விற்பனைக்கு அணியமாக வெளிவருகின்றன. அவற்றைத் தொழிற்சாலைக்கு வெளியில் நிற்கும் சரக்குந்து (Lorry) களில் தள்ளிவிடுவதும் பொறிகளே! இந்த வேலை நடைபெறும் பொழுது தாள் கிழிந்துவிட்டாலோ, அச்சு மை குறைந்துவிட்டாலோ, அன்றி மிகுந்துவிட்டாலோ பொறி தானகி நின்றுவிடும். பதப்படுத்தப்பெற்ற மீன்கள், இறைச்சிகள் பழங்கள், பால்தூள், கொட்டைகள், தின்பண்ட நொறுவைகள் யாவும் இத்தகைய முறைகளிலேயே இருப்புத் தகட்டுக் குப்பி களில் காற்றுப் புகாமல் கைபடாமல் அடைக்கப் பெற்று விற்ப னைக்குச் செல்கின்றன சரக்குப் பெட்டிகளில் முகவரி அச்சிடு வதும் எடை போடுவதும் பொறிகளே!

சில தொழிற்சாலைகளில் மாப்பண்டங்கள் (Biscuits) செய் யக் கோதுமையை அரைத்து மாவாக்குவது முதல், அத்துடன் சேர்க்க வேண்டிய சருக்கரை முதலிய கலவைப் பொருள்களைச் சரியான அளவுகளில் கலப்பது, சூட்டடுப்பில் வைத்து இரு பக்கமும் அளவான சூட்டில் காயவிடுவது, வெந்த பின் நெய்ப் பசையுள்ள தாள்களில் எண்ணியடுக்கி அட்டைப் பெட்டிகளில் போட்டு முத்திரை இடுவது, அவைகொண்ட பெரிய பெட்டிகளை விற்பனைக்கு அணியமாக்குவது முதலியவற்றைச் செய்வதெல் லாம் தானியங்கு பொறிகளே! சில உண்டிச் சாலைகளில் உள்ள அறைக் கதவுகளின் அண்மையில் சென்றவுடனேயே அவை திறந்து கொள்வதும், உள்ளே புகுந்தவுடன் மூடிக்கொள்வதும் நமக்கு வியப்பை அளிக்கும். கைகழுவும் நீர்த்தூம்பில் (Water Pipe) நாம் கைகளை நீட்டியவுடன் தண் ணீர் கொட்டுகின்றது. கையை எடுத்தவுடன் தண்ணீர் நின்று விடுகின்றது. உண்பலகையில் உள்ள ஒரு தொளையில் காசு களைப் போட்டவுடன் நமக்குத் தேவையான இட்டளி, ஊற்றப்பம், வடை, பழம் முதலியன உண்பலகைக்கு வருகின் றன. ஆள் எடுத்து வந்து பரிமாறும் வரையில் நாம் காத்திருக் கத் தேவையில்லையல்லவா? தங்கு அறைகளில் உள்ள வானொலிப் பெட்டிகளில் உள்ள மணிப் பொறியைச் சரி செய்து வைத்துவிட்டு நாம் தூங்கி விடலாம். விடியற்காலையில் நாம்

குறித்துவைத்த நேரத்தில் வானொலிப் பெட்டி தானாகவே பாடத் தொடங்கிவிடும். அங்குள்ள சமையலறைகளில், புடைத்தல், அரைத்தல், குத்தல் முதலிய எல்லா வேலைகளையும் பொறிகளே செய்கின்றன. இயங்கிகளிலும் உந்துகளிலும் உள்ள நுழை வாய்க் கதவுகள் நாம் ஏறுதற்குச் சென்றவுடன் திறந்து, உட் புகுந்ததும் மூடிக் கொள்கின்றன. உள்ளே இடமில்லாவிட்டால் கதவுகள் திறப்பதே இல்லை. காசு வாங்குவதும் சீட்டுக் கொடுப் பதும் பொறியே! வண்டி எந்த இடத்தில் புறப்பட்டது, எந்த இடத்தில் எத்தனை மணிக்கு வந்து சேர்ந்தது, இடையில் எங் கெங்கு எத்தனை எத்தனை நிமையங்கள் நின்றது—என்பவற்றை ஒரு பொறி ஒழுங்காகக் குறித்து வைத்துக் கொள்கின்றது. ஓடுகின்ற வண்டி தூக்கிச் செல்லும் பளுவை ஒரு பொறி குறிக் கின்றது. இன்னொரு பொறி வண்டி ஓடும்பொழுது எத்தனை முறை குலுங்கியது, ஒவ்வொரு குலுக்கலிலும் வண்டி எத்தனை விரற்கடை தூக்கிப் போட்டது என்பதைப் பிசகின்றிக் கணக் கிடுகின்றது. அத்தகைய குறிப்புகள் சாலைகளின் தரங்களை அறிய உதவுகின்றன.

நூற்பு ஆலைகளில் ஓரிழை அறுந்தாலும் நூற்கும் பொறிகள் நின்று போகின்றன. திருடரோ, வேற்றுப் புலத்தாரோ அறைக்குள் நுழைவாரானால் அவர்களின் முழு உருவங்களைப் படமெடுப்பதுடன், அவர் தொட்ட பொருள்களையும் குறிப்புக் காட்டிவிடுகின்றது ஒரு பொறி. கைகளில் கட்டப்பெறும் மணிப் பொறிகள் கையசைகின்ற விசையைக் கொண்டு தனக்குத் தானே சுருளை (Spring) முடுக்கி விட்டுக் கொள்கின்றன. இன்னும் சில சுவர் மணிப் பொறிகள் இருளோ, ஒளியோ தம் மீது படிந்தாலும், அல்லது தட்ப வெப்ப நிலை மாறினாலும் தமக்குத் தாமே முடுக்கி விட்டுக்கொண்டு ஆண்டுக்கணக்காக ஓடிக்கொண்டே இருக்கின்றன.

ஆளேறி ஓட்டாத இயங்கிகள் சிலவற்றில் நாம் ஏறி உட்கார்ந்து 'போ' என்றதும் புறப்பட்டுப் போவதும், 'நில்' என்றதும் உடனே நிற்பதும் நம்மைக் கட்டாயம் வியப்பில் ஆழ்த்தும். சிற்சில இயங்கிகளிலும் உந்துகளிலும் பொருத்தப் பெற்ற நுண் பொறிகள் போக்குவரத்துக் காவலர்தம் அறிவிப்பு களை அறிந்து அவற்றிற்குத்தக நிற்கவும் போகவும் செய்வதுடன் இருட்டும் பொழுது தாமே விளக்குப் போட்டுக் கொள்கின்றன வாம்! தொடர் வண்டி நிலைய மேடைகளில் குறுக்கும் நெடுக்கும் பொறிகளால் செய்யப்பெற்ற மாந்த உருவம் ஒன்று நடை போட்டுக் கொண்டிருக்கின்றது. நாம் சுருட்டுப் புகைத்துக் கொண்டிருந்தால் நம்மிடம் அப்பொறியால் செய்த உருவம் வந்து 'எனக்கும் ஒரு சுருட்டுக்கொடு'என்று கூறுவதும், அதன் எஃகுக் கைகளில் நாம் அதைக் கொடுத்தவுடன் அது தன்

வாயில் வைத்துப் புகைப்பதும், நாம் ஏதாவது கேள்விகள் கேட்டால் அவற்றிற்கு விடைகள் சொல்வதும் மிக வியப்பான செயலாக இருக்கும். ‘இந்த வண்டி எத்தனை மணிக்கு வரும்; இன்று காலந்தாழ்ந்து வருமா? குறித்தநேரத்தில் வந்துவிடுமா?’ என்பன போன்ற விளுக்களுக்கும் அம் மாந்த உருவில் அமைந்த பொறி விடை சொல்கின்றது என்றால், நம் போன்ற சிடு சிடுப்பாக விடை தருபவர்களுக்கு அங்கு என்ன வேலை?

வான ஊர்திகளிலோ, பெரிய கப்பல்களிலோ, அரசினர் அலுவலகங்களிலோ திடீரென தீப்பற்றிக் கொள்கின்றதென்றால் இனிக் கவலையே இல்லை. தீயணைக்கும் படைக்குத் தொலைபேசியில் சொல்லி அப்படை விரைவதற்குள் எத்தனையோ சேதங்கள் ஏற்பட்டு விடுகின்றன. இவ்வேலைகளை ஆங்காங்குப் பொருத்தப் பெற்ற பொறிகளே செய்கின்றன. தீப்பற்றிக்கொண்ட பகுதியை நோக்கி இப் பொறிகள் தாமாகவே மருந்து கலந்த நீரைப் பீச்சியடிக்கின்றன. தீ அணைந்து போனபின்பே அவை ஓய்கின்றன. நாம் இயக்கவே வேண்டியதில்லை. எப்படி அறிவியல் வளர்ச்சி? சில நுண்ணிய பொறிகள் வங்கிகள், அரசினர் கருவூலங்கள், பணம் அச்சடிக்கும் அரசினர் அச்சுக்கூடங்கள் முதலியவற்றில் மாந்தனைவிடப் பன்னூறு மடங்கு மிகுதியான திறமையுடனும் விரைவுடன் பணிகள் புரிகின்றன. தாள் நாணயங்களையும், காசுகளையும் அடிப்பதும், எண்ணுவதும், கட்டுவதும், வெட்டுவதும் இனவாரியாகப் பிரிப்பதும் அவையே! ஒரு தாள் கிழிந்து விட்டாலோ, ஒரு காசில் முத்திரை சரியாகப் பதியாமல் போனாலோ தானியங்கு பொறிகள் நின்று போகின்றன. கணக்கர்களின் மூளையைக் குழப்புகின்ற கணக்குகளுக் கெல்லாம் நொடிப் பொழுதில் விடையளிக்கின்றன. கோடிக்கணக்கான காசு நாணயங்களில் கள்ள நாணயங்களைப் பிரித்து எடுக்கின்றது ஒரு பொறி. நல்ல நாணயங்களிலும் சிறு அளவு தேய்ந்து போனவற்றையும் அந்தப் பொறி தள்ளிவிடுகின்றது. ஆயிர உருபா தாளை ஒரு பொறியில்போட்டு. 125 உருபாவுக்கு ஒரு காசுகளும், 218 உருபாவுக்கு இரண்டு காசுகளும், 405 உருபாவுக்கு 5 காசு நாணயங்களும், 112 உருபாவுக்கு 10 காசு நாணயங்களும், மீதிக்குச் சரிபாதியாக இருபத்தைந்து காசுகளும் 50 காசுகளும் தேவை என்ற அவையவற்றிற்கென்று வைக்கப்பெற்ற பொத்தான்களை அழுத்தியவுடன் ஒரு நொடிப் பொழுதில் சில்லறைகள் சரியாக வந்து விழுகின்றன. இதை நம் போன்ற ஓர் ஆள் செய்வதற்குக் குறைந்தது 30 நிமையங்களாவது ஆகும்.

அச்சிட்ட அறிக்கைகள், மடல்கள் இவற்றை ஒரு மணிக்கு 5000 முதல் 10000 வரை மடித்து உறைகளில் போட்டு வாய்ப் புறங்களை ஒட்டி, அதை நிறுத்து, அதற்கான அஞ்சல் தலைகளை

யும் ஒட்டி விடுகின்றது ஒரு பொறி! ஓடிக் கொண்டிருக்கின்ற உந்துகளில் மேடு பள்ளங்களில் வண்டியோட்டி மாற்ற வேண்டிய பல்லிணை(Gear)களைத் தாமே மாற்றிக் கொள் கின்றது ஒரு பொறி. வண்டியோட்டி அதைக் கவனித்து இயக்க வேண்டுமென்ற தேவையில்லை. போர்க் காலங்களில் எதிரிப் படைகள் வருவதை ஏறத்தாழ ஒரு மணி நேரத்திற்கு முன்பே அறிந்து தம்படைகளுக்கு அறிவிக்கின்றது ஒரு பொறி எதிரியின் கப்பல்களையும் வானூர்திகளையும் தொலைவில் வரும் பொழுதே சுட்டுப் பொசுக்குகின்றன சில பொறிகள். நகரங் களில் உள்ள அஞ்சல் பெட்டிகளில் போடப்பெற்ற அஞ்ச லட்டைகள், மடல்கள், பெரிய பெரிய சிப்பங்கள் அனைத்தும் குறிப்பிட்ட நேரங்களில் புதை குழாய்களின் காற்றழுத்தங்களி னுல் அலுவலகங்களுக்குக் கொண்டு வந்து சேர்க்கப் பெறுவ துடன், அவை நாடு நாடாகவும், ஊர் ஊராகவும் பிரிக்கப் பெற்று முத்திரையிடப் பெற்றுப் பைகளாகவும் கட்டப் பெறு கின்றன. இவற்றையெல்லாம் பொறிகளே செய்கின்றன.

பெரிய பெரிய அச்சகங்களிலெல்லாம் படிக்கப் பெறும் செய்திகளைப் பொறிகளே அச்சுக் கோக்கின்றன. பொறிகளே அச்சிட்டு, எண்ணிக் கட்டித் தைத்து வெட்டிப் புத்தகங்களாகத் தருகின்றன. அண்மையில் சுவை பார்க்கும் பொறி ஒன்றை இலண்டன் விற்பனைக்கழகம் கண்டு பிடித்துள்ளது. ஒரு 'கிராம்' எடையுள்ள ஒரு பொருளில் கோடியில் ஒரு சிறு பகுதியைக்கூட இந்தப் பொறி சுவைத்துப் பார்த்து இஃது இன்ன சுவை என்று கண்டுபிடித்து அறிவிக்கின்றதாம். இவற்றையெல்லாம் பார்க்கை யில் எதிர்காலத்தில் நமக்கு வேலை இருக்குமோ என்னவோ?.

தென்மொழித் தொகுப்பு.

முதல் சுவடி.

செந்தமிழ்க் கருவூலம்! நல்லறிவுப் பூங்கா!

தமிழர் ஒவ்வொருவரும் வைத்திருக்க வேண்டிய
தனித்தமிழ்ப் பெட்டகம்.

உயர்ந்த பாடல்களும், அறிவியல், இலக்கியம், இலக்கணம் பற்றிய சிறந்த கட்டுரைகளும், வரலாறுகளும் சேர்ந்த கலைக் களஞ்சியம்!

பதிவு அஞ்சல் செலவும் சேர்ந்து விலை 10 உருபா. தேவைக்கு உடனே எழுதுங்கள். — அமைச்சர்.

தாயே விடை கொடு!

—o—

எடுப்பு

தாயே விடைகொடு–செந்தமிழ்த்
தாயே விடைகொடு

தொடுப்பு

பேயெனத் திரியும் இந்தி எதிர்த்திட
பித்தர்கள் மனதில் உண்மை உணர்த்திட (தாயே)

முடிப்பு.

க. இளமை எழில்குலுங்கும் என்தமிழ்த் தாயே,
இந்தி எதிர்த்திட எனக்கருள் வாயே!
களத்தில் துணிந்துயான் இறங்கிவிட் டேனே,
கடைக்கண் அருள்மொழிக்கே வேண்டிநின் றேனே!
–(தாயே)

உ. எத்தனைப் பெரும்படை எனையெதிர்த் தாலும்,
எப்படிச் சூழ்ச்சியர் வலைவிரித் தாலும்,
அத்தனைப் படைகளும் அடியொடு தூள்தூள்
ஆக்கிடச் சினத்தொடு துடிக்குதென் தோள்தோள்!
–(தாயே)

ங. நின்னுடன் பகைகொளும் நினைப்பினைக் கொண்டார்,
நெருநலும் நிலம்விட்டு வானினைக் கண்டார்!
என்னிவர் இன்றுநம் இளைப்பினைக் கண்டார்?
இழிமொழி இந்தியைத் திணித்திட வந்தார்! –(தாயே)

கோ. சோ செயபால், தெற்குப்பொய்கைநல்லூர்.

(54-ஆம் பக்கத் தொடர்ச்சி) உருபா

திரு. வீர. அரங்கசாமி பொறியியற் கல்லூரி,
காரைக்குடி-3 2

,, நல்லபெருமாள். தூரவாணிநகர் பெங்களூர்-16 5—30

அவர் வழி, தலைக்கு உருபா 2 மேனி கொடுத்தவர்கள்:
திருவாளர்கள்: கு. நாராயணசாமி, து. கோபால்சாமி, மா. மு. சாமி, ந. சாமி, பா. சி. நாராயணன், ச. ஆ. பெருமாள், சோ. செ. பெருமாள், து. அரங்கநாதன், மு. செல்வராசு, மு க. இராசு, மு. முத்து 22

திரு. உலூார்துசாமி 2—50

,, செ. ச. குமரேசன் 1—50

,, மு. இராவணதாசு 1—25

தலைக்கு 1 உருபா மேனி கொடுத்தவர்கள்:
திருவாளர்கள்: ப. வ. வாசுதேவன், வ. சு. இராசசேகரன், கோ சுந்தரராசன், ச. சாமிநாதன், துரைராசன், ந ரா. சந்திரன், டி. குணாளன், ச. நீலமேகன், மு. சந்திரன், சி. கிருட்டிணன், கு. ஆறுமுகம், அப்பாத்துரை, ம செயராம், சூ. பீட்டர், இரா. வே. கோபால், சி. சுப்பிரமணியன், ச. சுப்பிரமணியன், மு. இலக்குமணன், கே. சிவசுப்பிரமணியன், இலக்குமணன், அரங்கசாமி 21

தலைக்கு 50 காசு கொடுத்தவர்கள்:
திருவாளர்கள்: மா. ஆறுமுகம், ஆறுமுகம், மாணிக்கம், கற்பகலிங்கம், இரா. சண்முகம், முனிரத்தினம், சண்முகம், சுப்பிரமணியன், கா. ச. சுப்பிரமணியன், கருணாகரன், மு. நாராயணன், ச. கனுமந்து, அ. சூசை, ந. கணேசன், சம்பா, சான்மினிசசு, இராமமூர்த்தி, சய்மல்லாரி, நீ. கா. வேங்கடரமணய்யா, சார்ச், திருவாட்டி இராசம்மாள் 10—50

புலவர். கி. த பச்சையப்பன், கே சி. ச. நாடார் உயர்நிலைப்பள்ளி, தண்டையார்பேட்டை 20

அழகப்பா கல்லூரி மாணவர்கள் விடுத்த பணம்:

விசாலாட்சி இல்லம்:

திரு. முத்துக்கிருட்டிணன் 5

,, மீனாட்சிசுந்தரம் 5

தலைக்கு 2 உருபா கொடுத்த மாணவர்கள்: உருபா
திருவாளர்கள்: இராதாமனோகரன், கோதண்டபாணி, இராமலிங்கம், மா. துரைசாமி, சு. காசிநாதன், பொ. மெய்யப்பன், அ. கோவிந்தராசன், மு. செகதீசன், தாமோதரன், சிவராமகிருட்டிணன். 20

திரு. சந்தானம், திரு: இப்ராஃகிம் (தலைக்கு 3 உருபா) 6

தலைக்கு 1 உருபா கொடுத்த மாணவர்கள்:

திருவாளர்கள்: கோபாலகிருட்டிணன், சிவன் செயல், சி. தங்கசாமி, இராமசாமி, பழனிச்சாமி, க. சம்பந்தம், இராமசாமி, மீ. சுவாமிதுரை, து. வெள்ளைச்சாமி, சொ. சாமியப்பன், சி. அரங்கசாமி, பெ. அரங்கசாமி, கி. செல்வராசு, மு. வேங்கடேசன், சி. சங்கிலி, இராசாராம், மா. சி. மாறன், மு. செகதீசன், வேலாயுதம், பொன்னுசாமி, மா. கணபதி கா. பாலசுப்பிரமணியம், பெ. முருகன், இரா இரகுபதி, இரா. கோவிந்தன், மொ. சுப்பிரமணியம், சுந்தரமூர்த்தி, தாமோதரன், சுப்பராயன், அர. பெரியாழ்வார், நடராசன், கோ. அப்பாக்கண்ணு, சி. நடராசா, ப. மு நடராசன், மு. கணேசபோசு, கருப்புசாமி, சண்முகம், கதி. கணேசன், கி. வேங்கடராமன், மா சக்திவேல், வை. உமாபதி, இ சேதுராமலிங்கம். பூ. கா. முத்துசாமி, குருசாமி, ம. பொ. பாலு, மாணிக்கம், சி. சுந்தரகோபால், மெ சிங்காரம், தங்கச்சாமி, பாலகிருட்டிணன் 50

தலைக்கு 50 காசு மேனி கொடுத்த மாணவர்கள்:

திருவாளர்கள்: து. மங்கப்பன், சுப்பையா, இராமநாதன், சோமசுந்தரம், தணிகாசலம் 2—50

திரு. ப. மு. நடராசன் 1—50

திரு. இரா. சுப்பிரமணியம் 0—25

உமையாள் இல்லம்: திரு. இரா. வேலவன் 12

திரு. கா. இராமர் 3

,, நெ. கணேசன் 5

,, கா. சுப்பிரமணியம் 5

தலைக்கு 2 உருபா கொடுத்த மாணவர்கள்:

திருவாளர்கள்: இரா. தனபால், இரா. வேங்கடாசலம், செயபாலன், உடையப்பன், 8

தலைக்கு 1 உருபா கொடுத்த மாணவர்கள்:

திருவாளர்கள்: கு செ. இராமசாமி, புவனேந்திர பாண்டியன், ப. துரைசாமி, இரா. சண்முகானந்தம், க. பூசம்பெருமாள், இலெ. இரெத்தினசாமி, இரா. வேங்கடாசலம், செயபாலன்,ச. இராமசாமி, செ. இராமமூர்த்தி, வெ, கிருட்டிணகுமார், பழ. இராசரத்தினம், இரெ. கார்த்திகேயன் 13

மாங்கொம்பு ஆண்டி ஐயர் இல்லம்:

திரு. செயபாலன் 5

தலைக்கு 2 உருபா கொடுத்த மாணவர்கள்:

திருவாளர்கள்: கா. சொர்ணம்-சிதம்பரம்,

திருஞானம், சீ. மு. கலீல், பெ. அரங்கசாமி, சு. இராமகிருட்டிணன், உ. முருகேசன், சி. இளம்வழுதி, இரா. இராமசாமி, 16

தலைக்கு 1 உருபா மேனி கொடுத்த மாணவர்கள்:

திருவாளர்கள்: க. முத்துசாமி, மு.வீ. அழகப்பன் வீ. வேங்கடாசலம், வீர. மணிமொழி, பெ. உத்திராமம், வீ. தங்கவேல், சுப. இலக்குவன், இரா. இராமரத்தினம், கோவிந்தராசன், மா. பாலுசாமி, பழ. பழனியப்பன், செள. அசோகன், கணேசன், சே, சோமசுந்தரம், பீ. அப்துல் காதர், கே. பூரணச்சந்திரன், சே இரகுமத்அலி, கோவிந்தசாமி, சி. இரத்தினராசு, ச. மீ சுந்தரம், ச. பாசுகரன், ந. சொர்ணம், பி. மாமுண்டி, கி. தெய்வேந்திரன், வீர. பரமசிவம், நவமணி, ஆனந்தன், பாசுகரன், ந. கணேசன், கணபதி, வீ. தங்கராசு, அ. அருள்சாமி, சி. இராமசாமி, வ. உடையநாதன், அ. கிருட்டிணசாமி, ம. இராமச்சந்திரன், வீர. மணிமொழியன், செ. சண்முகம், விவேகானந்தன், சு. முருகன், ப நாகராசன், சுப. சுப்பையா, கா. சோமசுந்தரம், கா. தீனதயாளன், ச. மணி, இராமகிருட்டிணன் 46

தலைக்கு 50 காசு மேனி கொடுத்த மாணவர்கள்:

திருவாளர்கள்: சி. இலச்சுமணன், ஆ. செயசீலன், நா. கண்ணன், ஞா. விசயகுமார், அருணசலம், ப முத்துச்சாமி, க. திவாகரன், நா. துரைசாமி, சுந்தரம், ப. ஆறுமுகம், இ. இலட்சியகாந்தன், தங்கராசு, அ. அழகானந்தன், ரா. திருமால், ந. சுப்பிரமணியன், பி. மருதமுத்து 8

திரு. வி. முத்தப்பன் 0—25

திரு. சிங்காரவேலன் வழி: 1 உருபா மேனி:

திருவாளர்கள்: கதா. கணேசன், வை. சிங்காரவேலு, இராமையா, சிவசங்கரன், ம. அப்துல் 5

தி. மு க. வேப்பஞ்சேரி. 1—35

திருவாளர்கள்: கம்பன், சோமசுந்தரம், பழ. இராமையா (தலைக்கு 1 உருபா மேனி) 3

வீரப்ப அம்மன் இல்லம்:

தலைக்கு 1 உருபா மேனி கொடுத்தவர்கள்:

திருவாளர்கள்: க.கருப்பையா, கிருட்டிணமூர்த்தி வி. செயராமன், த. இராசேந்திரன், சுந்தரம், பொன்னுசாமி, அ. பெருமாள் 7

பிற மாணவர்கள்: தலைக்கு 2 உருபா மேனி:

திரு. ப. கோபாலன், திரு. மா. கிருட்டிணன் 4

தலைக்கு 1 உருபா கொடுத்தவர்கள்:	
திருவாளர்கள்: சிதம்பரம், அழ. உடையப்பன், சண்முகம், பெ. கணபதி, நாச்சியப்பன், கோவிந்தசாமி, து இராசேந்திரன், கிருட்டிணமூர்த்தி, செயச்சந்திரன், வீர. சுந்தரம், கலியமூர்த்தி, கா. செந்திவேலு, அலியார், அரங்கசாமி, கிருட்டிணசாமி, வரதராசு, வெ. செல்லிமுத்து, வெ. சுப்பிரமணியன், க. நாராயணசாமி, ந. நடராசன், வெலிங்டன், சுஃச்டின் மதுரம், செயப்பிரகாசு, சங்கரசுப்பையா, எ. கங்காதரன், எம். நடராசன், குழந்தைசாமி, பழனிச்சாமி, விசுவநாதன், முருகேசன், பேபி.	31
திரு. செ வெள்ளியங்கிரி	1—50
,, சண்முகம்	0—50
திரு. இராம சுப்பையா வழி மலேயா மக்கள்:	
தலைக்கு 3 உருபா மேனி:	
திருவாளர்கள்: சா. மாசிலாமணி, செ. சுப்பிரமணி, பா. கேசவன், இரா. பண்டரிநாதன், து. வீரப்பன், வீ ந. சிவம், இரா. இராசசேகரன், இரெ கணபதி.	24
தலைக்கு உருபா 1-50 மேனி:	
திருவாளர்கள்: சைமன் ராசு, சான்சு மாணிக்கம், க உ கவுசு, கு. கே. ஓங்கு, அகமது மீரா, கே. ஏ. முகம்மது உசேன்.	9
திரு. வெ. சுந்தரராசு	7—50
,, க. பெருமாள்	7—50
,, பா. வளன் அரசு எம். ஏ. திருநெல்வேலி-2	6—66
	793—17
திரு நல்லபெருமாள் அவர்கள் விடுத்த தொகைக்கு எடுத்துக் கொண்ட பணவிடைக் கழிவு	1—05
மொத்தம்:	792—12
முன் மொத்தம்:	707—40
தொகு மொத்தம்:	1499—52

தென்மொழி அன்பர்களுக்கு...!

தென்மொழி முதல் சுவடியின் பல ஓலைகள் வேண்டி அன்பர்களிடமிருந்து மடல்கள் வருகின்றன, இக்கால் அலுவலகத்தில் கீழ்க்கண்ட ஓலைகளே கைவயம் உள்ளன. தனிப்படிகள் வேண்டுவார் படி ஒன்றுக்கு 75 காசுமேனி அஞ்சல் தலையோ பணவிடையோ விடுத்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்:

கையிருப்புப் படிகள்: சுவடி-1 ஓலை 1,2,3,5,6,7,9,10,12

— அமைச்சர்: